# செயல்திறன் ஆண்டறிக்கை
# 2012

வெளிவிவகார அமைச்சு
ஸ்ரீலங்கா

# பொருளடக்கம்


| | |
|---|---|
| | பக்க இல. |
| பணிநோக்குக் கூற்று | i |
| முன்னுரை | v - viii |
| பிரிவுகளுக்கான முன்னேற்ற அறிக்கைகள் | |
| தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு | 1 - 18 |
| கிழக்காசியா மற்றும் பசுபிக் பிரிவு | 19 - 30 |
| மத்திய கிழக்குப் பிரிவு | 31 - 40 |
| ஆபிரிக்கப் பிரிவு | 41 - 52 |
| ஐரோப்பா,CIS மற்றும் அமெரிக்க நாடுகள் பிரிவு | 53 - 64 |
| ஐ.நா. மற்றும் பன்னாட்டு விவகாரங்களுக்கான பிரிவு, மனித உரிமைகள் மற்றும் மாநாட்டுப் பிரிவு | 65 - 72 |
| பொருளாதார விவகாரங்கள் பிரிவு | 73 - 78 |
| நெறிமுறைப் பிரிவு | 79 - 88 |
| காவல்தூதர் விவகாரப் பிரிவு | 89 - 92 |
| பொதுத் தொடர்பாடல் பிரிவு | 93 - 98 |
| சட்டப் பிரிவு | 99 - 112 |
| கடல் கடந்த நிர்வாகப் பிரிவு | 113 - 118 |
| பொதுநிர்வாகப் பிரிவு | 119 - 122 |
| நிதிப் பிரிவு | 123 - 126 |
| வெளிநாட்டு இராஜதந்திரத் தூதுக்குழுக்கள் வலையமைப்பு | 127 |
| அமைச்சின் நிறுவன விளக்க வரைபடம் | 129 |

# பணிநோக்கு

''சர்வதேச ரீதியில், இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைக்கு இணக்கமான முறையில், இலங்கையின் தேசிய நலன்களை முன்னேற்றுவதும் முன்மதிப்பீடு செய்வதும், பாதுகாப்பதும், அத்தோடு இலங்கையின் தேசிய நலன்களுக்கு உகந்தவகையில் சர்வதேச அபிவிருத்திகளை முகாமைத்துவம் செய்வது குறித்து அரசாங்கத்துக்கு மதியுரை வழங்குவதும்''

# வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் விடயங்களும், கருமங்களும்

''வெளிநாட்டலுவல்கள் சம்பந்தமான அரசியல் திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துதல் இலங்கையை வெளிநாடுகளில் பிரதிநிதித்துவம் செய்தல் சர்வதேச உடன்படிக்கைகளும், பொருத்தனைகளும் இலங்கையில் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதித்துவம் வெளிநாட்டில் பிரசித்தப்படுத்தல் இராஜதந்திரப் பாதிப்பின்மைகள், சலுகைகள் மற்றும் காவல் தூதுவர் கருமப்பாடுகள்''

“உண்மையான நட்புறவுடன் வருகை தருபவர்களிடம் இருந்து மிகவும் சிறந்தவற்றை கற்றுக்கொள்ளும் அதே வேளையில், எங்களுடைய பண்பாடுகளில் உள்ள சிறந்தவற்றை, எங்கள் முன்னேற்றங்களில் உள்வாங்கப்பட வேண்டும்”.

(2012 ஒக்டோபர் குவைட்டில் 11ஆவது ஆசிய ஒத்துழைப்பு கருத்துப்பரிமாற்றம் உச்சிமாநாடு)

## முகவுரை

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது, ஒரு தொகுதி அரசியல் இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு உருவமைக்கப்பட்டுள்ளது. இவை தேசிய நலன்களான, தேசிய பாதுகாப்பு, கருத்தியல் கோட்பாடுகள், பொருளாதார மேம்பாடு போன்றவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே வெளிநாட்டுக் கொள்கையானது முற்றுமுழுதான அரச வரைச்சட்டத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாக திகழ்கிறது.

மேதகு ஜனாதிபதியின் "மகிந்த சிந்தனை: எதிர்காலத்திற்கான தொலைநோக்கு" கொள்கையின் படி இலங்கையானது அணிசாரா மற்றும், சுதந்திரமானதும் முன்னேற்றமானதுமான வெளிநாட்டுக் கொள்கையினை பின்பற்றுகின்றது.

கௌரவ வெளிநாட்டமைச்சரின் வழிகாட்டல்கள் மகிந்த சிந்தனையை அமுல்படுத்துவதற்கு, அமைச்சுக்கு கிட்டுகிறது. இலங்கையின் முக்கியமான தேசிய நலன்களைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும் அமைச்சானது உலகம் முழுவதிலும் உள்ள 60 வெளிநாட்டு தூதரகங்களின் வலையமைப்பினூடாக அயராது செயற்படுகின்றது.

2012ம் ஆண்டானது பல்வேறு மட்டங்களில் நடந்த இருதரப்பு வருகைகளில் கணிசமான அதிகரிப்பைக் கண்டது. இலங்கைக்கு இந்த இரு தரப்பு வருகைகளின் அடுக்கு நிகழ்வானது, ஏனைய நாடுகளுடன் இலங்கை பேணிவருகின்ற உணர்வு பூர்வமான தொடர்புகளைப் பிரதிபலிக்கின்றது. ஒவ்வொரு வருகையின் போதும் பல உடன்படிக்கைகளும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் முற்றுப் பெற்றன. இவை நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பு பலம் பெறுவதற்கு வழி வகுத்தன.

மேதகு ஜனாதிபதியானவர் பல இரு தரப்பு விஜயங்களையும், அரச விஜயங்களையும், பாக்கிஸ்தான், சிங்கப்பூர், கொரியக்குடியரசு, கட்டார், கியூபா,ஈரான், இந்தியா போன்ற நாடுகளுக்கு மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் ஆழமான ஈடுபாட்டினை ஏனைய நாடுகளுடன் ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த விஜயங்கள் அரிய சந்தர்ப்பங்களை அமைத்துத் தந்தன.

அபிவிருத்தி வலுவூட்டல் பற்றிய பிரேசிலில் நடந்த ஐ.நா கூட்டத்தொடரான ரியே + 20 யில் ஜனாதிபதி பங்கேற்றார். மேலும் கட்டாரில் நடந்த டோஹா கருத்தரங்கு, டுபாயில் நடந்த உலக சக்தி பற்றிய கருத்தரங்குகளிலும் பங்கேற்று காலநிலைமாற்றம் மற்றும் சக்தி பாதுகாப்பு பற்றிய இலங்கையின் கொள்கை தொடர்பாக விவரித்தார். குவைட் நாட்டில் நடந்த முதலாவது ஆசிய ஒத்துழைப்புக்கான உறையாடல் மாநாட்டில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்துகொண்டமையானது ஆசிய நகரங்களின் விழுமியங்களைப் பகிர்ந்து கொள்வதனை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய ஒத்துழைப்புக்கு இலங்கையின் பங்களிப்பை பலப்படுத்துவதாக அமைந்தது.

வெளிநாட்டுக் கொள்கையின் அதிகார எல்லைக்கு மேல் அதிகரித்து வரும் சவால்களை எதிர்கொள்ளும் பொருட்டு வெளிவிவகார அமைச்சானது 15 ஆபிரிக்க கண்ட நாடுகளுடனும் 13 மத்திய இலத்தீன் அமெரிக்க மற்றும் கரீபியன் பிராந்திய நாடுகளுடனும் ராஜ தந்திர தொடர்புகளை நிறுவி, ராஜ தந்திர வலையமைப்பினை விரிவுபடுத்தியுள்ளது.

பக்தார் நகரிலுள்ள தூதுவராலயத்தை மீண்டும் திறப்பதற்கு அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அன்காராவிலும் குவான்கோவிலும் புதிய தூதுவராலயங்களை அமைத்துள்ளது.

பஹ்ரேய்னிலும் நைஜீரியாவிலும் புதிய தூதராலயங்களை திறப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெறுகின்றன. அதே பொல அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ன் நகரில் ஒரு குடிகாவலர் நாயகம் பணிமனையொன்றைத் திறப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 2012ம் ஆண்டு இறுதிக்குள் திறந்து வைக்கப்படும்.

எமது பிராந்தியத்தை மேலும் வலுப்படுத்தவும் திடமாக்கவும் வேண்டி அமைச்சு புதிய பதிவேடகக் கட்டிடங்களை சென்னையிலும் கன்பராவிலும் அமைத்துள்ளது. நியுயோர்க், வரிங்டன் DL போன்ற நகரங்களில் புதிய பதிவேடகக் கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

மனித வளத்தின் தரத்தையும் திறமையையும் அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை அமைச்சு இனங்கண்டுள்ளத. இது இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் இலக்குகளை செயலாற்றலுடன் வழங்குவதற்கான தகுதிகள் அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது.

அமைச்சின் மனித வளத்தினை மேலும் வலுப்பெறச் செய்வதற்கு 14 புதிய அதிகாரிகள் இலங்கையில் வெளிநாட்டுச் சேவைக்காக ஜனவரி மாதம் 2012ல் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இலங்கை வெளிநாட்டுச் சேவையின் தரம் 111 ற்கான புதிய தொகுதி அதிகாரிகளை சேர்த்துக்கொள்வதற்கான பரீட்சையானது 2012ம் ஆண்டு மே – ஜீலை மாதங்களில் நடைபெற்றது. செயற்திறனை கட்டியெழுப்பும் பொருட்டு முன்னொரு போதும் இல்லாத வகையில் 17 அதிகாரிகள் முதுநிலை பட்டதாரிகள் உள்ளடங்கலாக, வெளிநாட்டு பயிற்சி நிகழ்வுகளில் பங்கேற்க அனுப்பிவைக்கப்பட்டனர்.

துரித நவீனமயமாக்கலுக்கு உட்பட்டிருக்கும் இலங்கையின் கருத்துருவை மேம்படுத்துவதற்காக வெளிவிவகார அமைச்சின் தற்போது அமைந்துள்ள குடியரசுக் கட்டிடத்திலிருந்து மாற்றி நவீனமானதும் அதிக இடவசதியும் கொண்ட ஒரு கட்டிடத்திற்கு கொண்டு செல்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

குடிகாவலர் விவகாரப்பிரிவானது அமைச்சின் பொதுமக்கள் நலன் சார்ந்த ஒரு பிரிவாகும். இதனை மேலும் ஒழுங்குபடுத்துவதன் மூலம் வெளிநாட்டில் வதியும், பிரயாணம் மேற்கொள்ளும், வணிகத்தில் ஈடுபட்டிருக்கும் பணிபுரியும் இலங்கையர்களுக்கான சேவை நலன்களை அரச மக்கள் சார் கொள்கைகளுக்கிசைவாக வழங்குவதற்கு ஏதுவாயிருககும்

இப் பிரிவானது நாளொன்றுக்கு காலை 6 மணி முதல் குடிகாவலர் விவகாரச் சேவைகளை சுமார் 800 – 1000 பேர்களுக்கு வழங்குகின்றது. இது ஆவணங்களை உறுதி செய்து கொடுப்பதன் மூலம் வருமானமாக ரூபா 127,364,375.00 ஐ வருமானமாக உழைத்துள்ளது. மேலும் இறந்தவர்களின் உடன் உறவினர்களுக்கு ரூபா 208,103,971.37 மில்லியனை கடன் நட்ட ஈடாக பெற்றுக் கொடுக்க வசதி செய்துள்ளதுடன் 316 இலங்கையர்களின் பூதவுடல்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்கும் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

பொது தொடர்பாடல் பிரிவானது அரசுக்கிடையிலும் இலங்கையின் கருத்துருவை வெளிநாடுகளில் மேம்படுத்தும் மற்றும் இலங்கை பற்றிய தகவல்களை பரப்புரை செய்யும் வெளிவாரி காரண கர்த்தாக்களுக்கு இடையிலும் செயற்படும் அமைச்சின் குவிப் பொருள் இலக்காகும். இப்பிரிவானது இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் LTTE யின் எஞ்சியுள்ளவர்களினாலும் அதன் முன்னணி அமைப்புக்களினாலும் முன்னெடுக்கப்படும் பரப்புரைகளை எதிர்த்து பிரச்சாரங்களை மேற்கொள்கிறது.

போரிற்கு பின்பான அபிவிருத்திகளின் போது அதன் பின்னணியில் இலங்கை பற்றிய தகவல்களையும் குற்றச்சாட்டுக்களையும் சர்வதேச சமூகத்திற்கு வழங்கும் பொருட்டு தந்திரோபாயங்களை வகுப்பது அமைச்சின் பொறுப்பாக உள்ளது. இது ஐ.நா விற்கான கிரமமான அறிக்கை சமர்ப்பிப்பதிலும் பல்தரப்பு முகவர் நிலையங்களுக்கு அத்தகைய அறிக்கைகளை சமர்ப்பிப்பதிலும் பங்காற்றுகின்றது.

இந்த வகையில் அசைச்சின் ஐ.நா, மனித உரிமைகள், பல்தரப்பு முகவர் அலுவல்கள் பிரிவானது முதன்மை நிறுவனங்களுக்கும், ஆர்வலர் குழுக்களுக்கான ஜெனீவாவின் மனித உரிமைகள் கவுன்சில், ஐ.நாடுகளின் உறுப்புரிமை நாடுகள், சர்வதேச ஊடகங்கள் போன்றவற்றிற்கு தகவல்களை சேகரித்து வழங்குவதையும் பொறுப்பாக கொண்டிருக்கிறது.

ஆயுதப் போராட்டம் மற்றும் சிறுவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் இரண்டாம் பின் இணைப்பிலுள்ள 1612 ஆவது தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரால் நீக்குவதற்கான ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி இப்பிரிவு பேசியிருக்கின்றது.

மேலும் இலங்கையில் நடைபெற்ற பல்வேறுபட்ட மாநாடுகள் மற்றும் சந்திப்புக்களுடன் தொடர்பான விஜயங்களுக்கு அண்ணளவாக சுமார் 1800 வெளிநாட்டவர்களுக்கான விசாக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு உதவியது.

அமைச்சானது அதன் தூதரகங்களினூடாக பாரதூரமானதொரு பங்களிப்பினை, இலங்கையின் கலாச்சார விழுமியங்களையும் வெளிநாட்டு வர்த்தகம், முதலீடு, சுற்றுலா போன்றவற்றை மேம்படுத்துவதற்கு,

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடனும், முதன்மை அரச முகவர்களான ஏற்றுமதி அபிவிருத்தி சபை, முதலீட்டுச் சபை இலங்கை சுற்றுலா மேம்பாட்டுச் சபை, இலங்கைதேயிலைச் சபை ஆகியவற்றடன் ஒருங்கிணைந்து வழங்குகிறது. மேலும் இலங்கையின் உற்பத்தி பொருட்களுக்கும் சேவைகளுக்கும், வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் சுற்றுலாவிற்குமான புதிய சந்தர்ப்பங்பகளை இனங்கண்டு செய்வதற்கு தனியார் நிறுவனங்கள் பங்கு வகிக்கும் வர்த்தக சபையுடனும் சேர்ந்து செயற்படுகிறது.

இலங்கையின் வெளிநாட்டு அமைச்சரின் பல வெளிநாட்டு விஜயங்கள் மூலம் இலங்கை அதன் ராஜதந்திர எல்லையை குறிப்பிடத்தக்க அளவு விஸ்தரித்துள்ளது. அவர் விஜயம் செய்த நாடுகளில் சிங்கப்பூர் ,மலேசியா, மொரிட்டானியா, இந்தியா பாக்கிஸ்தான் மற்றும் பல ஆபிரிக்க இலதீன் அமெரிக்க ஐரோப்பிய கண்ட நாடுகள் அடங்கும்.

இந் நாடுகளுக்கான விஜயத்தின் போத அமைச்சர் பலன் மிக்க பல, பேச்சுவார்த்தைகளை பிரதிநிதிகளுடன் நாடாத்தி போரிற்கு பின்னரான இலங்கையின் பொருளாதாரத்தையும் செயற்திட்டத்தினையும் விரிவுபட விளக்கினார். இதன் மூலம் துரித மேம்படுத்தப்பட்ட பொருளாதார அபிவிருத்தி ஒன்று கசிந்து படிப்படியாக ஏற்படுமிடத்து போரின் வடுக்களை குணப்படுத்தி ஒற்றுமைகளையும் நம்பிக்கைகளையும் இனங்கள் மற்றும் வெளிநாட்டில் வாழும் சுதேசிகள் மத்தியிலும் ஏற்படுத்த வழி வகுத்தார்.

இவ்வாறான விஜயங்களின் போது கௌரவ .அமைச்சர் பல தரப்பு மற்றும் புத்திஜீவிகளது அமைப்புக்களுடன் அரசின் புனரமைப்பு, புனர் வாழ்வு, நல்லுறவு பற்றி பேச அச்சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொண்டார்.

அமைச்சானது 1976ம் ஆண்டு நடைபெற்று அணிசாரா மாநாட்டுக்கு பின் இலங்கை அரசினால் ஏற்பாடு செய்யப்படவுள்ள 2013 ஆண்டின் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாடு (CHOGM) க்கான சகல ஏற்பாடுகளையும் முனைப்புடன் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றது.

அமைச்சு இலங்கையின் நலன்களை வெளிநாடுகளில் மேம்படச் செய்வதை தனது தலையாய பொறுப்பாகக் கொண்டுள்ளது. இது இலங்கையின் அணிசாராக் கொள்கையை அடித்தளமாகக் கொண்ட “யாவரிடமும் தோழமை எவரிடமும் பகைமையில்லை” என்ற வழகாட்டலின் பேரில் தொடர்ந்து செல்லும்.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

கொழும்பு

31.05.2013

# தெற்காசியா மற்றும் சார்க் பிரிவு

## தெற்காசியப் பிரிவு

| | |
|---|---|
| உள்ளடங்கும் ஆட்புலங்கள் | : ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் |
| வதிவுத் தூதுவரலாயங்களின் எண்ணிக்கை | : 05 (பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம்,பாகிஸ்தான்) |
| ஒருங்கிசைந்த ராஜதூதரகங்களது எண்ணிக்கை | : 02 (புதுடெல்லியிலிருந்து ஆப்கானிஸ்தான்மற்றும் பூட்டான்) |
| பல்தரப்பு அமைப்புககள் எண்ணிக்கை | : 01 (சார்க் (SAARC) |

## தெற்காசியப் பிரிவின் பிரதான பணி விடயப்பரப்புகள் பரந்த வகையில் பின்வருமாறு வகைப்பிரிவுபடுத்தப்படலாம் :

இப்பிரிவு, இயைபுள்ள இலங்கைத் தூதுக்குழுக்களுடன் கூட்டிணைப்பாக, இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைக்கு பிரதான அரசியல் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் சம்பந்தமான தாற்பரியங்கள் குறித்த கணிப்பீட்டை வழங்கும் வகையில் அவற்றைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்புச் செய்கின்றது.

அது கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் சகல தெற்காசியத் தூதுக்குழுக்களுடனும் ஓர் ஆரோக்கியமான, பயனுறுதிமிக்க, செயலாற்றும் உறவைத் தொடர்ந்தும் பேணிவருகின்றது.

- அதிமேதகு ஜனாதிபதி. கௌரவ பிரதம மந்திரி, கௌரவ வெளிநாட்டமைச்சர். ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ விஜயங்களைக் கூட்டிணைப்புச் செய்தல்.

- தெற்காசிய நாடுகளிலிருந்து இலங்கைக்கு வரும் வெளிநாட்டின் கௌரவத்துக்குரிய சிறப்புப் பிரதிநிதிகளின் விஜயங்களை ஏற்பாடு செய்தல்.

- அரசியல், கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அபிவிருத்தி குறித்த பின்தொடரல் மற்றும் கூட்டிணைப்பு நடவடிக்கைகள்.

- அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப, வர்த்தக முதலீடு, கல்வி மற்றும் கலாசார உடன்படிக்கைகளை முடிவுநிலைப்படுத்துவதில் கூட்டிணைப்பில் ஈடுபடுதல்.

- வெளிநாட்டிலுள்ள தூதுக்குழுக்களிடமிருந்து கிடைக்கும் மாதாந்த அறிக்கைகளைச் செய்முறைப்படுத்துவதும், அதன் தகவல்களை இயைபுள்ள அதிகாரசபைகளுக்குப் பரவலாக வழங்குவதும்.

- பிராந்தியங்களுக்குரிய விஜயங்கள், மாநாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல்களுக்கான சுருக்க விபரக் குறிப்புகள், உரைகள் மற்றும் பேச்சுக் குறிப்புக்களைத் தயாரித்தல்.

- FTA சம்பந்தமான விடயங்களைக் கூட்டிணைப்புச் செய்தல்.
- தெற்காசிய நாடுகளுடன் கைதிகளை இடம் மாற்றுவது சம்பந்தமான விடயங்களைக் கூட்டிணைப்புச் செய்தல்.

# இருதரப்பு உறவுகள்

**ஆப்கானிஸ்தான்**

உத்தியோகபூர்வ விஜயங்கள்

- ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் கௌரவ வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஸல்மி ரஸால் அவர்களது விஜயம் 2012 டிசம்பர் 18 – 21
- கௌரவ வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஸாமில் ரஸால் ஆப்கானிஸ்தான் வதிவில்லாத் தூதுவர் கௌரவத்துக்குரிய திரு. ஷாஹிதா எம் அப்தலி முதல் அரசியல் பிரிவின் பணிப்பாளர் திரு. அஸீஸுத்தீன் அஹ்மத்ஸாதா ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பேச்சாளர் ஸஈத் அப்துல் பஷீர் சதீத் ஆகியோரை உள்ளடக்கிய தூது குழு இவ்விஜயமானது ஆப்கானிய வெளிவிவகார அமைச்சர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது இருதரப்பு விஜயமாகும். இருதரப்புக்குமிடையில் நடைபெற்ற உரையாடல்களின் போது தொழில் வல்லுனர்களையும் திறன்மிக்க தொழிலாளர்களையும் ஆப்கானிஸ்தானுக்கு வழங்குவதாக இலங்கை முன்மொழிந்தது.
- பொருளாதார கல்வி விஞ்ஞான மன்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான இருதரப்பு உடன்படிக்கை மற்றும் இரு நாடுகளுக்கு காலச்சார ஒத்துழைப்புக்களின் புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகிய இரண்டு இருதரப்பு உடன்படிக்கைகள் மீது அமைச்சர்களால் கைச்சாத்திடப்பட்டது.
- வர்த்தக விரிவாக்கத்துக்காக புதிய வழிவகைகளைக் கண்டுபிடிக்கும் நோக்குடன் வர்த்தக கைத்தொழில் அமைச்சு மற்றம் ஆப்கானிய வர்த்தகச் சபையை பிரதிநிதித்துவப்படுத்திய ஒரு தூதுக்குழுவை அனுப்புவதற்கு ஆப்கானிய வெளிவிவகார அமைச்சர் உடன்பட்டார்கள். அதிமேன்மைக்குரிய இலங்கை ஜனாதிபதி அவர்கள் ஆப்கானிஸ்தானைத் தரிசிக்க வேண்டுமென்று மேன்மைக்குரிய ஆப்கானிய ஜனாதிபதி ஹமீட் சுர்ஸாய் அவர்களது அழைப்பிதழையும் வழங்கி வைத்தார்கள்.

## பங்களாதேஷ்

### உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்நோக்கி) :

- பங்களாதேஷின் சட்ட, நீதி மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் பாராளுமன்ற நிலையியல் குழுவின் தவிசாளரும், அங்கத்தவரும் 2012, ஏப்ரில் 07 முதல் 10 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.

### உத்தியோகபூர்வ விஜயங்கள் (நாட்டுக்கு வெளியில்) :

- வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் டாக்காவில் 2012, ஆகஸ்ட் 5 – 6 திகதிகளில் பிரதம மந்திரி ஹஸீனாவினால் கூட்டப்பட்ட ''மக்களின் வலுவளிப்பும், அபிவிருத்தியும்'' என்னும் தொனிப்பொருளிலான சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பங்களாதேஷுக்கு விஜயம் செய்தார்.
- 2012, ஜுலை 08 – 12 வரை டாக்காவில் இடம்பெற்ற ''பால்நிலைப் பிரதிவிளைவு காண்பிக்கும் ஆட்சி முறை'' என்னும் தொனிப்பொருளிலான ''2012 தெற்காசிய பாராளுமன்றப் பெண் பிரதிநிதிகளின் மாநாட்டில்'' பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கௌரவ சுமேதா ஜயசேன ஓர் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழுவை வழிநடத்தினார்.
- நீர் மூலவளங்கள் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும் இலங்கைப் பாராளுமன்றத்தின் அரசாங்கப் பிரதம கொறடாவுமாகிய கௌரவ தினேஷ் குணவர்தன 2012, ஜுன் 14 – 17 வரை இடம்பெற்ற ''மழைநீர் சேகரிப்பு'' மாநாட்டில் கலந்துகொள்வதற்காக டாக்காவுக்கு விஜயம் செய்தார். அமைச்சர் கௌரவ பிரதம மந்திரி ஷேக் ஹஸீனா மற்றும் அவரின் எதிர்நேர் அலுவலர்களைச் சந்திக்கும் மரியாதை விஜயங்களையும் மேற்கொண்டார்.
- தேசிய மரபுரிமைகள் அமைச்சர் கௌரவ கலாநிதி ஜகத் பாலசூரிய 2012, மே 09 – 11 வரை இடம்பெற்ற ''கலாசாரப் பல்வகைமை சம்பந்தமான ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் அரங்கில்'' கலந்துகொள்வதற்காக பங்களாதேஷுக்கு விஜயம் செய்தார்.
- கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் கௌரவ றிஷாத் பதியுதீன் 2012, மார்ச் 07 – 08 இல் இடம்பெற்ற ''இலங்கை – பங்களாதேஷ் இணைந்த பொருளாதார ஆணைக்குழுவின் 4வது கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக இலங்கைத் தூதுக்குழுவிற்குத் தலைமை வகித்து பங்களாதேஷுக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின்போது கௌரவ அமைச்சர், பிரதமர் அதிமேதகு ஷேக் ஹஸீனாவையும், பங்களாதேஷ் வெளிநாட்டமைச்சர் திப்புமோனி அவர்களையும் 2012, மார்ச் 08 ஆந் திகதி சந்தித்தார்.
- பங்களாதேஷ் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் இலங்கை இராணுவக் கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய VSV, VSP, NDU, PSC 2012, ஜனவரி 10 – 16 வரை பங்களாதேஷுக்கு விஜயம் செய்தார்.

## பூட்டான்

### உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்நோக்கி) :

- பூட்டான் பிரதம நீதியரசர் கௌரவ லியொன்பொசொனம் டொப்கை சிறுவர்களுக்கெதிரான வன்செயல் குறித்த ஐ.நா.ஆய்வு சம்பந்தமான தெற்காசியப் பிராந்தியப் பின்தொடரல் கலந்தாலோசனை ஆரம்ப அமர்வில், 2012, மே 28 ஆந் திகதி கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் ஒரு விசேட விருந்தினராகக் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

## இந்தியா

### உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்நோக்கி) :

- இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ எஸ்.எம்.கிருஷ்ணா 2012, ஜனவரி 05 ஆந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார்.
- இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு அப்துல் கலாம் 2012, ஜனவரி 22 –24 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர், தேசிய செயல்திட்ட ஆரம்ப விழாவிலும், 2012 ஆம் ஆண்டை ஒரு மும்மொழி இலங்கைக்கான வருடமாகப் பிரகடனம் செய்யும் நிகழ்விலும் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.
- இந்திய லோக்சபா எதிர்க்கட்சித் தலைவி கௌரவ சுஷ்மா சுவராஜ் தலைமையிலான ஒரு பாராளுமன்றத் தூதுக்குழு 2012, ஏப்ரில் 17 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தது. இப்பேராளர் குழுவில் இந்தியப் பாராளுமன்றத்திலுள்ள சகல கட்சிகளினதும் அங்கத்தவர்கள் அடங்கியிருந்தனர். இத்தூதுக்குழு ரயில்வேக் கருத்திட்டங்கள் மற்றும் வீடமைப்புக்கருத்திட்டங்கள் போன்ற இந்திய உதவிக் கருத்திட்டங்களைச் சென்று பார்வையிட்டது.
- துப்புரவு மற்றும் குடிநீர் விநியோக அமைச்சர் கௌரவ ஜெயராம் ரமேஷ் 2012, ஜுலை 11 – 13 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் வறுமைக்குறைப்பு சம்பந்தமான ஒரு கருத்தரங்கையும் நடாத்தினார். இலங்கையின் LKIIRSSஅமைப்புக்கும் இந்தியாவின் சுளுளு அமைப்புக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.
- இந்திய வணிக, கைத்தொழில் மற்றும் புடவைத்தொழில் அமைச்சர் கௌரவ ஆனந்த் ஷர்மா 2012, ஆகஸ்ட் 2-5 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.
- கலாசார, வீடமைப்பு மற்றும் நகர்ப்புற வறுமைக்குறைப்பு அமைச்சர் கௌரவ குமாரி செல்ஜா இலங்கைக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின்போது அவர் இந்திய உதவிக் கருத்திட்டங்களுக்கு விஜயம் செய்து மதிப்பீடுகளை மேற்கொண்டார்.

- தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் 2012, ஜுன் 29 ஆந் திகதி இலங்கைக்கு விஜயம் செய்தார். அவர் அதிமேதகு ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயா ராஜபக்ஷ ஆகியோருடனும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.
- 2012, செப்டம்பர் 11ஆந் திகதி 25 உத்தியோகத்தர்கள் அடங்கிய இந்திய இராணுவத் தூதுக்குழுவொன்று வெளிநாட்டமைச்சுக்கு விஜயம் செய்து, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது.
- CII இந்தியா கைத்தொழில்களின் கூட்டவையின் CEOS வின் அலுவலகத்தின் இந்திய தூதுகுழுவினரின் 2012.18.20 நொவம்பர் CII தலைவர் திரு. அடி கொட்ரெஜ் தலைமையில் பதின்நான்கு அங்கத்தவரைக் கொண்ட தூதுகுழுவினர். இந்திய தூதுகுழுவினர் அதிமேதகு சனாதிபதி மற்றும் கௌரவ வெளிவிவகார அமைச்சரை அவர்களையும் சந்தித்தனர்.

- 2012 நொவம்பர், 18 தொடக்கம் 20 ஆம் திகதி வரைக்கும் CII இந்தியன் தொழிற்துறை கூட்டவையின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் 14 அங்கத்தவர்கள் கொண்ட தூதுகுழுவினர் இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்டனர். இந்தியன் தொழிற்துறை கூட்டவையின் தலைவர் திரு. அடி கொட்ரேஜ் அவர்கள் தூதுகுழுவிற்கு தலைமை தாங்கினார்.

- இந்திய தூதுகுழுவினர் அதிமேதகு சனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் அவர்களையும் சந்தித்தார்கள்.

## உத்தியோகபூர்வ விஜயங்கள் (இலங்கைக்கு வெளியே) :

- அதிமேதகு ஜனாதிபதி, மத்திய பிரதேச முதலமைச்சர் ஸ்ரீ சிவராஜ் சௌஹார் அவர்களின் அழைப்பை ஏற்று, மத்திய பிரதேசத்திலுள்ள சாஞ்சிக்கு விஜயம் மேற்கொண்டார். இது 2012, செப்டம்பர் 21ஆந் திகதி சாஞ்சி பௌத்த மற்றும் இந்துக் கல்விகளுக்கான பல்கலைக்கழகத்தின் அடிக்கல் நாட்டுவதற்காகும். இந்த விஜயத்தின்போது அதிமேதகு ஜனாதிபதி இந்திய ஜனாதிபதி ஸ்ரீ பிரணாப் முகர்ஜியையும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்துப் பேசினார்.

- வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் திரு.ஐ.அன்சாரின் தலைமையிலான வெளிநாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் சக்தி – வலு அமைச்சின் உத்தியோகத்தர்கள் அடங்கிய உத்தியோகபூர்வ தூதுக்குழுவொன்று புதுடெல்லிக்கு விஜயம் செய்தது. இது அணுக்கசிவு விபத்தொன்று ஏற்படும் பட்சத்தில் அது குறித்து அறிவிக்கும் வழிமுறையமைப்பொன்று குறித்துக் கலந்துரையாடுவதற்கும், அனைத்துமடங்கும் அணு ஆராய்ச்சி ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்று குறித்து 2012, அக்டோபர் 12 ஆந் திகதி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்குமாகும்.

- 2012 நொவம்பர் 21-27 வரைக்கும் மேல் மாகாணத்தின் கௌரவ சுகாதார மற்றும் சுஷேிய வைத்திய அமைச்சர் உட்பட வேறு இரு உத்தியோகத்தர்கள் இந்தியாவிற்கு விஜயத்தினை மேற்கொண்டனர்.

- 2012, நொவம்பர் 21 தொடக்கம் 27 ஆம் திகதி வரைக்கும் மேல் மாகாணத்தின் கௌரவ சுகாதார மற்றும் சுதேசிய மருத்துவத்துறை அமைச்சர் மற்றும் இரண்டு அதிகாரிகள் இந்தியாவிற்கு விஜயத்தினை மேற்கொண்டனர். மூன்று வருடங்கள் காலப்பகுதியில் முகாமையாளர்களினதும் களுத்துறை மாவட்டத்தின் வட்டப்புற மருத்துவசாலைகளில் துணைமருத்துவ அதிகாரிகளினதும் ஆக்கத்திறன்களை கட்டியெழுப்புவதற்கான ஒரு கருத்திட்டத்தினை மேல் மாகாண சுகாதார அமைச்சானது முன்னேடுப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

- பூனே, இந்தியா ஜாம் கெட் மற்றும் டீனநாத் மங்கேஷ்கார் மருத்துவமனையின் விசாலமான கிராமிய சுகாதார கருத்திட்டத்துடன் இணைந்து செயலாற்றுவதன் பிரகாரம் டெங்கு பற்றிய பயிற்சிகள் மற்றும் கல்வி அவசரகால மருத்துவ பராமரிப்பு முதல் முன்னெடுப்பாக உடற்பயிற்சியுடன் கூடிய வைத்திய சிகிச்சை வழங்கப்படும்.

- சுகாதார அமைச்சு (மேல்மாகாணம்) முகாமையாளர்களதும் வைத்திய உத்தியோகத்தர்களதும் திறன் விருத்திக்கான ஒரு திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடுகிறது.

## மாலைதீவு

உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்நோக்கி) :

- மாலைதீவு வெளிநாட்டுச் செயலாளர் திரு.மொகமட் நசீர் 2012, ஜனவரி 25 ஆந் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.
- மாலைதீவு வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அதிமேதகு ஆள.துன்யா மன்மூன் 2012, ஏப்ரல் 19-22 வரை இலங்கைக்கு விஜயம் செய்தார்.
- மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி அதிமேதகு திரு.மஹ்மூன் அப்துல் கையூம் 2012, ஏப்ரில் 19 –22 வரைக்கும் இலங்கைக்கு விஜயம் செய்தார்.
- மாலைதீவின் பொலீஸ் ஆணையாளர் திரு.அப்துல்லா ரியாஸ் ஒரு தூதுக்குழுவுடன் 2012, மே 10 – 15 வரைக்கும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.
- மாலைதீவின் ஜனாதிபதி அதிமேதகு கலாநிதி மொகமட் வாஹிட் 2012, ஆகஸ்ட் 23 – 25 தினங்களில் இலங்கைக்கான ஓர் அரச விஜயத்தை மேற்கொண்டார். இந்த விஜயத்தின்போது அவர் அதிமேதகு ஜனாதிபதி அவர்களை உத்தியோகபூர்வமாகச் சந்தித்து உரையாடியதோடு, இலங்கை வர்த்தகப் பேரவை ஒழுங்குசெய்த இலங்கை – மாலைதீவு இருதரப்பு வியாபாரத் தொழில்மன்றத்திலும் உரையாற்றினார்.
- இலங்கையில் திவேகி மொழி கல்விக்கழகத்தில் இருந்து உத்தியோகத்தர்கள் குழுவொன்று கல்வியற் சுற்றுலாவை 2012 நொவம்பர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரைக்கும் மேற்கொண்டனர்.
- மாலைத்தீவு உத்தியோகத்தர்களும் இது ஒரு வரலாற்று ஆராய்ச்சி கல்வியல் சுற்றுலாவாகும்.

**உத்தியோகபூர்வ விஜயங்கள் (இலங்கைக்கு வெளியே) : 11**

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் 2012, ஏப்ரில் 5 – 8 ஆகிய தினங்களில் மாலைதீவுக்கான ஓர் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

பாகிஸ்தான்

உத்தியோகபூர்வ விஜயங்கள் (இலங்கைக்கு வெளியே) :

- 2012, ஏப்ரில் 1 – 6 வரை இலங்கை இராணுவத்தின் கட்டளைத் தளபதி பாகிஸ்தானுக்கு விஜயம்.
- 2012, மார்ச் 19 – 21 வரை கால்நடை மற்றும் கிராமிய ஜனசமூக அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகன் தொண்டமான் பாகிஸ்தானுக்கு விஜயம்.
- 2012, மார்ச் 11 – 16 வரை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கௌரவ சமல் ராஜபக்ஷ ஒரு தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கி பாகிஸ்தானுக்கு விஜயம்.
- 2012, பெப்ரவரி 10 – 12 வரை அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பாகிஸ்தானுக்கு அரச விஜயம். இந்த விஜயத்தின்போது அதிமேதகு ஜனாதிபதி அசீப் அலி சர்தாரி மற்றும் பிரதமர் சாயிப் யூசுப் ரஸாகிலானி என்போரைச் சந்தித்து உரையாடினார். ஊடகம், வாழ்க்கைத்தொழில் கல்வி மற்றும் 200 மில்லியன் US $ கடனுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.
- 2012 நொவம்பர் 04-06 ஆம் திகதி வரைக்கும் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்கு ஆசியா கழகத்தின் சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் 6 ஆவது மாநாடு இஸ்லாமாபாத் பாகிஸ்தான். இக் கூட்டத்திற்கு பிரதி சபாநாயகர் கௌரவ சன்டிமா வீரக்கொடி (பா.உ) தலைமை தாங்கினார்.

உத்தியோகபூர்வ விஜயங்கள் (உள்நோக்கி) :

- 2012, ஏப்ரில் 18 இல், 18 உத்தியோகத்தர்கள் அடங்கிய பாகிஸ்தான் இராணுவத் தூதுக்குழுவொன்று வெளிநாட்டமைச்சுக்கு விஜயம் செய்து வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது.

## <u>கலாசார உறவுகள்</u>

நேபாளம்

- பாராளுமன்ற உறுப்பினரும், சபாநாயகருமான கௌரவ ராஜபக்ஷ உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் குழுவொன்று 2012, மே 05 – 07 வரை புத்தபகவானின் 2556வது ஜன்ம வருடத்தையும், லும்பினி தினத்தையும் நினைவுகூருவதற்கு லும்பினிக்கு விஜயம் செய்தனர்.

இந்தியா

- இந்திய கலாசார அமைச்சர் கௌரவ குமாரி செல்ஜா புனித கபிலவஸ்து புராதன சின்னங்களுடன் இலங்கைக்கு விஜயம் செய்தார். 2012, ஆகஸ்ட் 19 முதல் செப்டம்பர் 12 வரை புனித சின்னங்களின் கண்காட்சியொன்று இலங்கையில் இடம்பெற்றது. கலாசார அமைச்சர் கௌரவ குமாரி செல்ஜா மன்னார் திருக்கேதீஸ்வரம் கோவில் புனரமைப்புப் பணிகள் ஆரம்ப விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

ஆப்காணிஸ்தான்

- இலங்கைக்கு ஆப்காணிஸ்தான் வெளிநாட்டு அமைச்சரின் விஜயத்தின் போது இலங்கைக்கும் ஆப்காணிஸ்தானுக்கும் இடையே காலச்சார ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

கல்வி

பாகிஸ்தான்

- பாகிஸ்தான் அரசாங்கம் பாகிஸ்தான் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் (PTAP) இலங்கை மாணவர்களுக்கு உயர்கல்விக்காக 6 இடங்களை வழங்கியது.
- இலங்கை அரசாங்கம் வெளிநாட்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் 100 புலமைப்பரிசில்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாகிஸ்தான் மாணவர்களுக்கு 3 இடங்களை வழங்கியது.

## <u>மீன்பிடித்துறை</u>

- மீன்பிடித்துறை சம்பந்தமான இலங்கை செயற்பாட்டுக்குழுவின் 4வது கூட்டம் 2012, ஜனவரி 13 – 14 தினங்களில் கொழும்பில் இடம்பெற்றது.

ஏனையவை

- இப்பிரிவு LKIIRSS மற்றும் அபிவிருத்தியுறும் நாடுகளுக்கான ஆராய்ச்சி மற்றும் தகவல் முறைமைகளுக்கிடையில் (RIS) புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதை ஏற்பாடு செய்தது. இது கிராமிய அபிவிருத்தி, குடிநீர் மற்றும் துப்புரவு அமைச்சர் கௌரவ ஜெய்ராம் ரமேஷ் அவர்களின் 2012, ஜூலை 12 ஆந் திகதிய விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டது.
- இலங்கைக்கு ஆப்காணிஸ்தான் வெளிநாட்டு அமைச்சரின் விஜயத்தின் போது இலங்கைக்கும் ஆப்காணிஸ்தானுக்கும் இடையே பொருளாதார, கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சம்பந்தமான இருதரப்பு உடன்படிககை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

## செயல் நிறைவேற்ற அறிக்கை – 2012 – சார்க்

அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டடங்கள் :

2012, பெப்ரவரி 27 – 29 சார்க் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் செயலாளர் நாயகம், பணிப்பாளர்கள் மற்றும் பொதுச் சேவைகள் பதவியினர், செயலகத்தின் வகைப்பிரிவு – 1 வேதனங்கள் மற்றும் படிகள் அதிகரிப்புக்கான கோட்பாட்டின் மீளாய்வு.

2012, பெப்ரவரி 9 – 10 தினங்களில் புதுடெல்லியில் இடம்பெற்ற சார்க் பயங்கரவாத எதிர்ப்பு வழிமுறையமைப்பை வலுப்படுத்தும் உயர்மட்டப் பிரசித்த நிபுணர்கள் குழுக்கூட்டத்தில் பயங்கரவாதம் குறித்த ஐ.நா. தருணத்திற்கேற்ற குழுவின் தவிசாளர் கலாநிதி ரொஹான் பெரேரா, ஜனாதிபதி வழக்குரைஞர், வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் திரு.போஷித்த பெரேரா, பொலீஸ் திணைக்கள ஆலோசகர், பிரதிப் பொலீஸ் மாஅதிபர் திரு.C.N.வாகிஷ்ட ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் சார்க் அமைப்பினுள் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு வழிமுறையமைப்பை வலுப்படுத்தல் குறித்த எண்ணக்கரு அறிக்கை, குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவி சம்பந்தமான நடவடிக்கைகள், மனிதவள அபிவிருத்தி மற்றும் உறவுகளைக் கட்டியெழுப்புதல் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இக்கூட்டம் இந்த வருடத்தில் பாதுகாப்பான தரவு நிலையத்தில் பேணப்படும் STOMD மற்றும் SDOMD வெப் தளத்தின் தொழில்நுட்பத் தேவைப்பாடுகள் மற்றும் கருமப்பாடு சம்பந்தமான அங்கத்துவ நாடுகளின் தொழில்நுட்ப நிபுணர்களின் கூட்டமொன்றை இலங்கையில் இந்த வருடத்தில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று விதந்துரைத்தது. அங்கத்துவ நாடுகளுடன் கலந்தாலோசித்து ஒரு மாதிரிச் சட்டத்தை விளக்கக்குறிப்புடன் தயாரிக்க வேண்டுமென்ற இலங்கையின் ஆலோசனைக்கு வரவேற்புக் கிட்டியது. எதிர்காலத்தில் தற்கொலைப் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் வகையில் செயலமர்வு ஒன்றை இலங்கையில் நடாத்தவேண்டுமென்றும் விதந்துரைக்கப்பட்டது.

தெற்காசியா மற்றும் சார்க் பணிப்பாளர் நாயகம் திரு.வ. கிருஷ்ணமூர்த்தி, பணியகம் மற்றும் பிராந்திய நிலையங்கள் உள்ளிட்ட வகையில், சார்க் பொறிமுறையமைப்புகளை வலுப்படுத்துவதற்கான விசாரணை நியதிகளை அபிவிருத்தி செய்யும் தேசீய கவனத் தானங்களின் பூட்டான் கூட்டமொன்றில் 2012, மே 23 – 24 தினங்களில் கலந்துகொண்டார். அரசியலமைப்பு நிறுவனங்கள் முதல் அரச சார்பற்ற நிறுவனங்கள் வரை ஒரு வீச்சான தெற்காசியத் தனி யதார்த்த அமைப்புகள் சார்க் அமைப்புடன் நெருங்கிய இணைப்புகளையும், அங்கீகாரத்தையும் நாடி நிற்பது இக்கூட்டத்தினால் கவனத்திற் கொள்ளப்பட்டது. பிராந்தியத்தினுள் காணப்படும் தனி யதார்த்த அமைப்புகள் சம்பந்தமாக புதிய வடிவங்களிலான இணைப்புறவுகள் ஏற்படுத்தப்பட வேண்டுமா என்பது குறித்து ஆய்வு செய்யுமாறு இக்கூட்டம் செயலகத்தை வேண்டிக்கொண்டது.

இரண்டாவது தெற்காசிய அரங்கு 2013 ஆரம்பத்தில் மாலைதீவில் இடம்பெறவுள்ளது. இதன்பிரகாரம், இரண்டாவது தெற்காசிய அரங்குக்கான வழிகாட்டல் செயற்பாட்டுக்குழு 2012, ஜுன் 6 – 7 தினங்களில் காத்மண்டுவில் சார்க் செயலகத்தில் கூடியது. தெற்காசியா மற்றும் சார்க் பணிப்பாளர் நாயகம் திரு.வ. கிருஷ்ணமூர்த்தி இக்கூட்டத்தில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்தார். வழிகாட்டல் செயற்பாட்டுக்குழு தெற்காசிய அரங்கின் நோக்கம் தெற்காசியா மற்றும் அதன் எதிர்கால அபிவிருத்தி குறித்த விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களைப் பிறப்பித்து, கருத்துக்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதாகும் என்பதை நினைவுபடுத்தியது.

### <u>சார்க் பிரிவு குறித்த அமைச்சுடன்/முகவர் நிலையத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த கூட்டங்கள்</u>

சார்க் செயலாளர் நாயகம் அதிமேதகு திரு.அகமட் சலீம் மற்றும் அவரது தூதுக்குழுவினர் 2012, மே 28 – 30 வரை இலங்கைக்கு விஜயம் செய்து பின்வருவோருடன் மரியாதைச் சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

1. அதி மேதகு ஜனாதிபதி
2. கௌரவ வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்
3. செயலாளர்/வெளிநாட்டலுவல்கள்

சகல ஏற்பாடுகளும் சார்க் பிரிவினால் மரபு விதிகள் பிரிவுடன் இணைவாக மேற்கொள்ளப்பட்டன. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து 2012, பெப்ரவரி 20 –23 வரை கூட்டாண்மை வரிவிதிப்பு பிரச்சினைகள் சம்பந்தமாக ஒரு சார்க் கருத்தரங்கை நடத்தியது. வெற்றிகரமாக இடம்பெற்ற இந்த மாநாட்டில் சகல சார்க்நாடுகளினதும் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். 2012, மார்ச் 30 இல் ஹூர்மு அமைப்புடன் கூட்டுப் பணியாக சமூக ரீதியில் பரவும் நோய்கள் சம்பந்தமான சார்க் பிராந்திய பேருபாயத்தைக் கலந்துரையாடி, இறுதி நிலைப்படுத்துவதற்கான நிபுணர் குழுவின் கூட்டமும் பிராந்திய செயலமர்வு ஆய்வுகூட வலையமைப்பின் (2012, மார்ச் 28 –29, கொழும்பு) கொழும்பில் இடம்பெற்றன. வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சார்க் பிரிவு கூட்டத்தையும், செயலமர்வையும் ஒழுங்கு செய்வதற்கு சுகாதார அமைச்சுடன் பூரணமாக கூட்டிணைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. சகல சார்க் அங்கத்துவ அரசுகளும் கூட்டத்திலும், செயலமர்விலும் கலந்துகொண்டன. அத்தோடு,WHO பிரதிநிதிகளும், சார்க் செயலகப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

சார்க் நிதியமைச்சர்களின் 5வது கூட்டம் 2012, ஜனவரி 30 ஆம் திகதி டாக்காவில் இடம்பெற்றது. இது சார்க் நிதிச் செயலாளர்களின் 5வது கூட்டத்துக்கு முன்னாளில் இடம்பெற்றது. நிதியமைச்சர்களின் கூட்டம் 2013 இல் கொழும்பில் சார்க் நிதியமைச்சர்களின் 6வது கூட்டத்தை நடாத்தும் இலங்கையின் விருப்பறிவுக்கு வரவேற்புத் தெரிவித்தது. சார்க் பொதுக் கடன் முகாமையாளர் அரங்கின் முதலாவது கூட்டம் 2012, ஜுலை 19 – 20 வரை இலங்கையில், கொழும்பில் நடாத்தப்பட்டது. இலங்கை, கொழும்பு மத்திய வங்கி உலக வங்கியின் ஒரு சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் கனடாவின் ஒரு பேராசிரியர் போன்ற மிகவும் சிறப்புநிலை வாய்ந்த ஒரு சில கடன் சந்தை நலன் பிரதிநிதிகளை அழைத்திருந்தது. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு குறிப்பிட்ட கூட்டத்துக்குக் கூட்டிணைப்பு வழங்கியது.

கொழும்பிலுள்ள சார்க் கலாசார நிலையம் (SCC) வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து தெற்காசியாவில் சிற்பக்கலை மற்றும் அலங்காரக்கலை குறித்த பகிரப்படும் மரபுகள் சம்பந்தமான ஆய்வரங்கு, சடங்குகள், ஒழுக்கவியல் மற்றும் சமூக ஸ்திரநிலை சம்பந்தமான கருத்தரங்கு, திரைப்பட விழா, அழிந்துவரும் கலாசாரங்கள் குறித்த மாநாடு, கலைப் பொருட்காட்சி மற்றும் பாசறை போன்ற பல நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியது. சார்க் கலாசார நிலையம் சார்க் பிராந்தியக் கலைஞர்கள் ஒன்றுகூடி இலங்கையின் அழகிய சூழல்களில் உணர்வுபெற்று பல ஓவியங்களை வரைந்த சார்க் கலைஞர் பாசறையை சமீபத்தில் முடிவுறுத்தியது. ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கையைச் சேர்ந்த பிரபல கலைஞர்கள் இப்பாசறையில் பங்கேற்றனர். ஓவியத் திரைச்சீலைகளிலான இவர்களின் ஆக்கத்திறன் பணிகள் இப்பொழுது ஆர்வமுள்ள தரப்பினருக்கு குறுந்தவணை/நீண்ட தவணைக் குத்தகை அடிப்படையில் கிடைக்கும்.

சார்க் கலை என்ற பெயரில் விளம்பரம் செய்யப்படும் இந்த வியப்பூட்டும் கலைப்படைப்புகள் சார்க் அங்கத்துவ அரசுகளின் தூதுவராலயங்களுக்கும், தூதுக்குழுக்கள், அவதானிப்பு அரசுகள், கலரிகள் மற்றும் வணிக தனி யதார்த்த நிலை அமைப்புக்களுக்கும் முன்னுரிமை வழங்கும் அடிப்படையில் ஆர்வமுள்ள தரப்பினருக்கு கடன் அடிப்படையில் வழங்கப்படும். ஆர்வமுள்ள தரப்பினர் பொருத்தமான காட்சிப்படுத்தல்/சூழ்நிலைகளின் கீழ், சார்க் கலாசார நிலையத்தினதும், தனிப்பட்ட கலைஞர்களினதும் அங்கீகாரத்துடன் சித்திரங்களைக் காட்சிக்கு வைக்கலாம். சித்திரங்கள் ''சார்க் கலை'' என விளம்பரப்படுத்தப்படுவதோடு, ஒரு முழுத் திரட்டாக, ஒரு நாட்டுக்குரிய தெரிவாக அல்லது ஒரு தனிப்பட்ட கலைஞரின் படைப்பாகப் பெற்றுக்கொள்ளப்படலாம்.

SDF பிராந்திய ஒத்துழைப்பின் குறிக்கோள்களை ஈட்டிக்கொள்ளும் சாத்தியவளங்களைக் கொண்டிருப்பதால், அங்கத்துவ அரசுகள் பிராந்தியத்தில் முக்கிய கருத்திட்டங்களை நடத்துவதற்குSDF இலிருந்து நிதிகளைக் கோரும் வகையில் படிப்படியான ஆர்வ நிலைகள் தென்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில்,SABAII (வீட்டில் பணியாளற்றும் தொழிலாளர்களின் சார்க் வியாபாரத் தொழில் சங்கம்) பூரணமான கருமப்பாட்டு நிலையிலுள்ளது. இலங்கையின் SABAII சங்கம் அண்ணளவாக 2500 பேர் கொண்ட வாடிக்கையாளர் தளத்தைக் கொண்டிருப்பதோடு, இலங்கையில் 10 நிர்வாக மாவட்டங்கள் இதில் சம்பந்தமுற்றுள்ளன. 2500க்கு மேற்பட்ட வீட்டில் பணியாற்றும் தொழிலாளர்கள் இலங்கையிலும் SEVA அமைப்பிலும் நேரடித் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவப் பயிற்சிகளைப் பெற்றுள்ளனர். ''சிறுவர்களுக்கெதிரான வன்செயல்களை இல்லாதொழிப்பதற்கான தெற்காசிய முன்முயற்சிகள்'' மற்றும் ''நீரைப் பெறும் வழிகள்'' என்பவை தற்போது இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அதேவேளையில், மூன்று ஏனைய கருத்திட்டங்கள் SDF ஆளும் சபையினால் அனுமதி வழங்கப்பட்டது.

பொருளாதார ஒத்துழைப்புக்கான குழுவின் 15வது கூட்டம் 2012, ஜுலை 15 – 16 தினங்களில் மாலைதீவில் இடம்பெற்றது. இலங்கைத் தூதுக்குழுவுக்கு வணிகத்துறைப் பணிப்பாளர் திரு.நிமால் கருணாதிலக்க தலைமைதாங்கினார். பொருளாதார ஒத்துழைப்புக்கான குழு மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட கால இடைவெளிக்குப் பின்னர் கூடியது.

இலங்கை 2012, ஜனவரியிலிருந்து TLP யின் கீழ் வரும் (தீர்வை தாராளமயமக்கல் செயல்முறை) கூருணர்வுப் பொருள் நிரல்களைக் குறைப்பது சம்பந்தமான இரண்டாவது கட்டம் நடைமுறைப்படுத்துதலை நோக்கிப் பணியாற்றி வருகின்றது. எவ்வாறாயினும், சுமார் மூன்று தசாப்த காலப் பயங்கரவாதத்தின் பின் இலங்கை பொருளாதாரம் ஒரு துரித இடைமாற்றக் காலப்பகுதியினுள் பிரவேசித்துள்ளது. இரண்டாவது கட்டத்தின் கீழ் கூருணர்வுப் பட்டியலிலிருந்து அகற்ற வேண்டிய உற்பத்திப் பொருட்களை இனங்காணும் வகையில் நலன் பிரதிநிதிகளுடன் மீண்டும் கலந்தாலோசனை நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை கூடிய விரைவில் கூருணர்வுப் பட்டியலிலிருந்து அகற்றவேண்டிய உற்பத்திப் பொருட்களின் நிரலை இறுதிநிலைப்படுத்த எதிர்பார்க்கின்றது.

ஐந்தாவது சார்க் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்களின் கூட்டம் 2012, செப்டம்பர் 26 ஆந் திகதி மாலைதீவில் இடம்பெற்றது. இலங்கைத் தூதுக்குழுவுக்கு பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ W.D.J.செனிவிரத்ன தலைமை வகித்தார். பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொலீஸ் திணைக்களத்தைச் சேர்ந்த இரு சிரேஷ்ட அதிகாரிகள் அவருடன் சென்றிருந்தனர். தலைவர்கள் தியக்க மருந்துகளின் சட்டவிரோதக் கடத்தல், நடத்தை மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்கள் மற்றும் சிறு ஆயுதங்களின் கடத்தல் என்பன பயங்கரவாதத்துடன் கொண்டுள்ள இணைப்புறவுகளை மனதிற்கொண்டு, பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு கூட்டிணைப்பான, இணைந்த முயற்சிகளை மேற்கொள்ளத் தீர்மானித்ததோடு, சர்வதேச பயங்கரவாதம் குறித்த உத்தேச ஐ.நா.அனைத்துமடங்கும் சமவாயத்தை விரைவாக ஏற்படுத்தவும், குற்றவியல் விடயங்களில் பரஸ்பர உதவி குறித்த சார்க் சமவாயத்தின் ஏற்றங்கீகாரத்தைப் பூரணப்படுத்தவும் அழைப்பு விடுத்தனர். இக்கூட்டத்தில், சார்க் உள்நாட்டலுவல்கள் அமைச்சர்களின் ஆறாவது கூட்டத்துக்கு முன்னராக, சார்க் உள்நாட்டலுவல்கள் செயலாளர்களின் கூட்டத்தையும், சார்க் குடிவரவு அதிகாரிகளின் கூட்டத்தையும் 2013 இல் இலங்கையில் வைப்பதற்கான விருப்பறிவிப்பை இலங்கை செய்தது.

அமைச்சு இக்காலப்பகுதியில் பின்வரும் சார்க் செயற்பாடுகளை நடத்தும் வகையில் உரிய பிரதான அமைச்சுகளுடன் கூட்டிணைப்பாகச் செயற்பட்டது.

## விவசாய அமைச்சு

- ''விவசாய விரிவாக்க முகாமைத்துவத்தில் புதிய பரிமாணங்கள்'' குறித்த பயிற்சி

  நிகழ்ச்சித்திட்டம் 2012, பெப்ருவரி 18 – 29 வரை ஹைதராபாத் நகரில் விவசாய விஸ்தரிப்பு முகாமைத்துவத்துக்கான தேசிய நிறுவகத்தில் (MANAGE) இடம்பெற்றது.

- "உணவுப் பாதுகாப்பை முன்னேற்றும் வகையில் பயிர்ச் செய்கை முறைமைகள் மாதிரிகளில் ஆற்றலை அபிவிருத்தி செய்தல் மற்றும் தெற்காசியாவில் நீர் மூலவளங்களின் நிலைபேறான பயன்பாடு" குறித்த சார்க் - அவுஸ்திரேலிய கருத்திட்டம் 2012, ஜனவரி 28 முதல் பெப்ரவரி 04 வரை நடைபெற்றது.
- 2012 நொவம்பர் 14-16 வரைக்கும் பூட்டானில் SAARC நாடுகளின் நீரேந்து பிரதேசங்களில் பழவகைகளின் பெறுமதி சேர்தல் மற்றும் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவம் பற்றியது.
- பூட்டான் 2012 டிசம்பர் 12-15 வரைக்கும் SAARC நாடுகளின் விவசாயத்துறையில் தகவல் கணனி தொழில்நுட்பவியல் துறை.
- பூட்டான் 2012 டிசம்பர் 12-15 வரைக்கும் விவசாய தகவல்கள் மற்றும் அறிவு ஆற்றல்களை பெறுவதற்கான வழிவகைகளை திறப்பதற்கு ஒன்றிணைந்து நடவடிக்கைகள் சம்பந்தமான பிராந்திய கலந்துரையாடல்களும்.

## 2. தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு

- சார்க் நாடுகளில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கைகள் மற்றும் திட்டமிடல் சம்பந்தமான செயலமர்வு, இஸ்லாமாபாத், 2012, மார்ச் 6 – 7.

## 3. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

- "மிருகக்காட்சிச்சாலை மிருகங்களை கட்டுப்படுத்துதலும், அவற்றின் போக்குவரத்தும்" சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், மத்திய மிருகக்காட்சிச்சாலை அதிகாரசபை, புதுடெல்லி, 2012, செப்டம்பர் 24 – 28.
- பூட்டான் நொவம்பர் 26-30 வரைக்கும் SAARC கூட்டு வறுமை ஒழிப்பு கருத்திட்ட முன்மொழிவுகள்.
- 2012 நொவம்பர் 20-22 வரைக்கும் இந்தியா SAARC அபிவிருத்தி இலக்குகள் பற்றிய பட்டறை.
- டாக்கா 2012 டிசம்பர் 18-20 வரைக்கும் SAARC பிராந்தியத்தில் தொழிற்வாய்ப்பு பிரச்சனைகளில் துன்பத்தை தனித்தலிற்கான அபிவிருத்தி உபாயங்கள்.
- இந்தியா- டிசம்பர் 29-30 SAARC வியாபார திட்டம்.

## 4. நிதி திட்டமிடல் அமைச்சு

- இந்தியா நொவம்பர் 26-27 நிதியியல் இணையத்தளம் பற்றிய கருத்தரங்கு.
- நேபால் 2012 நொவம்பர் 27-30 வரி கருத்திட்ட சேவைகள் கருத்தரங்கு.
- சென்னை டிசம்பர் 3-6 சந்தை வழிவகைகளை ஆழமாக ஆய்வு செய்வதற்கான ICC பட்டறை.
- இந்தியா 2012 டிசமபர் 10-14 வரைக்கும் SAARC - STAT தகவல் செவ்வையாக்கம் சம்பந்தமாக பயிற்சித்திட்டம்.

## 5. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

- காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தத் தடுப்பு சம்பந்தமான சார்க் விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் கொரியாவில் 2012, மார்ச் 29 முதல் ஏப்ரல் 18 வரை இடம்பெறவிருந்தது.
- 2012 ஒக்டோபர் 09-10 வரைக்கும் இஸ்லாமாபாட்டில் இடம்பெற்ற வெள்ள இடர் முகாமைத்துவம் பற்றிய பட்டரை.
- 2012 நொவம்பர் 05-09 புதுடில்லி தெற்காசியாவில் காட்டுத் தீ அனர்த்த முகாமைத்துவம்.

## 6. பாதுகாப்பு அமைச்சு

- 2012 பாகிஸ்தான் நொவம்பர் 19-20 (பொலிஸ்) பிராந்தியத்தில் தொழிலாளர்களின் ஆற்றல் திறன்களை கட்டியெழுப்புதல்.

## 7. சுகாதார அமைச்சு

- காத்மண்டு 2012 டிசம்பர் 6-7 காசநோய் ஒழித்தல் கட்டுப்படுத்தலுக்கான பிராந்திய தந்திரோபாயங்கள்.

## 8. கலாச்சாரம் மற்றும் கலைகள் அமைச்சு

- 2012 இந்தியா ஒக்டோபர் 28 நொவம்பர் 07 வரைக்கும்,SAARC பாரம்பரிய கைத்தறி ஆடைகள் விழா.
- பூட்டான் 2012 நொவம்பர் 21 – 24 SAARC பிராந்தியத்தில் பராம்பரிய பேரிகை கொட்டுதல் கலாச்சார விழா.
- இஸ்லாமாபாட் டிசம்பர் 2012, 17-19 அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்கு கூட்டிணைந்த ஆவணப்படுத்திய திரைப்படம் தயாரித்தல் பற்றிய பட்டரை.

## 9. சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரங்கள் அமைச்சு

- மகளிர் மற்றும் சிறுவர் பற்றிய பிராந்திய ஆற்றல் திறன்களை கட்டியெழுப்பும் செயலமர்வு புதுடில்லியில் நொவம்பர் 19-20 வரையில் இடம்பெற்றது.
- மகளிர் மற்றும் சிறுவர்கள் சம்பந்தமான, 4 வது தேசிய நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பூட்டான் 2012 நொவம்பர் 26-28 வரைக்கும்.

## 10. இலங்கை தத்துவநிலைப்படுத்தல் (Accreditation) சபை

- தத்துவநிலைப்படுத்தல் சம்பந்தமான சார்க் நிபுணர் குழுவின் முதலாவது கூட்டம் (SEGA) 2012,செப்டம்பர் 3 – 4 திகதிகளில் மாலைதீவில் இடம்பெற்றதோடு, அதன் பின்னர் 2012, செப்டம்பர் 5 இல் ஒரு செயலமர்வும் இடம்பெற்றது.

## 11. குடிசனமதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களம்

- விவசாயப் புள்ளிவிபரங்கள் சம்பந்தமாக SAARCSTAT பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், 2012, ஆகஸ்ட 27 – 31, இந்தியா.
- பால்நிலை விவகாரங்கள் மற்றும் பால்நிலைப் புள்ளிவிபரவியல் சம்பந்தமான SAARC STAT பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், 2012, செப்டம்பர் 24 – 28.
- SAARC STAT ஆய்வு சம்பந்தமான SAARC – ADB செயலமர்வு,SAARC செயலகம், காத்மண்டு, 2012, ஜுன் 23.

## 12.மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சு

- பூட்டான் நொவம்பர் 21-22 வரைக்கம் புதுப்பிக்கத்தக்க சகதி வலு கொள்கைகள் ஒழுங்காக்கல் மற்றும் நெய்யரி சம்பந்தப்படட பிரச்சனைகள்

**<u>ஒத்திவைக்கப்பட்ட சார்க் கூட்டங்கள்</u>**

1. கொழும்பில், 2012 காலாண்டு பகுதியில் சார்க் நடவடிக்கைகள் பஞ்சாங்கத்தில் சுங்க துறை ஒத்துழைப்பு சம்பந்தமாக சார்க் துணைக் குழுவின் ஒன்பதாவது கூட்டத்தொடர் இடம்பெற உத்தேசிக்கப்பட்ட போதிலும் வேறு பல காரணங்களுக்காக இந்த கூட்டத்தினை நடாத்துவதற்கு சுங்க திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொள்ளவில்லை.
2. இலங்கையில் ஒக்டோபர் 03-04 ஆம் திகதி வரைக்கும் விவசாய ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் பற்றிய அரசாங்கங்களுக்கிடேயே ஆன உள்ளக குழு IGCG வின் மூன்றாவது கூட்டம்

நடைபெறுவதற்கு அட்டவணைப்படுத்தப்பட்டது. சார்க் செயலகத்தின் வேண்டுகோளின் பிரகாரம் 2012 இல் மீள் அட்டவணைப்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தினை நடாத்துவதற்கு புதிய திகதிகளை பற்றி விவசாய அமைச்சின் செயலாளரிற்கு பிரதியிட்டு விவசாய திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு இந்த பிரிவானது கடிதம் எழுதியுள்ளது.

3. இலங்கை மாரவில்லவில் 2012 நொவம்பர் 23-24 திகதி வரைக்கும் சக்திவலுவில் செயலணி குழுவின் ஏழாவது கூட்டம், நடைபெற அட்டவணைப்படுத்தப்பட்டது. அங்கத்துவ நாடுகளின் வேண்டுகோளின் பேரில் இது 2013 மார்ச் மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

**2013 இல் பின்வரும் கூட்டங்களுக்கு இலங்கை உபசரணை வழங்கும்**

1. இலங்கையின் கண்னோட்டத்தில் ஒருங்கினைக்கப்பட்ட கரையோரப் பிரதேச முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வு அனுபவப் பரிமாறல் (SCZMC) 2013 ஜூலை 2-7 வரையில் நீரகொழும்பில்
2. SAFTA வின் எட்டாவது தேர்ச்சியான செயற்குழுக்கூட்டம் 2013 ஆகஸ்ட் 22 கொழும்பில்
3. SAFTA வின் ஏழாவது அமைச்சரவைச் சபைக் கூட்டம் 2013 ஆகஸ்ட் 23 கொழும்பில்
4. SAARC நிதிச் செயலாளர்களது எட்டாவது கூட்டம் 2013 ஆகஸ்ட் 29 கொழும்பில்
5. SAARC நிதி அமைச்சர்களது ஆறாவது கூட்டம் 2013 ஆகஸ்ட 30 கொழும்பில்

முன் நிகழ்வாக சார்க் உள்துறை அமைச்சர்களின் செயலாளர்களின் ஐந்தாவது கூட்டம் /சார்க் குடிவரவு அதிகாரத்தின் ஐந்தாவது கூட்டத்தினை தொடர்ந்து உள்துறை செயலாளர்களின் ஐந்தாவது கூட்டத்தினை நடாத்துவதற்கு ஆர்வத்தினை நேபால் வெளிப்படுத்தியதாக அமைச்சு அறிவித்தது. 2012 ஒக்டோபர் 30 ஆம் திகதிமட்டில் சார்க் செயலகம் ஊடாக இது சம்பந்தமாக நேபால் திகதிகளை பற்றிய திடப்படுத்திக்கொள்ளும்.

நிர்ணயிக்கப்பட்ட காலவரையறைக்குள் திடப்படுத்திக் கொள்ள முடியாது போனால் 2013 இல் முன் நிகழ்வாக உள்துறை அமைச்சு செயலாளர்களின் ஆறாவது கூட்டம் மற்றும் சார்க் குடிவரவு அதிகாரத்தின் ஆறாவது சார்க் கூட்டத்திற்கு உபசரனை வழங்குவதற்கு இலங்கை முன்வந்தது. மீள் நோக்கும் காலப்பகுதியான 2012 ஒக்டோபர் 01 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் பின்னிணைப்பு " A" இல் குறிப்பிடப்பட்டவாறு சார்க் கூட்டங்கள் சார்க் அங்கத்துவ நாடுகளில் நடாத்தப்பட்டது.

இலங்கையில் உள்ள வரிசை அமைச்சுக்கள்/திணைக்களங்களுடன் அமைச்சு தொடர்புகளை வைத்துக்கொண்டது.

பின்னிணைப்பு " A" இல் குறிப்பிட்டவாறு இயபுடைய நிறுவனங்களில் இருந்து தூதுகுழுவினர் பங்குபற்றும் பொழுது.

தேவைப்படும் பொழுது இப்பிரிவானது இலங்கை தூதுகுழுவினருடன் தனித்தனியாக ஒவ்வொருவருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். இலங்கையில் இருந்து வருகை தந்த தூதுகுழுவினருடன் பின்னே குறிப்பிடப்பட்டுள்ள உதவிகளை வழங்கினார்கள்.

- சார்க் கூட்டங்களுக்கு பங்குபற்றியோருக்கு சகல நிகழ்ச்சி நிரல் விடயங்களையும் வழங்கியது.
- இப்பிரிவானது இந்த நிகழ்ச்சி நிரல் விடயங்களை பற்றி ஆராய்ந்தது. இலங்கைக்கு அனுகூலமாக தங்களது பிரச்சனைகளை முன்வைப்பதற்கு திடப்படுத்தி கொள்ளுமுகமாக பங்குபற்றுவோருடன் இப்பிரிவானது நிகழ்ச்சி நிரல் விடயங்களை பற்றி கலந்துரையாடியுள்ளது. மேலும் இலங்கைக்கு அதி உச்சமான அனுகூலத்தை சார்க் சட்ட வரம்பிற்கு பெறுவதற்கு ஏதுவாக திடப்படுத்தி கொண்டது.
- இலங்கையில் பின்பற்றப்படும் வழிமுறைகளை தான் சார்க் அங்கத்துவ நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதாக வருகை தரும் தூதுகுழுவினருக்கு தேவைப்பட்ட அறிவுரைகள் வழங்கப்பட்டது.
- இலங்கைக்கு நன்மை பயக்கக் கூடியதாக இலங்கையில் இந்த நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளும் நோக்கில் வேறு சார்க் அங்கத்தவ நாடுகளிலிருந்து இயபுடைய துறைகளில் ஏற்படும் அனுபவங்களை கற்றக்கொண்டு கொள்ளும் படியாக பங்குபற்றியோருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.
- வேறு அங்கத்துவ நாடுகளுடன் அவர்களுடைய சிறந்த நடைமுறைகளை கற்றுக்கொள்ளும் அதே வேளை சார்க் கூட்டங்களை ஒரு கொடுத்து வாங்கும் பயிற்சியாக ஒரு இரு வழி

பாதையாக உபயோகப்படுத்தும் படியாக இலங்கையில் இருந்து வருகை தரும் பிரதிநிதிகளுக்கு இதன் பொது அறிவுரை வழங்கப்பட்டது.

- அவர்களின் விஜயங்களை எளிதாக்குவதற்கு ஏதுவாக இயபுடைய சார்க் நுழைவுரிமை ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற இருக்கும் /இடம்பெற்ற கூட்டங்களுக்கான வழிகாட்டல்கள்

2013 மார்ச்சில் சார்க் பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் உபாயங்களுக்கான முகாமைத்துவ செயற்பயிற்சிதிட்டங்கள் மற்றும் சக்திவலு பற்றிய சார்க் 7 ஆவது செயலணி குழுவின் கூட்டம் ஆகியன இலங்கையில் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பொழுது சார்க் நடைமுறைகளை தொடர்ந்த சார்க் கூட்டங்களை நடாத்துவதற்கு ஏதுவாக இரு நிறுவனங்களையும் வழி நடாத்துவதற்கு இலங்கையின் பொலீஸ் திணைக்களம் மற்றும் மின்சக்தி மற்றும் சக்திவலு அமைச்சு ஆகியவற்றை சார்ந்த உத்தியோகத்தர்களுடன் ஒரு தொடரான கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

இது சம்பந்தமாக கூட்டங்களை நடாத்தும் பொழுது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் கூட்டங்களுக்கு ஆன நிகழ்ச்சி நிரல் விடயங்கள் கூட்டங்களுக்கு அவசியமான உரைகளின் வரைபுகள் பங்குபற்றல் பற்றி திடப்படுத்தி கொள்ளல் பற்றிய தகவல்களை பெறுவதற்கு சார்க் செயலகத்துடன் தொடர்புகளை பேணுதல் யாவும் 2013 ஆம் ஆண்டு நடாத்தப்படவிருக்கும் கூட்டங்களுக்கு தயார்படுத்தும் மூலமாக இந்த பிரிவானது ஒருங்கமைத்தது.

| உப தலைப்பு - விடயம் | சுருக்க விவரணம் | குறிப்பு |
|---|---|---|
| இருதரப்பு உறவுகள் | - | |
| பல் தரப்பு உறவுகள் | - | |
| பொருளாதார உறவுகள் | நிதி இணையத்தளம் தொடர்பான கருத்தரங்கு இந்தியா, நவம்பர் 26-27<br><br>வரி செயற்திட்ட சேவைகள் தொடர்பான சார்க் கருத்தரங்கு நேபால் நவம்பர் 27-30<br><br>சந்தை வழிமறைகளை பகுப்பாய்வு செய்வதற்கான ஆழ்ந்த அளவீடுகள் தொடர்பான ICC யின் கருத்தரங்கு சென்னை டிசம்பர் 3-6<br><br>தரவுகளை பதிவது தொடர்பான சார்க்கின் STAT பயிற்சி இந்தியா 2012 டிசம்பர் 10-14 | |
| கலாச்சார உறவுகள் | சாக்கின் பாரம்பரிய என்லும் பண்டிகை இந்தியா 2012 ஒக்டோபர் 28 முதல் நவம்பர் 7<br><br>சார்க் பிராந்தியத்தின் பாரம்பரிய டிரம்ஸ் இசைத்தல் தொடர்பான கலாச்சார பண்டிகை பூட்டான் 2012 நவம்பர் 21-24<br><br>அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் நோக்கில் கூட்டு ஆவணப்படம் தயாரிப்பு தொடர்பான பயிற்சி பட்டறை | |

| | | |
|---|---|---|
| ஊழியர் நலன்புரி | - | |
| வெளிநாட்டு முதலீடு | - | |
| சுற்றுலா ஊக்குவிப்பு | - | |
| வர்த்தக ஊக்குவிப்பு | - | |
| சூழல் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் | தெற்காசியாவில் வெள்ள அபாய முகாமைத்துவம் தொடர்பாக இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற பயிற்சி பட்டறை 2012 ஒக்டோபர் 09-10<br><br>தெற்காவியாவில் காட்டுத்தீ அனர்த்த முகாமைத்துவம் நியூடில்லி 2012 நவம்பர் 05-09 | |
| பாதுகாப்பு | பிராந்திய பணியாளர்களது (பொலீஸ்) திறன் விருத்தி பாகிஸ்தான் 2012 நவம்பர் 19-20 | |
| அரசியல் | சார்க் சபாநாயகர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களது கூட்டமைப்பின் 6ஆவது மாநாடு பகிஸ்தான் 2012 நவம்பர் 30-37<br><br>தெற்கு தென்மேல், மத்திய ஆசிய பாராளுமன்ற உறுப்பினர்களது MDGS சங்கம் தொடர்பான மன்றம் - 2015 ஆம் ஆண்டிற்கு பின்னரான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் டாக்கா 2012 டிசம்பர் 09-12 | |
| விவசாயம் | சார்க் நாடுகளில் அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவம், பழ உற்பத்தியின் போது பெறுமதி சேர்த்தல் பூட்டான் 2012 நவம்பர்14-16<br><br>சார்க் நாடுகளது விவசாயத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் பூட்டான் 2012 டிசம்பர் 12-15<br><br>சார்க் நாடுகளின் விவசாய தகவல் மற்றும் அறிவு பெறுவதற்குறிய வழிவகைகளை கண்டுபிடிக்கும் கூட்டுசெயற்பாடு தொடர்பான பிராந்திய ஆலோசனை பூட்டான் 2012 டிசம்பர் 12-15<br><br>சார்க் நாடுகளில் தெரிவுசெய்யப்பட்ட மரக்கறிகளில் உற்பத்தி செய்வது தொடர்பான ஒரு முன்னோடி முயற்சி இந்தியா 29-30 | |

| | | |
|---|---|---|
| சக்தி | கம்பி மின்சார விநியோகம் தொடர்பான விடயங்களும் வலுக்கொள்கை ஒழுங்கை புதுபித்தலும் பூட்டான் நவம்பர் 21-22 | |
| பெண்கள் மற்றும் சிறார்கள் | பெண்கள் மற்றும் சிறார்களது ஆக்கத்திறனை விருத்தி செய்வதற்ான பிராந்திய பயிற்சி பட்டறை நியூடில்லி நவம்பர் 19-20<br><br>பெண்கள் மற்றும் சிறார்கள் தொடர்பான நான்காவது தேசிய நடவடிக்கையும் ஒருங்கிணைப்பு குழு கூட்டமும் பூட்டான் 2012 நவம்பர் 26-28 | |
| வறுமை அழித்தல் | சார்க் அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான பட்டறை இந்தியா 2012 நவம்பர் 20-22<br><br>சார்க்கின் கூட்டுவறுமை ஒழிப்பு செயற்திட்ட பிரேரணை பூட்டான் நவம்பர் 26-30<br><br>சார்க் கிராந்தியத்தில் தொழில் பிரச்சினைகளை குறைப்பதற்கான அபிவிருத்தி தந்திரோபாயங்கள் டாக்கா 2012 டிசம்பர் 18-20<br><br>sabah வியாபார திட்டமிடல் சந்திப்பு இந்தியா 2012 டிசம்பர் 29-30 | |
| நிர்வாகம் | சார்க் உறுப்பு நாடுகளது பொது சிவில் சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர்களுக்கான இரண்டாவத சந்திப்பு இஸ்லாமாபாத் 2012 டிசம்பர் 04-06 | |
| சுகாதாரம் | TB நோயை இல்லாது ஒழிப்பதற்கான கட்டுப்பாட்டுக்குல் வைப்பதற்கான சாக் பிராந்திய தந்திரோபாயம் காத்மண்டு 2012 டிசம்பர் 06-07 | |
| கால்நடைகள் | ஆபாயத்தை எதிர்நோக்கி இருக்கும் உயரினங்களை பாதுகாப்பது தொடர்பான சிரேஷ்ட மிருக்காட்சிசாலை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நெறி இந்தியா 2012 நவம்பர் 17-21 | |

# கிழக்காசிய மற்றும் பசுபிக் பிரிவு

## கிழக்காசியா மற்றும் பசுபிக் பிரிவு

| | |
|---|---|
| ஆட்புல உள்ளடக்கம் : | அவுஸ்திரேலியா, புரூணை, தாருஸ்ஸலாம், சீனா, கம்போடியா,DPRK, பிஜி, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, லாவோஸ், மலேசியா, மொங்கோலியா, மியன்மார், நியூசிலாந்து, பிலிப்பீன்ஸ், பாப்புவா நியூகினி, சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம், வானோட்டு மற்றும் ஹொங்கொங் SAR |
| வதிவுத் தூதுக்குழுக்களின் எண்ணிக்கை : | 11 (அவுஸ்திரேலியா, சீனா, இந்தோனேசியா, ஜப்பான், கொரியா, மலேசியா, மியன்மார், பிலிப்பீன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்நாம்) |
| காவல் தூதரகங்களின் எண்ணிக்கை : | 04 (அவுஸ்திரேலியா – சிட்னி, சீனா - ஷங்ஹாய், செங்டு, குவான்ஷௌ) |
| ஒருங்கிசைவு தத்துவநிலைப்படுத்தல் : | கன்பெரா (அவுஸ்திரேலியா) – பிஜி, நியூசிலாந்து, பாப்புவா நியூகினி, வானோட்டு<br><br>சிட்னி– தஸ்மேனியா, தெற்கு அவுஸ்திரேலியா<br>சீனா - DPRK, மொங்கோலியா<br>சிங்கப்பூர் – புரூணை தாருஸ்ஸலாம்<br>தாய்லாந்து – கம்போடியா, லாவோஸ் |
| பல்தரப்பு/பிராந்திய அமைப்புக்களின் எண்ணிக்கை : | (ஆசிய பிராந்திய அரங்கு (ARF), ஷங்ஹாய் கூட்டாண்மை அமைப்பு (SCO) |
| உள்ளடக்கப்படும் ஏனைய அமைப்புக்களின் எண்ணிக்கை : | பாலி ஜனநாயக அரங்கு, ஷங்கிரி – லா உரையாடல் அமைப்பு |

**<u>கிழக்காசியா மற்றும் பசுபிக் பிரிவின் பிரதான பணி விடயப் பரப்புகள் பரந்த அளவில் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்.</u>**

- ஜனாதிபதி, பிரதமர், வெளிநாட்டமைச்சர் ஏனைய அமைச்சரவை அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளின் இருதரப்பு விஜயங்களைக் கூட்டிணைப்புச் செய்தல்.
- வெளிநாட்டு அரசியல் தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான ஏற்பாடுகள்.
- அரசியல், கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அபிவிருத்திகள் குறித்த பின்தொடரல் மற்றும் கூட்டிணைப்பு நடவடிக்கைகள்.
- இலங்கைப் பாராளுமன்றத்துக்கும் மற்றும் பிராந்தியத்திலுள்ள நேரெதிர் அமைப்புக்களுக்குமிடையிலான கூட்டிணைப்புப் பணிகள்.
- அரசியல், விஞ்ஞான, தொழில்நுட்ப, கல்வி மற்றும் கலாசாரத் துறைகளில் இருதரப்பு உடன்படிக்கைகள்/புரிந்துணர்வு உடன்படிக்கைகளை வகுத்தமைத்தல் மற்றும் கைச்சாத்திடலில் கூட்டிணைப்பு.
- உச்சி மாநாடுகள் மற்றும் தொடர்புள்ள கூட்டங்களுக்குத் தேவையான ஏற்பாடுகள், பொருட்களை வழங்குதல் மற்றும் பொருண்மைப் பிரச்சினைகள் உள்ளிட்ட வகையில் ARF, SCO, Bali செயல்முறை நடவடிக்கைகளைக் கூட்டிணைப்புச் செய்தல்.
- ஷங்கிரி – லா உரையாடல் மற்றும் Bali அரங்கு பொருண்மை மற்றும் தேவையான விடயங்கள் ஏற்பாடு என்பவற்றைக் கூட்டிணைப்புச் செய்தல்.
- புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்களின் கூட்டிணைப்பு.
- வெளிநாடுகளிலுள்ள தூதுக்குழுக்களின் மாதாந்த அரசியல் அறிக்கைகளைச் செயன்முறைப்படுத்துதல்.
- பிராந்தியம் தொடர்பான விஜயங்கள் மற்றும் மாநாடுகளுக்கான சுருக்க விளக்கங்களைத் தயாரித்தல்.
- இந்தப் பிரிவின் செயல் அதிகார எல்லையுள் வரும் நாடுகளால் வழங்கப்படும் பிரயாண மதியுரை விடயங்களைக் கண்காணிப்புச் செய்தல்.
- பிராந்தியத்திலுள்ள இலங்கைத் தூதுக்குழுக்களுக்கு அவசியமான மதியுரை மற்றும் வழிகாட்டல்கள்/தகவல்களை வழங்குதல்.

## <u>இருதரப்பு உறவுகள்</u>

**மக்கள் சீனக் குடியரசு**

சீனாவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் பாரிய அளவில் அதிகரித்து 2011 இல் 153 மில்லியன் US $ களை அண்மித்தது. இது 2010 இல் 102 மில்லியன் US $ ஆகவிருந்து பின்னர் 50% த்தால் அதிகரித்தது முதலாவது பெண்மணி ரியான்ஜின் மருத்துவப் பல்கலைக்கழகம் நடாத்தும் ஓர் ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றும் வகையில் பீஜிங் மற்றும் ரியான்ஜினுக்கு விஜயம் செய்தார் சீன தேசீய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுவின் தவிசாளர் அதிமேதகு வூ பாங்குவோ விடுத்த அழைப்பை ஏற்று கௌரவ சபாநாயகர் சீனாவுக்கு விஜயம் செய்தார். பின்னர் அதிமேதகு வூ பாங்குவோ 2012, செப்டம்பர் 15 – 18 வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். இந்த விஜயத்தின் இறுதியில் விசா விதிவிலக்கு, கடல் நீரியல் அபிவிருத்தி, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு என்பவை உள்ளிட்ட வகையில் 16 உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோதபாயா ராஜபக்ஷ சீனாவின் 64வது சுதந்திரதின ஆண்டு விழாக் கொண்டாட்டங்களிலும், இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் இராஜதந்திர உறவுகள் தாபிக்கப்பட்ட 55வது ஆண்டு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்தில் சீனப் பாதுகாப்பு அமைச்சர் முதல் தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்தார். இது இரு நாடுகளுக்குமிடையிலான நட்பு

ரீதியான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்தது. இந்த விஜயத்தின்போது தியத்தலாவை இராணுவ அக்கடமிக்கு ஒரு கேட்போர் கூடத்தை வழங்குவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

நிதியமைச்சு மற்றும் திட்டமிடல் செயலாளர் கலாநிதி .டீ.ஜயசுந்தர சீன அபிவிருத்தி வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட முதலீட்டு அரங்கில் கலந்துகொள்வதற்காக சீனாவுக்கு விஜயம் செய்தார். அவர் சீனாவின் EXIM வங்கியுடன் கருத்திட்ட நிதியளிப்பு உடன்படிக்கைகளை இறுதிநிலைப்படுத்தும் நடவடிக்கை முறை சம்பந்தமாகச் செயற்பட்டார். தொலைத்தொடர்புகள் அமைச்சின் செயலாளர் சீனாவுக்கு விஜயம் செய்து 2012, அக்டோபரில் ஆரம்பித்த லோட்டஸ் டவர் கருத்திட்டத்தின் வடிவமைப்பை இறுதிநிலைப்படுத்தும் செயற்பாட்டை மேற்கொண்டார். வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இரண்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சுகளுக்குமடையிலான 8வது இருதரப்பு அரசியல் கலந்தாலோசனைகளுக்காக பீஜிங்குக்கு விஜயம் செய்தார். இந்த வருட இறுதிக்கு முன்னராக, சீன - இலங்கை வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான இணைந்த குழுவின் 5வது அமர்வை நடத்தும் திகதிகள் இறுதிநிலைப்படுத்தப்படுகின்றன.

கலை, கலாசார அமைச்சர் கௌரவ T.B.ஏக்கநாயக்க சீன கலாசார அமைச்சரின் அழைப்பின் பேரில் ஷங்ஹாய் ஒத்துழைப்பு அமைப்பின் (SCO) 9வது கலாசார அமைச்சர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக 2012, ஜுன் 3 – 7 வரை பீஜிங்குக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின்போது இலங்கையில் சீன கலாசார நிலையத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. சீனாவிற்கான போக்குவரத்து அமைச்சர் கௌரவ குமார வெல்காம மற்றும் விஞ்ஞான விவகாரங்களுக்கான சிரேஷ்ட அமைச்சர் கௌரவ திஸ்ஸ விதாரண அவர்களின் உயர் மட்டத்து விஜயங்களுக்கு வழிவகுத்தது. ஹங்ஷோ மற்றும் செங்டு பிரதேசங்களில் இலங்கை சுற்றுலாப்பயணத்துறை சார்ந்த தெருக் காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. (CITM) சீன சர்வதேச போக்குவரத்து சந்தையில் தூதரகத்திற்கு சிறந்த அமைப்பாளர் விருது வழங்கப்பட்டது.

மாணவர்கள் சம்பந்தமான விடயங்கள் பற்றி தூதரகம் இலங்கை மாணவர்களுக்கு உதவி செய்தது.

**செங்டு**

இலங்கைக்கும் சீனாவின், சிச்சுவான் மற்றும் யுன்னான் மாகாணங்களுக்குமிடையில் நெருங்கிய அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் கௌரவ சபாநாயகரின் தலைமையிலான தூதுக்குழுவொன்று செங்டுவுக்கு விஜயம் செய்தது.

சீன தேசீய மக்கள் காங்கிரசின் நிலையியல் குழுவின் சபாநாயகரின் விஜயத்தின்போது போக்குவரத்து அமைச்சு, வியாங்கொடையிலிருந்து களுத்துறை வரை மின்சார ரயில் முறைமையொன்றை ஏற்படுத்தும் கருத்திட்டமொன்றில் டொங்பாங் எலெக்ட்ரிக் கோர்ப்பரேஷனுடன் முதலீட்டுப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டது.

**ஷங்ஹாய்**

ஷேஜியாங் மாகாணத்துக்கும் இலங்கை மேல்மாகாண சபைக்குமிடையில் சகோதர நிலை மாநகர ஒத்துழைப்பை ஏற்படுத்தும் வகையில் பூர்வாங்க கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

இது எமது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் ஊக்கியாக அமையும். இலங்கையின் உல்லாசப் பிரயாண ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு அதியுயர்வான ஆதரவளிக்கும் வகையில் ஹாங்ஷௌ மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே என்பவற்றுக்கிடையிலான சகோதர நிலை மாநகர புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. உயர் மட்ட விஜயங்களுக்கு வழிவகுத்தது. ஹங்ஷோ சர்வதேச சகோதர மாநகர முதல்வரின் மாநாட்டில் ஸ்ரீ ஜெயவர்தனபுர கோட்டே மாநகர முதல்வர் கௌரவ ஆர்.ஏ.டி. ஜனக ரணலக பங்குபற்றினார். பரஸ்பரம் ஸ்ரீ ஜெயவர்தன கோட்டே மாநகர முதல்வரின் விஜயத்தினை

தொடர்ந்தம் மற்றும் சுற்றுலாப்பயணத்துறையில் ஒத்துழைப்பிற்குமாக 2012 ஒக்டோபரில் இலங்கைக்கு ஹங்ஷோவின் துணை மாநகர முதல்வர் விஜயத்தினை மேற்கொண்டார்.

2012 டிசம்பர் 27 ஆம் திகதி சிஜியங் மகாணத்தில் இருக்கின்ற கிங் மடத்திற்கு அதிமேதகு ஜனாதிபதி ஒரு புத்தர் சிலை அன்பளிப்பு செய்தார்.

இலங்கையின் ஆபரணங்கள் மாணிக்கம் தேயிலை மற்றம் அழகுசாதன பொருட்கள் ஆகியவற்ளை ஊக்குவிப்பதற்கான கண்காட்சியை சங்காய் நகரில் ஏற்பாடு செய்தார்.

**குவாங்ஷௌ**

தென்சீனாவில் இடம்பெற்றுவரும் பாரிய பொருளாதார அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு, வர்த்தக, பொருளாதார மற்றும் உல்லாசப் பிரயாண ஊக்குவிப்பு என்பவற்றை இலகுபடுத்தும் வகையில் காவல்தூதர் நாயகம் 2012, ஜனவரியில் செயற்பாடுகளை ஆரம்பித்தார். இந்த வருடம் முழுவதும் இலங்கையின் உற்பத்திப் பொருட்களை விளம்பரம் செய்யும் வகையிலும், கன்டன் வர்த்தக விழாக்காட்சியில் பங்குபற்றுவது உள்ளடங்கலாக பல வர்த்தக விழாக் காட்சிகளிலும், வர்த்தக நிகழ்வுகளிலும் பங்கேற்றார்.

**அவுஸ்திரேலியா**

2012, மே மாதத்தில் அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கௌரவ கிரிஸ் பவன், 2012, செப்டம்பரில் பாராளுமன்ற சமஷ்டி அங்கத்தவரும், அவுஸ்திரேலிய - இலங்கை நட்புறவுக்குழு உப-தலைவருமாகிய கௌரவ டொன் ரன்டோல் போன்றவர்களின் பல உயர்மட்ட விஜயங்களினூடாக இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையிலான இரு தரப்புச் செயற்பாடுகள் மேலும் வலுப்பெற்றன.

பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சரும், மனித உரிமைகள் விசேட தூதுவருமாகிய கௌரவ மஹிந்த சமரசிங்க 2012, மே மாதத்தில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்தார். பொது நிர்வாக அமைச்சர் கௌரவ ஜோன் செனிவிரத்ன 2012, ஏப்ரில் மாதத்தில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் மேற்கொண்டார். எதிர்க்கட்சித் தலைவர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க 2012, மே மாதத்தில் அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்தார்.

TGTE அமைப்பு இலங்கைக்கு எதிரான வகையில் பல அணுகுமுறைகளை மேற்கொண்டபோதிலும், அவுஸ்திரேலியா தாம் இலங்கை அரசாங்கத்தையே அங்கீகரிப்பதாக விதிமுறையாக, பகிரங்கமாக அறிவித்ததோடு, அவர்களுடன் எவ்வித உறவையும் வைத்துக்கொள்வதில்லையென்றும் தெரிவித்தது.

வளர்ந்துவரும் சட்டவிரோத புலம்பெயரல் பிரச்சினை விடயத்தில், மக்களைக் கடத்துதல் மற்றும் எல்லைப் பாதுகாப்பு விவகாரங்கள் சம்பந்தமான உத்தேச இணைந்த செயற்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டத்தை நடாத்துவதற்கான கலந்துரையாடல்கள் இருதரப்பினருக்குமிடையில் இடம்பெற்று வருகின்றன.

அவுஸ்திரேலிய இருதரப்பு உதவி நிதிப்பட்டியலை மேலும் விரிவாக்கும் வகையில் அவுஸ்திரேலியா 43.6 மில்லியன் அவுஸ்திரேலிய டாலர்களை வழங்கியுள்ளது. 2012, மே மாதத்தில் இருதரப்பு, வான் சேவைகளை மேற்கொள்வதற்கான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இது இலங்கைக்கும், அவுஸ்திரேலியாவுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதாக அமையும்.

இரு நாடுகளுக்கும் இடையே ஆன சமகாலத்தில் நிலவும் உறவுகளை வலுப்படுத்துவதற்கு, நியு சவுத் வேல்ஸ் பிரதமருடனும், மேன்மை தங்கிய நியு சவுத் வேல்ஸ் ஆளுனருடனும் சந்திப்புக்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே பல்தரப்பு ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கு, கலாச்சார நடவடிக்கைகள், வர்த்தக, மற்றும் சுற்றுலாப்பயணத்துறை ஊக்குவிப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டது. JWG கூட்டு செயற்பாட்டு குழுமத்தின், ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றுவதற்கு இலங்கைக்கு, வெளிநாட்டு அமைச்சர் கௌரவ செனட்டர் பொப் கார் விஜயத்தை மேற்கொண்டார்.

## ஜப்பான்

இலங்கையும் ஜப்பானும் தமக்கிடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டதன் 60 ஆண்டு நிறைவை 2012 இல் கொண்டாடுகின்றன. இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தை குறிக்கும் வகையில் ஜப்பானிய நிதி அமைச்சு ஞாபகார்த்த நாணயம் ஒன்றை வெளியிட்டது.

இந்த நிகழ்வை குறிக்கும் முகமாக அதிமேதகு ஜனாதிபதி 2012 டிசம்பர் 11 இலிருந்து 15 வரை ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளதோடு, 60 வது ஆண்டு நிறைவையொட்டி ஒரு முதல் நாள் உறையையும் ஒரு முத்திரையையும் வெளியிட இலங்கை திட்டமிட்டுள்ளது.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையில் ஏற்கெனவே இருந்த நெருங்கிய உறவுகள் பல்வேறு உயர்மட்ட விஜயங்களினால் இவ்வருடம் மேலும் விஸ்தரிக்கப்படடுள்ளன. வெளிவிவகார அமைச்சர் கௌரவ ஜி.எல்.பீரிஸ், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான விசேட தூதுவருமான கௌரவ மஹிந்த சமரசிங்க, முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சர் கௌரவ நவின் திஸநாயக்க, கௌரவ நாமல் ராஜபக்ஷ, கௌரவ பிரியங்கார ஜயரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் ஜப்பானுக்கு விஜயங்களை மேற்கொண்டனர்.

ஜப்பான் பிரதி பிரதமர் கௌரவ கட்சுயா ஏக்காடா, சமாதானத்துக்கான ஜப்பானிய அரசாங்கத்தின் விசேட பிரதிநிதி, அதிமேதகு தூதுவர் யசூஸி அகா ஆகியோர் ஏற்கெனவே இருந்த எமது உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இலங்கைக்கு கணிசமான அளவு அபிவிருத்தி உதவியை ஜப்பான் தொடர்ந்தும் வழங்கியது. (ODA) உத்தியோக பூர்வ அபிவிருத்தி உதவி இவ்வருடம் 525 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்பட்டது.. இலங்கைக்கு ஆகவும் கூடிய உதவி வழங்குநராக ஜப்பான் உள்ளது. ஜப்பான் நிதி வழங்கிய மேல் கொத்மலை நீர் மின் திட்டம் இவ்வருடம் செயற்படத்தொடங்கியது.

LLRC கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு பற்றிய தன்னுதி மிக்க அபிவிருத்திகள் சம்பந்தமாக தூதரகமானது, வெளிநாட்டு அலுவலகத்திற்கும் இயபுடைய அதிகார பீடங்களுக்கும் விளக்கமளித்தது. 2012 நொவம்பரில் ஜெனிவாவில் இடம்பெற்ற காலநிலை மதிப்பாய்வு அமர்வுகளின் போது ஜப்பான் ஒரு தன்னுதி அறிக்கையினை வெளியிட்டது. கௌரவ அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம மத்திய வங்கி ஆளுனர் மத்திய வங்கியின் மற்றும் நிதியமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களின் விஜயங்களை எளிதாக்குதல். 2012 ஒக்டோபரில் டோக்கியோவில் இடம்பெற்ற இலங்கை முதலீட்டாளர் தினத்தன்று துணைச் சந்தையில் ஜப்பான் யென் 600 மில்லியன் பெறுமதிக்கு, இலங்கையின் அரச பிணைப் பொறுப்பு முறிகளை தாங்கள் கொள்முதல் செய்ததை ஜப்பான் முதலீட்டாளர்கள் உறுதிசெய்தனர். டோக்கியோ பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் (TSE) பட்டியலிடுவதற்கு பட்டியலிடப்பட்ட இலங்கை கூட்டமைப்பை கவர்வதற்கு டோக்கியோ பரிவர்த்தனை நிலையம் தங்கள் ஆர்வத்தினை வெளிப்படுத்தினர்.

METI அமைச்சுடன் இருநாடுகளுக்குகிடேயே அதிகரித்த வணிக மற்றும் பங்குடைமையை உடன்படிக்கைகளை எளிதாக்குவதற்கும் மற்றும் இலங்கையர்களுக்கு அதிகளவிலான தொழிற் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் தூதரகமானது கலந்துரையாடல்களை தொடர்கின்றது.

இலங்கைக்கு JETRO வினால், முதலீட்டு பணியகத்திற்கு எளிதாக்கியுள்ளது. 2012 டிசம்பர் 05 தொடக்கம் 7 ஆம் திகதி வரைக்கும் இலங்கை - ஜப்பான் வியாபார ஒத்துழைப்பு செயற்குழுவின் 17 ஆவது கூட்டிணைந்த கூட்டம் இடம்பெற்றது. ஜப்பானில் இலங்கையின் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பதற்காக நிகழ்ச்சிதிட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டது.

**கொரியா**

இரு நாடுகளுக்கும் இடையில் இடம்பெறும் உயர் மட்ட விஜயங்களால் தென்கொரியாவுடனான உறவுகள் 2012 இல் தொடர்ந்தும் வளர்ச்சி கண்டது. அதிமேதகு ஜனாதிபதி தென் கொரியாவுக்கு ஏப்ரிலில் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டார். அதன்போது அவர் அதிமேதகு ஜனாதிபதி லீ மயுங்-பக் அவர்களுடன் பயன்மிக்க கருத்தாடலை நடத்தினார். தொடர்பாடல் தொழில்நுட்பத்துறையில் ஒத்துழைப்பு, பொருளாதார அபிவிருத்தி மற்றும் மின்சக்தி, வலு என்பவற்றில் தொழில்நுட்ப உதவி ஆகிய மூன்று இருபக்க உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன.

கொரியக் குடியரசின் தேசியப் பேரவையின் (நாடாளுமன்றம்) சபாநாயகர் பாக் ஹீ – ரீ தலைமையிலான கொரிய நாடாளுமன்ற தூதுக்குழு, இலங்கையின் நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் ஜனவரி 2012 இல் இலங்கைக்கு ஒரு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டது.

கொரியாவின் வூ யுங் கல்வி மற்றும் கலாச்சார நிதியத்திலிருந்து இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் பெறப்பட்டன. முதுமாணி, பட்டப்பின்படிப்பு மற்றும் குறுங்கால கல்வி, பயிற்சி திட்டங்களுக்கு பல்கலைக்கழகங்கள், அரசாங்க நிறுவனங்கள் போன்ற பல்வேறு இலங்கை நிறுவனங்களுக்கு புலமைப்பரிசில்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களை தூதரகம் ஒழுங்கு செய்துள்ளது.

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனரத்ன ஆகஸ்ட் 2012 இல் தென் கொரியாவுக்கு விஜயம் செய்தபோது இலங்கையில் தகரத்திலடைத்த மீன் தொழில்சாலை ஒன்றை நிறுவுவதற்கும் கொரியாவுக்கு கடலுணவு சந்தை வாய்ப்புகளை உருவாக்கவும் உள்ள சாத்தியங்களை ஆராய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

கொரியாவிலிருந்து இலங்கைக்கு கிடைக்கும் இருபக்க உதவிகளின் பிரதான மூலமாகவுள்ள எக்ஸிம் வங்கி நிதியத்தின் கீழ்வரும் திட்டங்களை செயற்படுத்த தேவையான உதவிகளை விஸ்தரிக்க, எக்ஸிம் வங்கி, கொரிய சர்வதேச கூட்டுறவு முகவரகம் (KOTCA) மற்றும் இலங்கையின் வெளிவாரி மூலவளங்கள் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து அபிவிருத்திக்கான உதவிகளை மேற்பார்வை செய்தல்

கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அரசதரப்பு கூட்டம் 22 2012 யூன் 4 இலிருந்து 11 வரை நியூயோர்க்கில் நடந்தபோது கண்ட மேடைகளின் எல்லை (CLCS) ஆணைக்குழுவின் அங்கத்துவத்துக்கு போட்டியிட்ட கொரியாவை இலங்கை ஆதரித்தது.

கௌரவ சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் நாணய நிதி ஒத்துழைப்பிற்கான சிரேஷ்ட அமைச்சர், கலாநிதி சரத் அமுனுகம, மற்றும் ITN நிறைவேற்று அதிகாரி, உள்ளடங்கலாக, உயர்மட்டத்து விஜயங்களை எளிதாக்கல், பூகோள பச்சை வலு மன்றம், மற்றும் பூகோள மனித உரிமைகள் அரங்கு 2012 ல் இலங்கையை, தூதரகம் பிரதிநிதிப்படுத்தியது. பேராதனை – அனுராதபுர வீதியின் முன்னேற்றத்திற்கு கொரியா EXIM வங்கியுடன்,US $ 11 mn ற்கு, குறைநிரப்பு கடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

636 புலம்பெயர் தொழிலாளர்களின், வருகைக்கு, தூதரகம் ஒத்தாசை புரிந்து நேரடியான, விமானப் பயணங்கள் ஆரம்பிப்பதற்கு கொரியா விமானப் பயண தூதுக் குழுவினருடன், கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டது. கொரியா குடியரசில், வாழும் இலங்கையர்களின் நன்மை கருதி “ e-people” இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

**தாய்லாந்து**

அதிமேதகு ஜனாதிபதி மே 2012 இல் தாய்லாந்துக்கு மேற்கொண்ட விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான இருபக்க உறவை உறுதிசெய்தது. இந்த விஜயத்தின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான இருபக்க அரசியல் கருத்தாடல் பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் குற்றவியல் விடயங்களில் பரஸ்பர சட்ட உதவிக்கான ஒப்புப்பத்திரங்கள் பரிமாறப்பட்டன. வர்த்தக கூட்டுறவை சுமுகமாக்குவதற்கான ஒரு வணிக, முதலீட்டு அரங்கமும் நடத்தப்பட்டது.
இலங்கையில் சியாம் நிக்காய நிறுவப்பட்டு 260 வது ஆண்டு நிறைவுறும் வரலாற்று சிறப்பு நிகழ்வை கொண்டாடுவதற்காக ஒரு கூட்டுச் செயற்குழுவை அமைக்கும் செயன்முறையில் இரு தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். இரண்டு நாட்டு வெளிவிவகார அமைச்சர்களும், முதலாவது அரசியல் ஆலோசனை கூட்டத்தை இவ்வருடம் ஆகஸ்டில் கொழும்பில் நடத்தின.

கலைகளுக்கான கௌரவ அமைச்சர், ஆகஸ்டில் தாய்லாந்தில் நடைபெற்ற தாயலாந்து - ஸ்ரீ லங்கா கலாச்சார விழாவின் விசேட விருந்தினராக சென்றார். தலதா மாளிகையின் தங்கத்தாலான முடியை புனருத்தாரணம் செய்வதை தாய்லாந்து பொறுப்பேற்றுள்ளது.

2012 டிசம்பர் 14 ஆம் திகதி பாங்கொக்கில் இடம்பெற்ற 260 ஆவது சியாம் நிகாயா கொண்டாட்டங்களில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தலைமை தாங்கிய ஒரு தூதுக்குழுவினர் பங்குபற்றினர். தாய்லாந்தில் அயோத்தயா மற்றும் இலங்கையில் கண்டி புனிதமான இரட்டை நகரங்களாக பிரகடனப்படுத்துவதற்காக இரு நாடுகளுக்குமிடையே ஒரு நகல் வரைவு உடன்படிக்கை பரிமாறிக்கொள்ளப்பட்டது. 2012 நொவம்பர் 27 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 01 ஆம் திகதி வரைக்கும் தாய்லாந்து முதலீட்டு குழுவினர் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டனர். இலங்கையில் வர்த்தக மற்றும் வியாபார ஒத்துழைப்பிற்காக பல சுற்றுலாப்பயணத்துறை ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக ஊக்குவிப்பு செயற் நிகழ்ச்சித்திட்டங்கள் தூதரகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

**வியட்நாம்**

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான உறவுகள் 2012 இல் மேலும் விஸ்தரிக்கப்பட்டன. இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டு ஆணையகத்தின் 3 வது அமர்வு யூலை மாதத்தில் ஹனோயில் நடைபெற்றது. இந்த அமர்வின் முடிவில் இருபக்க விமான சேவைகள் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டன. இந்த கூட்டு ஆணையகத்துக்கான இலங்கைத் தூதுக்குழுவுக்கு கௌரவ வெளிவிவகார அமைச்சர் தலைமை தாங்கினார். அவர் எமக்கிடையே தற்போது உள்ள உறவுகளை உறுதியாக்குவது தொடர்பில் தாய்லாந்து முதலமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோருடன் கலந்துரையாடலை நடத்தினார்.

கூட்டு ஆணையகத்தின் 3 வது அமர்வுக்கு முன், மே மாதம் இரு வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் இடையில் இருபக்க அரசியல் ஆலோசனைக் கூட்டங்கள் கொழும்பில் நடாத்தப்பட்டன.

விவசாய அமைச்சர் கௌரவ மஹிந்த யாப்பா அபயவர்த்தன, கலாச்சாரம் மற்றும் கலை அமைச்சர் கௌரவ ரி.பீ. எக்கநாயக்க, மீன்பிடித்துறை மற்றும் நீர் வளங்கள் அமைச்சர் கௌரவ டாக்டர் ராஜித சேனரத்ன ஆகியோர் வியட்நாமுக்கு விஜயங்களை மேற்கொண்டனர். அதேசமயம் வியட்நாம் நீதியமைச்சர் கௌரவ ஹா ஹுங் குவோங் மற்றும் ஆறு அங்கத்தவர் குழுவும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இலங்கையில் மீன் வளர்ப்பு அபிவிருத்திக்காக வியட்நாம் அரசாங்கம் 100,000 அமெரிக்க டொலரை ஒதுக்கியுள்ளது.

குற்றங்களை தடுப்பதற்கும் அதற்கு எதிராக போராடுவதற்குமாக இலங்கை இராணுவத்தின், பிரதம அதிகாரி தலைமையில் ஆன மூன்று அங்கத்தவர்களை கொண்ட பாதுகாப்பு தூதுகுழுவினர்,மக்கள் பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச ஒத்துழைப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்தனர்.

2012 நொவம்பரில், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி செயலாளரின் விஜயம் இடம்பெற்றது. மற்றும் வியட்நாம் மக்கள் இரானுவத்தின் பொது படையனியின் பிரதி பிரதம அதிகாரி அவர்களை சந்தித்தார். 2012 நொவம்பரில் நடைபெற்ற 7 ஆவது தேசிய பௌத்த கொங்கிரஸ் கூட்டத்திற்கு ஒரு பௌத்த தூதுகுழு பிரசன்னமாயிருந்தது.

மற்றும் பின்னராக ஒரு மத ரீதியான நிகழ்வில் ஹோ சீ மின் நகரத்தை சென்று பார்த்தனர். 2012 நொவம்பர் 25 ஆம் திகதி இலங்கை உணவு வகைகள் இலங்கை தேயிலை மற்றும் சுற்றுலாப்பயணத்துறையை ஊக்குவிப்பதற்கு ஒரு வருடாந்த அறக்கொடை சந்தை ஒழுங்கு செய்யப்பட்டது.

## பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ் அரசாங்க வெள்ள நிவாரண நிதிக்கு நல்லெண்ண குறியீடாக வழங்கப்பட்ட 50,000 அமெரிக்க டொலர் நன்கொடையுடன் 2012 ஆண்டு தொடங்கியது. இது எமது இருபக்க உறவுகளை மேலும் வலுப்பெறச்செய்தது.

2011 செப்டம்பரில் கௌரவ பிரதி வெளிவிவகார அமைச்சர் பிலிப்பைன்ஸுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது விடுத்த அழைப்பின்பேரில் இவ்வருடம் மே மாதம் கொள்கை வகுப்பு உதவிச் செயலாளர் கௌரவ எர்லிண்ட எப். பஸிலோ தலைமையில் மூன்று அங்கத்தவர் தூதுக்குழு ஒன்று உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு விஜயம் செய்தது.

பிலிப்பைன்ஸ் தூதுக்குழுவுடனான இரு பக்க சந்திப்பின்போது பிரதிவெளிவிவகார அமைச்சர் கௌரவ நியோமல் பெரேரா பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திடமிருந்து ஆங்கில ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான உதவியை கோரினார். இந்த உதவியை வழங்குவது தொடர்பில் தற்போது பேசப்பட்டு வருகின்றது. இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த உதவி செயலாளர் வருங்கால பொருளாதார ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள்பற்றி, குறிப்பாக இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மற்றும் ஏசியான் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் என்பவற்றால் வரக்கூடிய நன்மைகள் பற்றி பொருளாதார அமைச்சர் கௌரவ பஸில் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடினார்.

ஆசிய, பசுபிக் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி பெணாடோ விலகஸ் தலைமையிலான பிலிப்பைன்ஸ் வாணிப தூதுக்குழு 2012 மே 24 இலிருந்து 28 வரை கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது. இதன்போது அவர்கள் முதலீட்டு சபை மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பொருத்தமான அதிகாரிகளுடன் வெற்றிகரமான பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

நியூயோர்க் சர்வதேச நீதிமன்றில் 2012 ஏப்ரில் 27 இல் நடந்த தேர்தலில் சர்வதேச நீதிமன்ற அங்கத்துவத்துக்கு போட்டியிட்ட பிலிப்பைன்ஸை இலங்கை ஆதரித்தது.

புனர்வாழ்வு வேலைக்களுக்கு “போ.்.பா” வினால் டவாவோ மாநிலத்தில் ஏற்பட்ட அழிவுகளுக்கு, இலங்கை USD 25,000 நன்கொடையாக அளித்துள்ளது. பிலிப்பைன்ஸ் வெளிநாட்டு விவகாரங்களுக்கான செயலாளரை கௌரவ ஜீ.எல்.பீரிஸ் இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். 2012 நொவம்பரில் 22-25 வரைக்கும் இடம்பெற்ற பூகோள கால மீள்பார்வை மன்றின் 14 வது அமர்வின் போது இலங்கைக்கு பிலிப்பைன்ஸ் ஆதரவு அளித்தது. இலங்கைக்கு ஆங்கில ஆசிரியர் பயிற்சிகளை வழங்குவதற்கு பிலிப்பைன்ஸ் இனங்கியது. மற்றும் சமகாலத்தில் இதை ஒற்றிய கலந்துரையாடல்கள் நடைபெறுகிறது. பூகோள புலம்பெயர் மற்றும் அபிவிருத்தி பட்டறையில் வெளிநாட்டு தொழிற்வாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலனோம்பு அமைச்சின் செயலாளர் திரு. நிசாங்க சிஜயரட்ண பங்குபற்றினார்.

## மலேசியா

பொருளாதார, அரசியல், சமூக மற்றும் கலாச்சார உறவுகள் என பல விடயங்களையும் அடக்கி மலேசியாவுடனான உறவுகள் பல வருடங்களாக தொடர்ந்து அதிகரித்துள்ளது. இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அமைச்சர் கௌரவ டலஸ் அழகபெரும மார்ச் மாதம் மலேசிய விஜயத்தை மேற்கொண்டபோது இலங்கையின் தொழிலாளர்களை பயிற்றுவதற்கான திட்டமொன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆசியாவின் நிதி உறுதிப்பாட்டு சபையின் பிராந்திய கூட்டுறவு குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ள மத்திய வங்கி ஆளுநர் திரு அஜித் நிவாட் கப்ரால் மே மாதம் மலேசியாவுக்கு விஜயம் செய்தார்.

குறிப்பாக பொருட்களை கப்பல் மாற்றி ஏற்றுதல், கப்பல் சரக்கு அனுப்புதல் மற்றும் எண்ணெய் நிரப்புதல் அடங்கலான துறைமுக சேவையில் முதலீடு செய்யக்கூடிய வாய்ப்புகள் உள்ள துறைகளை ஆராயவென 20 வருட இடைவெளிக்குப்பின் இந்த குழு இலங்கைக்கு வந்தது.

இரு நாடுகளுக்கும் இடையில் கூட்டுறவை வளர்ப்பதற்கும் இரு நாடுகளுக்கும் இடையிலான தொழில் உறவு தொடர்பாக கையொப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வெளிநாட்டு தொழிலாளர்களின் நிலைமையை முன்னேற்றவும் திட்டம் வகுப்பதில் இரு நாடுகளும் இறங்கியுள்ளன.

அரசாங்கத்தின் மோதல்களுக்கு பின்னரான முன்னேடுப்புக்களில் அவர்களின் உதவிகளை பெறுவதற்காக மலேஷியா நிறுவனங்களோடு இருதரப்பு அரசியல் உறவுகளை மேம்படுத்துவதற்கான பல கலந்துரையாடல்களை இந்த தூதரகமானது மேற்கொண்டது. மேலும் பூகோள காலக்கிரம மீள்பார்வை அமர்வில் அவர்களுடைய ஆதரவிற்கு கோரிக்கை விடப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே உறவுகளை மேற்படுத்துவதற்காகவும், புலம்பெயர் தொழிலாளர்களின் நிலைமைகளை முன்னேற்றுவதற்கும் விவசாய அமைச்சின் ஒருங்கமைப்புடனும் ஒரு வர்த்தக கணகாட்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

## இந்தோனேசியா

இருதரப்பு உறவுகளில் உண்டான கணிசமான முன்னேற்றத்தை குறிக்கும் வகையில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான 1 வது கூட்டு ஆணையம் ஜனவரியில் நடத்தப்பட்டது. வெளிவிவகார அமைச்சர் அதிமேதகு டாக்டர் மாட்டி நத்தலகவ சிரேச்ட அதிகாரிகள் சகிதம் இந்த ஆணையகத்துக்கு வருகை தந்தார். இதன்போது ஒத்துழைப்புக்கான பல்வகை விடயங்கள் ஆராயப்பட்டு மேலும் ஒத்துழைப்புக்கான விடயங்கள் இனங்காணப்பட்டன. கூட்டு ஆணையகத்தின் கூட்த்தின் போது இராஜ தந்திர கல்வி மற்றும் பயிற்சி தொடர்பாகவும் கலாச்சார ஒத்துழைப்பு தொடர்பாக இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டன. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான இணைப்பை வலுப்படுத்தும் வகையில் இருபக்க விமான சேவை ஒத்துழைப்பு தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மே 2012ல் கைச்சாத்திடப்பட்டது. அணிசேரா மாநாடு ஆகஸ்ரில் நடந்த போது அதற்கு அப்பால் வெளிவிவகார அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ்சிற்கும் இந்தோனேசியா வெளிவிவகார அமைச்சர் இடையில் மிகுந்த பலனளித்த கலந்துரையாடல் இடம் பெற்றது. பல முக்கிய அமைச்சர்களின் விஜயத்தின் பலனாக இலங்கைக்கும் இந்தோநேசியாவிற்கும் இடையிலான உறவுகள் 2012 ல் தொடர்ந்துது வளர்ச்சி கண்டது. கேளரவ ரவூப் கக்கீம் கௌரவ டாக்ரர் ராஜித்த சேனாரத்ன, கௌரவ சலிந்த திசாநாயக்க கௌரவ மகிந்த் அமரவீர, கௌரவ ரிசாட் பதியுதீன் ஆகிய அமைச்சர்கள் இந்தோனேசியாவிற்கு இருதரப்பு விஜயங்களை மேற்கொண்டனர்.

கௌரவ மகிந்த அமரவீர EDB ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் தலைவர் திரு. ஜானக இரத்தினாயகா, கௌரவ ஜீ.எல்.பீரிஸ் மற்றும் கௌரவ பாட்டாலி சம்பிக்க ரணவக்க ஆகியோரின் உயர் மட்டத்திலான விஜயங்களுக்க வசதியளிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு ஒக்டோபரில் பாதுகாப்பு சேவைகள் தலைமையகம் மற்றும் இலங்கை பணித்துறை பயிற்சிகல்லூரியில் இருந்து ஒரு தூது குழுவினர் இந்தோனேசியாவிற்கு விஜயத்தினை மேற்கொண்டனர்.

**சிங்கப்பூர்**

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான இருபக்க உறவுகள் பல துறையிலும் 2012ம் ஆண்டில் வளர்ச்சி கண்டுள்ளன. அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 2012 பெப்ரவரியில் மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயத்தை தொடர்ந்து ஏற்கனவே இருந்த சுமுகமான உறவுகள் மேலும் வளர்ச்சி கண்டன. இந்த விஜயத்தின் போது அதிமேதகு ஜனாதிபதி டொனி டான், பிரதமர் லீ சியன் லூங் ஆகியோருடன் கலந்தரையாடல்களை நடத்தினார். பாதுகாப்பு அமைச்சர் எங் கென் இரு நாடுகளுக்குமிடையிலான வணிக மற்றும் முதலீட்டு உறவுகள் தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டார். தென்னாசிய கற்கைகள் நிறுவனத்தில் (ISAS) இடம்பெற்ற பரஸ்பர உறவாடல் அமர்வின் காரணமாக ISAS ற்கும் சர்வதேச உறவுகள் மற்றும் தந்திரோபாய கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிறுவனத்திற்கும் (LKIIRSS) இடையிலான ஒத்துழைப்பிற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே சண்முகம் மற்றும் சட்ட அமைச்சர் ஆகியோர் சிங்கப்பூர் வணிக சம்மேளனத்தின் வணிக தூதுக்குழுவினருடன் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

கௌரவ வெளிவிவகார அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபாய ராஜபக்கச ஆகியோர் தலைமை தாங்கிய ஓர் உயர் மட்ட இலங்கைத் தூதுக்குழு சங்றி- லா டயலொக்கில் யூன் 2012ல் பங்கு பற்றியது. வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறையில் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை விஸ்தரிப்பதற்கான வழிவகைகளை தீர்மானிப்பதற்காக சிங்கப்பூருக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒரு கூட்டுக்குழுவை நியமிக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன. வர்த்தக உறவுகளை வலுவூட்டும் வகையில் இலங்கையின் முதலீட்டு சபைக்கும் சிங்கப்பூர் வாணிப சம்மேளனத்திற்கும் இடையில் பெப்ரவரி 2012ல் ஒரு முதலீட்டு ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

சிங்கப்பூர் உயர்ஸ்தானிகர் ஆலயம் மற்றும் இலங்கை- சிங்கப்பூர் வாணிப மன்றம் என்பனவற்றின் கூட்டு முயற்சியாக மே 2012ல் கொழும்பில் இலங்கை- சிங்கப்பூர் அரங்கம் நடத்தப்பட்டது இது இலங்கையில் நடைபெற்ற முதலாவது அரங்கமாகும். இது தொடர்ந்து வருடந்தோறும் நடத்தப்பட உள்ளது. தூதரகமானது சிங்கப்பூர் வெளிவிவகார மற்றும் சட்ட அமைச்சரின் விஜயத்திற்கு வசதியளித்தது. வர்த்தகம் மற்றும் கலந்துரையாடல்களுக்கான டெம செக் அறக்கொடை தர்ம ஸ்தாபனத்திற்கு கௌரவ நிரோஷன் பெரேரா மற்றும் கௌரவ வசந்தா சேனநாயகா பங்குபற்றினார்கள் மற்றும் தூதரகம் இந்த விஜயத்திற்கு வசதியளித்தது. கலாச்சார சுற்றுலாப் பயணத்துறை மற்றம் வர்த்தக ஊக்குவிப்புக்கள் தூதரகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டது.

**மியன்மார்**

இலங்கையின் மியன்மார் உடனான உறவு, வர்த்தகம், பொருளாதாரம், கலாச்சாரம் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் தொடர்ந்து வளர்ச்சி கண்டது. மலிகஸ்பேயிலுள்ள சுபத்திரா ராம புராண துறவி மடத்தைச் சேர்ந்த வண பள்ளத்தர சிறிசுமண யோதி தேரோவிற்கு மியன்மார் அரசாங்கம் மார்ச் 2012ல் நே பி டோவில் அகமக பண்டித எனும் பட்டம் அளித்து கௌரவித்தது. கொழும்பில் மார்ச் 2012 ல் நடந்த எக்ஸ்போ சிறிலங்கா கண்காட்சியில் மியன்மார் தூதுக்குழு ஒன்று கலந்து கொண்டது.

# மத்திய கிழக்குப் பிரிவு

# மத்திய கிழக்குப் பிரிவு

**அறிமுகம்**

மத்திய கிழக்கு பிரிவு, மத்திய கிழக்குபிராந்தியத்தில் அமைந்துள்ள பஹரேன்,ஈரான்,ஈராக், இஸ்ரேல்,ஜோர்தான்,குவைத், லெபனான், ஓமான், பாலஸ்தீன், கடார், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிரியா மற்றும் யெமன் போன்ற நாடுகளுடன் இலங்கை நடாத்தும் அரசியல் உறவுகள் இந்த நாடுகளில் அமைந்துள்ள இலங்கை துாதரகங்களுடன் இணைந்து மற்றும் மற்றும் இணைவாக்கத்துடன் உடன்நிகழ் பதவுகளினுாடாக மேற்கொள்கின்றது.

மத்திய கிழக்கு நாடுகளுடன் இலங்கை பேணும் உறவுகள் ஒரேமாதிரியான உள்ளன்புடனும், நட்புணர்வுடனும் பல நுாற்றாண்டுகளுக்கு முன்னர் ஆதி வாசிகள் மற்றும் இங்கு வருகைத்தங்த அறேபியா வர்த்தகர்களிடையே வர்த்தக நடவடிக்கைகள் உற்சாகத்தோடும், இலாபகரமானதாகவும் இருந்த காலத்தில் தென் ஆசியா நாடுகளின் அரேபியா தேசத்தவர்களின் பிரவேச வழியாக இந்தியா சமுத்திரம் கருதப்பட்டது. 1948 ஆம் ஆண்டில் மீண்டும் சுதந்திரத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர், மத்திய கிழக்கு நாடுகளுடன் இலங்கை பேணும் உறவுகள், விஷேடமாக மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட பிரதான பிரச்சினைகளின்போது கொள்கை ரீதியாக இலங்கை செயல்படு கொள்கையுடன் பெரும் வெளிப்போக்குகள் எதிர்வு காட்டின.

**மத்திய கிழக்கு பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டள்ளது.**

- மத்தியகிழக்கு பிராந்திய நாடுகளில் அரசியல் மேம்பாடுகள் அவதானித்தல் மற்றும் விரிவான அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் மதிப்பீடு.
- அதி மேன்மைதகு ஜனாதிபதி, கௌரவ பிரதம மந்திரி மற்றும் கௌரவ வெளி விவாகார அமைச்சர் ஆகியோர் சார்பில்வெளிநாட்டின் தலைவர்கள், சனாதிபதிகள், பிரதம மந்திரிகள்,வெளி விவாகார அமைச்சர்கள் சார்பில் அனுப்பபடுகின்ற அழைப்பிதழ்கள், வாழ்த்துக்கள், இரங்கல் செய்திகள் மற்றும் செய்தி கிடைத்தமை தெரியப்படுத்தி அனுப்பப்படும் கடிதங்கள் போன்ற சர்வதேச நல்லுறவை மேம்படுத்துவதற்காக இணக்க நயப் பண்பு தொடர்பான விடயங்களை தயாரித்தல்.
- நாடு தொடர்பான சுருக்கமான மற்றும் அறிவுறுத்தும் சொற்பொழிவாற்றல் குறிப்புக்கள்
- இரு தரப்பு கூட்டங்களின்போது அதிமேன்மைதகு சனாதிபதி ,கௌரவ பிரதம மந்திரி மற்றும் கௌரவ வெளி விவாகார அமைச்சருக்கு பயன்படும் வகையில் நாடு தொடர்பான சுருக்கமான மற்றும் அறிவுறுத்தும் சொற்பொழிவாற்றல் குறிப்புக்களை ஒழுங்கமைத்தல்
- குறித்த அமைச்சுகள் மற்றும் வெளிநாடுகளில் அமைந்திருக்கும் இலங்கை துாதரகங்களுடன் இணைந்து உயர்மட்ட சந்திப்புகள்,கலந்துரையாடல்களின் ஒருங்கிணைப்பு மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளை முடிவுசெய்தல்.
- மத்திய கிழக்கு நாடுகளை பிரதிநிதிப்படுத்தி கொழும்பில் அமைந்திருக்கும் வெளிநாட்டு துாதரகங்கள் மற்றும் மதிப்புறு உதவித் துாதர் அலுவலக வலையமைப்பில் செயலாற்றுதல்.
- மத்திய கிழக்கு பிராந்திய நாடுகளில், அரசு மற்றும் பிரதி நிறுவனங்கள் மூலம் இலங்கையிற்கு வழங்கும் புலமைபரிசில்கள் மற்றும் அதி விஷேட புலமை பரிசில்கள் தொடர்பாக நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

**இருதரப்பு உறவுகள்**

**பஹ்ரைன்**

- அதிமேன்மைதகு சனாதிபதி மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் 2013 பெப்ருவரி மாதம் இலங்கை பஹ்ரேனில் மனாமா எமது முதலாவது தூதரகம் தொடங்கிவைக்கப்பட்டது.

**குவைட்**

- மனித உரிமை மன்றத்தின் அமர்வு தொடர்பான காரணங்களை கலந்துரையாடுவதற்காக அதிமேன்மைதகு சனாதிபதியின் விஷேட பிரதிநிதியாக நீதித்துறை அமைச்சர் ரவுப் ஹகீம் அவர்கள் 2012 மார்ச் 13-15 ஆந் திகதிகளில் குவைட் இல் விஜயம் செய்ததுடன், இக்ரா இஸ்லாம் குழுவில் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொள்வதற்காக 2012 மே மாதம் 31- ஜுன் 05 ஆந் திகதி வரை மீண்டும் குவைட் பிரயாணத்தில் ஈடுபட்டார்.

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர்கௌரவ டிலான் பெரேரா அவர்கள் 2012 மே மாதம் 09 மற்றும் 12 ஆந் திகதிகளில் குவைட் நாட்டை பார்வையிடுவதற்கு சென்றவேலைளையில், தொழிலாளர்களை சேரத்துக்கொள்ளுதல் மற்றும் ஆள்வள அபிவிருத்தி துறை தொடர்பாக இரு நாடுகளிடையே நல்லுறவு ஒப்பந்தத்திற்கு கைசாத்திட்டார்.

- முதலாவது ஆசியா ஒத்துழைப்பு உரையாடல் உச்சி மாநாடு 2012 ஒக்டோபர் 13-17 வரை நடாத்தப்பட்டது.மேன்மைதங்கிய சனாதிபதி கௌரவ வெளிநாட்டு விவகார அமைச்சர் மற்றும் பிரதிநிதிகள் குழு இதற்கு கலந்துகொண்டனர்.இந்த மாநாட்டிற்கு உடனிகழ்வாக ஜப்பான், தாய்லாந்து மற்றும் பாகிஸ்தானுடன் இரு தரப்பு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டது.

**ஈரான்**

- கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ றிசாத் பதுார்தீன் அவர்கள் 2012 திசெம்பர் 08-12 ஆந் திகதிகளில் ஈரான் விஜயத்தில் ஈடுபட்டார். இந்த விஜயத்தின்போது ஈரான் இல் வர்த்தக, பெற்றோலிய் மற்றும் வெளிநாட்டு விவகார அமைச்சர்களுடனும், மத்திய வங்கியின் முஸ்தபாசென் அறநிறுவனத்தின் முதுநிலை அலுவலர்களுடனும் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- நீதித்துறை அமைச்சர் கௌரவ ரவுப் ஹகீம் அவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.டி.ஹசன் அவர்கள் 2012 திசெம்பர் 22-23 ஆந் திகதிகளில் ஈரான் பிரயாணத்தில் ஈடுபட்டனர். ரவுப் ஹகீம் அவர்களின் விஜயத்தின்போது ஈரான் நீதித்துறை அமைச்சர், நீதித்துறை பிரிவின் தலைவர் மற்றும் பாராளுமன்ற சபாநாயகர் உட்பட ஈரான் உயர்பதவியிலுள்ள பலருடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

**ஈராக்**

- 2012 பெப்ருவரி 07 ஆந் திகதி இலங்கை தூதுவராலயம், தூதரக பொறுப்பாளா் மட்டத்தில் மீண்டும் திறந்துவைக்கப்பட்டது.
- 2012 நொவெம்பர் மாதம் 01 ஆந் திகதி ஜினீவாவில் நடந்த உலக காலமுறை மீள்நோக்கு 14 ஆவது கூட்டத்தொடரின்போது, இலங்கையிற்கு உதவி வழங்குமாறு 20-12 ஒக்டோபர் 24 ஆந் திகதி நடந்த மாற்றால் முறை தூதுவரலாய தலைவர் கூட்டத்தின்போது ஈராக் அரசினால் கோரப்பட்டிருந்தது.

**இஸ்ரேல்**

- நீர்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சர் கௌரவ நிமால் சிறிபால டி சில்வா அவர்களின் தலைமையிலான பாராளுமன்றக் குழுவினர் 2012ஜனவரி 29 –பெப்ருவரி 01ஆந் திகதிகளில் இஸ்ரேல் சென்றனர். கௌரவ. நியோமல் பெரேரா பிரதி வெளிவிவகார அமைச்சரும் இந்த குழுவில் இருந்தார்.

**ஓமான்**

- ஓமான் நாட்டின் எண்ணெய் மற்றும் வாயு அமைச்சர் அதி மேதகு கலாநிதி முகமட் பின் ஹமட்அல்-ரூமி அவர்கள் 2012 ஜனவரி 26-28 காலப்பகுதியில், இலங்கை வந்தார்.அப்போது அவர் பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர கௌரவ சுசில் பிரேம ஜயந்த மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ஷ,ஆகிய இருவரையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டார்

- வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர்கௌரவ டிலான் பெரேரா அவர்கள் 2012 மே மாதம் 17-19 காலப்பகுதியில் ஓமான் மனித சக்தி அமைச்சருடன் மற்றும் ஓமான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையின் தலைவருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

- ஓமான் சுல்தான் குடியரசின் வெளிநாட்டு விவகார அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு விவகார அமைச்சிடையே இரு தரப்பு மதியுரைத் தொடர்பான நல்லுறவு உடன்படிக்கையிற்கு 2012 ஒக்டோபர் மாதத்தில் கைச்சாத்திடப்பட்டது. இந்த நல்லுறவு உடன்படிக்கையில் இரு நாடுகளிடையே இரு தரப்பு உறவுகளின் மேம்பாட்டினை பரீட்சித்தல் மற்றும் அரசியல், பொருளாதார, கலாச்சார, தொழில்நுட்ப, விஞ்ஞானம் மற்றும் கல்வி உறவுகள் உள்ளடங்களாக பொதுவாக அக்கறைக் காட்டும் பிராந்திய மற்றும் சர்வதேச பிணக்குகள் தொடர்பாக கருத்துக்கள் மற்றும் எண்ணங்களை பரிமாற்றிக்கொள்ளுதல் இதன் விஷேட தொழிற்பாடாகும்.

**கட்டார்**

- அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில்,கட்டார் நாட்டு அரசர் ஆனவர்அதி உத்தம Shiekh Hamad Bin Khalifa Al Thani,2012 ஜனவரி 15-16அன்றுஇலங்கை வந்தார். அந்நாட்டு அரசுத் தலைவர்கள் இலங்கையில் ஈடுபட்ட முதலாவது விஜயம் இதுவாக இருந்தது. கட்டார் நாட்டு அரசருடன் இங்கு வருகைத்தந்த உயர் மட்டத்திலான பிரதிநிதிகள் குழுவில் அமைச்சர்கள், முதுநிலை அதிகாரிகள் மற்றும் முதன்மை வரத்தக பிரமுகர்கள் உள்ளடங்கியிருந்தனர்.

- இலங்கை –கட்டார் உறவுகளின் முக்கிய மைல்கல்லினை பிரயோகித்து கடார் மற்றும் இலங்கையிற்கிடையே முதன்மை இணைக் கூட்டு குழு நிலைநிறுத்துவதற்காக சைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையிற்கு மேலதிகமாக, முதலீடு, பொருளாதார ஒத்துழைப்பு, சுற்றுலா நடவடிக்கைகள், உயர்கல்வி, விவசாயம் மற்றும் நீதித் துறை என்ற துறைகளை உள்ளடக்கி இரு நாடுகளிடையே இரு தரப்பு உடன்படிக்கைகள், நல்லுறவு உடன்படிக்கைள் என (09) இற்கு கைச்சாத்திட்டன.

**உடன்படிக்கைகள்/ நல்லுறவு உடன்படிக்கைள் பின்வருமாறு**

- முதல்தர இணைக் கூட்டு குழு நிலைநிறுத்துவது தொடர்பான நல்லுறவு உடன்படிக்கை
- கல்வி, உயர் கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் மற்றும் துறைவாரியான ஒத்துழைப்பிற்கான நல்லுறவு உடன்படிக்கை
- பொருனாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கை
- கலாச்சார துறையின் ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை
- நீதித்துறையின் ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை
- சுற்றுலா அலுவல்கள் துறையின் ஒத்துழைப்பிற்கான நல்லுறவு உடன்படிக்கை
- ஆதனச்துறை ஒத்துழைப்பிற்கான நல்லுறவு உடன்படிக்கை

கடார் நாட்டு அரசரின் பெருமாட்டியான அதிமேன்மை செயிடா மெசெங் பின்ட் நசர் அல் மிங்னெட் அவர்களின் அழைப்பின் பேரில் இலங்கையின் சனாதிபதியின் பெருமாட்டி அதிமேன்மை சிராந்தி இராஜபக்ஷ அவர்கள் " இடர்ப்பாடு, முரண்பாடு மற்றும் இயலாமை: சமநிலையினை உறுதிப்படுத்துதல்" நடந்த சர்வதேச சபல்லாஹ் ஐந்தாவது மன்றத்தில் கலந்துகொள்வதற்காக 2012 சனவரி மாதம் 20-22 ஆந் திகதிகளில் கடாருக்கு விஜயம் செய்தார்.

இலங்கையின் ஜனாதிபதி மேதகு மஹிந்த ராஜபக்ஷ அவர்கள்2012 மே மாதம் 20-22 ஆம் காலப்பகுதியில் அதி 12ஆவது டோஹா கூட்டத்தில் (Forum)பங்குபற்ற கட்டார் நாட்டுக்கு சென்றார்.அதி உத்தம Shiekh Hamad bin Khalifa Al Thani–கட்டார் நாட்டு அரசரின் அழைப்பின் பேரில் இலங்கை ஜனாதிபதி சர்வதேச சிறப்பு விருந்தினராக இந்த கூட்டத்தில் பங்குபற்றினார்.

**ஐக்கிய அரபு இராச்சியம் (U.A.E.)**

- 2012 ஜுன் 27-28 ஆம் காலப்பகுதியில் துபாயில் நடைபெற்ற பொதுவாக அல்லது–தனிப்பட்ட வகையில் கடற்கொள்ளைகளை தடுப்பது தொடர்பான உயர் மட்டத்திலானமாநாட்டிற்கு கலந்துகொண்ட மூன்று அங்கத்தவர்களினாலான பிரதிநிதிகள் குழவின் தலைமைத்துவம் வெளிவிவகார பிரதி அமைச்சர்கௌரவ நியோமல் பெரேரா அவர்கள் வகித்தார். 22-24 ஒக்டோபர் 2012 காலப்பகுதியில் இலங்கை அதி மேதகு ஜனாதிபதி டுபாயில் நடைபெற்ற உலக சக்தி மாநாட்டில் பங்குபற்ற U.A.Eசென்றார்.

**சவூதி அரேபியா**

- வெளிநாட்டு விவகார அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் 2012 மார்ச் 12 ஆந் திகதி சவுதி அரேபியாவில் சுற்றுலாவில் ஈடுபட்டதுடன், அங்கு வெளிநாட்டு விவகாரம் தொடர்பாக பதில் கடமைபுரி அமைச்சர் அப்துல் பின் அப்துல்லாஹ் இளவரசர், றியாத் ஆளுநர் சத்தம் பின் அப்துல் அஸீஸ்இளவரசர் மற்றும் சுறா மன்றத்தின் தவிசாளர் அப்துல்லாஹ் அல்- அஷெய்க் அவர்களைச் சந்தித்து உரையாடல்களை மேற்கொண்டார்.

- அபிவிருத்தியிற்கான சவுதி நிதியத்தின் பிரதிநிதிகள் குழ 2012 ஒக்டோபர் 27-30 ஆந் திகதிகளில் இலங்கையிற்கு வந்தனர். சவுதி அரேபியாவின் நிதி அமைச்சர் மற்றும் அபிவிருத்தியிற்கான சவுதி நிதியத்தின் தலைவர் மற்றும் அபிவிருத்தியிற்கான சவுதி நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் இந்த பிரதிநிதிகள் குழுவிற்குள் உள்ளடங்கப்பட்டனர்.

**பன்முக உறவுகள்**
**கட்டார்**

வர்த்தக மற்றும் அபிவிருத்தி மாநாட்டின் (UNCTAD XIII)13ஆவது அமர்வில் பங்கு பற்ற கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் கௌரவ றிச்சார்ட் பதியுடின் அவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழு,2012 ஏப்ரல் 21-26 ஆம் காலப்பகுதியில் தோஹா-கட்டார் சென்றார்கள்.

- தபாலதிபர்நாயகம் டி.எல்.பி.ஆர். அபேரத்ன அவர்கள் மற்றும் இலங்கை தபால் சேவையிலுள்ள முதுநிலை அதிகாரிகள் நான்கு பேர் 2012 செப்டெம்பர் 24-ஒக்டோபர் 15 வரையிலான காலப்பகுதியில் நடந்த உலக தபால் சங்கத்தின் (UPU)- தொஹா 25 ஆவது கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

- தென் மாகாணத்தின் விவசாயம், நீர்பாசனம்,வேளாண்மை அபிவிருத்தி, கைத்தொழில் மற்றும் சுற்றாடல் அமைச்சர் கௌரவ விஜய எஸ் வீரசிங்க அவர்கள் மத்திய பகுதியின் விவசாய மற்றும் சுற்றாடல் விவகார அமைச்சர் கௌரவ நிமல் பியதிஸ்ஸ அவரகள் மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் வெளிநாட்டு விவகார அமைச்சின் முதுநிலை அதிகாரிகள் மற்றும் வேறு குறித்த அமைசச்சுகள்/ திணைக்களங்களின் அதிகாரிகள் 2012 நொவெம்பர் 26 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 07 ஆந் திகதி வரை நடாந்த ஐக்கிய நாடுகள் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மாநாடு COP18, CMP8, தொஹா-2012 இற்கு கலந்துகொண்டனர்.

- இலங்கை ஆயுதப்படையின் உத்தியோகத்தர்கள் 2012 ஒக்டோபர் 02-04 ஆந் திகதிகளில் நடந்த “பெல்கன்”(3) 2012 இணைந்த பயிற்சி /ஈகல் ரிசொல்வ்–கடார் இ.ற்காக கலந்துகொண்டனர்.

**ஐக்கிய அரபு இராச்சியம் (U.A.E.)**

கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் துபாய் சென்றதுடன், 2012 மே மாதம் 01-03 ஆந் திகதிகளில் நடாத்தப்பட்ட வருடாந்த முதலீட்டு கூட்டத்தில் பங்குபற்றினார். இந்த விஜயத்தின்போது கௌரவ அமைச்சர் மற்றும் பிரதிநிதிகள் குழு இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றி கருத்துக்களை முன்வைத்தனர்.

இலங்கையின் மேன்மைதங்கிய சனாதிபதி, 2012 ஒக்டோபர் 22-24 ஆந் திகதிகளில் நடந்த உலகசக்தி மன்றத்தில் 2012 இற்காக கலந்துகொள்வதற்காக டுபாய் சென்றார். இந்த பிரதிநிதிகள் குழுவிற்கு சனாதிபதி பெருமாட்டி மற்றும் வெளிநாட்டு அலுவல்களுக்காக மேற்பார்வை உறுப்பினர் கௌரவ சஜித் வாஸ் கணவர்தன அவர்களும் உள்ளடங்கப்பட்டார்.

இலங்கையின் சனாதிபதி பெருமாட்டி சிரந்த இராஜபக்ஷ அவர்கள் 2012 ஒக்டொபர் 23 ஆந் திகதி டுபாய் இல் நடாந்த நிலைபாட்டு அபிவிருத்தி தொடர்பான சனாதிபதி பெருமாட்டிகளின் மாநாட்டில் கலந்துகொண்டார்.

**பொருளாதார உறவுகள்**

**குவைத்**

- உயர் கல்வி அமைச்சர் கௌரவ எஸ்.பி.திசநாயக்க, அவர்கள் மற்றும் பிரதிநிதிகள் குழுவினர் குவைத் சென்று,அங்கு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்தின் கூட்டத்தில் பங்குபற்றினர். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கருத்திட்ட மதிப்பீட்டிற்கு 12 மில்லியன் அமெரிக்கா டொலர் ஒதுக்கப்பட்டது.

**ஐக்கிய அறபு எமீர் குடியரசு**

- வருடாந்த முதலீட்டு கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகார அமைச்சர், 2012 மே மாதம் 1-3 அந் திகதிகளில் டுபாய் சென்றார்.

- கௌரவ வெளிநாட்டு விவகார அமைச்சர் ஐக்கிய அறபு எமீர் குடியரசிற்கு சென்று அங்கு இரு நாடுகளிடையே இணைந்த ஆணைக்குழுவொன்றினை நிலைநிறுத்தினார். அங்கு பொதுவாக அக்கறை காட்டும் மற்றும். இரு நாடுகளிடையே ஒத்துழைப்பை மற்றும் இருதரப்பு உறவுகள் வலுப்படுத்துவதற்காகவுள்ள வழிகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நிகழ்த்தினார்.

- 2012 ஒக்டோபர் 22-24 ஆந் திகதிகளில் டுபாய் இல் நடாந்த உலக சக்தி மாநாடு -2012 இற்கு உடனிகழ்வாக, மேன்மைதகு மகிந்த இராஜபக்ஷ அவர்கள், பெதுவாக அக்கறை காட்டும் காரணங்களை கலந்தாலோசிப்பதற்காக ஐக்கிய அறபு எமீர் குடியரசின் பல அமைச்சர்களைச் சந்தித்தார்.

**சவுதி அறேபியா**

றியாத் மற்றும் ஜெடாவில் அமைந்துள்ள எமது தூதரகங்களால் ஹஜ்ஜி மற்றும் உம்ரா வழிபாடுகளுக்கு தேவையான உதவி வழங்குகின்றன. ஜெடா விமானநிலையத்திற்கு வழிபாட்டாளர்கள் வரும்போது வரவேற்றுதல், ஹஜ்ஜி காலத்தில் மக்கா, மதீனா, மீனாமற்றும் அரபா வழிபாட்டாளர்களின் நலன்புரி நடவடிக்கைகளை நிறைறே்றுதல் மறறும் ஜெடா இல் இருந்து வழிபாட்டாளர்கள் வெளியேறும்போது தேவையான உதவிகளை வழங்குவதும்இதற்குள் உள்ளடங்குகின்றது. சவுதி அதிகாரிகள் 3000 வழிபாட்டாளர்களுக்கு கோட்டா இலங்கை சார்பில் வழங்கியுள்ளது.

**ஐக்கிய அறபு எமீர் குடியரசு**

மத்தியகிழக்கு நாடுகளில் வாழும் தகைமையுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் இனங்கண்டு விருது வழங்கும் நோக்கில் "த ரணவிரு டலன்ட் ஸ்டார்" நிகழ்ச்சியிற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் கௌரவ டிலான் பெரேரா அவர்கள் கலந்துகொண்டார்.

**ஜோர்டான்**

பெப்ரவரி 2012 இல் கௌரவ பேராசிரியர் ஜி.எல்.பிரிஸ் - வெளிவிகார அமைச்சர்,ஜோர்டான் சென்று பிரதம மந்திரியும், பாதுகாப்பு அமைச்சருமான

கலாநிதி.Awn Khasawnehஉடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளை அமானில் உள்ள பிரதம மந்திரியின் உத்தியோக பூர்வ ஸ்தலத்தில் நடத்தினார்

**குவைத்**

13-15 மாரச் 2012 காலப்பகுதியில் HRCஅமர்வு சம்பந்தமான கலந்துரையாடலில் பங்கு பற்ற அதிமேதகு ஜனாதிபதி இன் விசேட தூதுவராக , கௌரவ ரவ் பக்கீம் -நீதி அமைச்சர் குவைத் சென்றார். 31 மே - 5 யூன் காலப்பகுதியில் மீண்டும் அமைச்சர் இக்ரா இஸ்லாமிக் குழுவின் 20 ஆம் வருடாந்த விழாவில் பங்கு பற்ற குவைத் சென்றார்.

9-12 மே 2012 காலப்பகுதியில் கௌரவ டிலான் பெரேரா, வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் குவைத் சென்றார். இதன் போது இரு நாடுகளுக்கிடையோன தொழில் ஆட்சேர்ப்பு மற்றும் மனித வள அபிருத்தி துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

**லெபனான்**

அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இலங்கை ஜனாதிபதிக்கும் லெபனான் அதி மேதகு ஜனாதிபதிக்கும் இடையயான இருபக்க சந்திப்பை இலங்கை தூதரகம் தெஹிரானில் 26ஆவது அணி சேரா உச்சி மாநாடு நடைபெற்ற வேளை ஒழுங்கு செய்தது.

**பலஸ்தீன்**

15-17 ஏப்ரல் 2012 காலப் பகுதியில் அதி மேதகு முகமட் அபாஸ், பாலஸ்தீன் நாட்டு ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம் செய்தார். இதன் போது இரு நாடுகளும் இரு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டன. அவையாவன: (1)இரட்டை வரியை தவிர்த்தல் மற்றும் வருமான வரியில் நிதித் தவிர்ப்பை தடுத்தல் (2) இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் பலஸ்தீன வெளிநாட்டு அலுவல் அமைச்சுகளுக்கிடையேயான அரசியல் ஆலோசனைகளின் மரபுச்சீர்முறை(protocol).

18-21 பெப்பரவரி 2012 காலப்பகுதியில் கௌரவ நாமல் ராஜபக்ஷ(ஆ), அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராக பலஸ்தீன் சென்றார். கௌரவ பைசர் முஸ்தப்பா, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி பிரதி அமைச்சர், கௌரவ றோகான் புஸ்பகுமார (ஆ),திரு.கே.அமுனுகம –வெளிவிவகார அமைச்சு செயலாளர் ஆகியோர் இவருடன் சேர்ந்து சென்றனர்.

29 மார்ச் 2012 அன்று கௌரவ கலாநிதி Khouloud Franses KhaleelDaibes Abu Dayyeh,சுற்றுலாத்துறை மற்றும் புராதன பொருட்கள் அமைச்சர் இலங்கை விஜயம் செய்தார்.

**ஐக்கிய அரபு இராச்சியம் (U.A.E)**

1-3 மே 2012 காலப்பகுதியில் ,கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் துபாய் சென்று வருடாந்த முதலீட்டு கூட்டத்தில் பங்குபற்றினார்.

**ஈரான்**

பின்வரும் செயற்திட்டங்களுக்கு ஈரான் அரசாங்கம் தராளமாக உதவி வழங்கி உள்ளது.

கிராமிய மின்சக்தி திட்டம்: இந்த செயற்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு யூரோ 77,140,574/=. இதன் 75% மதிப்பீட்டு செலவு ஈரான் அரசாங்கத்திடமிருந்தும், மிகுதி இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் கிடைக்கப் பெறும்.

உம ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம்: இந்த செயற்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு US$529,059,198/=(ஒப்பந்த தொகை). இலங்கை அரசாங்கத்திடமிருந்து ருளுகூ 79,059,198/=கிடைக்கப் பெறும்.

சப்புஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு விரிவாக்கம் மற்றும் நவீனமயமாக்கல் திட்டம் ((SOREM): இதன் 70% மதிப்பீட்டு செலவு ஈரான் அரசாங்கத்திடமிருந்தும், மிகுதி இலங்கை அரசாங்கத்திடமிருந்தும் கிடைக்கப் பெறும்.

# ஆபிரிக்கப் பிரிவு

**ஆபிரிக்க மாநிலங்களும் மற்றும் ஆபிரிக்காவுடனான இலங்கையின் இராஜதந்திர உறவுகள்:**
ஆபிரிக்கப் பிராந்தியத்தில் 62 நாடுகளும் ஆள்புல பிரதேசங்களும் உண்டு. ஆனால் அவற்றுள் 54 மட்டுமே இறைமையுள்ள தேசங்களாக ஐக்கிய நாடுகள் சபையினாலும் ஏனைய மன்றங்களினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஏனைய தேசங்களை சுதந்திர நாடுகளாக அங்கீகரித்திருப்பது ஒரு சில நாடுகள் மாத்திரமேயாகும். எஞ்சியவை தன்னாட்சி உரிமையற்ற ஆள்புல பிரதேசங்களாகும். இலங்கை ஆபிரிக்காவிலுள்ள 35 நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணி வருகின்றது. (இந்நாடுகள் கீழே தடித்த எழுத்தினால் காட்டப்பட்டுள்ளன)

இலங்கை **ருவாண்டா, கொங்கோ குடியரசு (பிராஸாவில்லி) மற்றும் மாலி குடியரசு** என்பவற்றுடன் முறையே 2011 ஏப்ரல் 20, 2012 பெப்ரவரி 1 மற்றும் 2012 ஜனவரி 19 ஆகிய தேதிகளில் முறையான இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்தது. **தென் சூடானுடன்** இராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை 2011 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வழங்கியதுடன், இதனை உறுதி செய்யும் தென் சூடான் அதிகாரிகளின் பதிலளிப்பிற்கு இலங்கை காத்திருக்கிறது.

இராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்ற 15 ஆபிரிக்க நாடுகளில் 2012 டிசம்பர் 21 இல் மொரிடானியாவுடனும் 2012 நவம்பர் 15 இல் பர்கினா பஸோவுடனும் இராஜதந்திர உறவுகளை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள முடிந்தது. இதனால் 37 ஆபரிக்க நாடுகளுடன் முறையான இராஜதந்திர உறவுகளை நாம் பேணி வருகின்றோம்.(அவை தடித்த எழுத்தில் குறித்துக் காட்டப்பட்டுள்ளன) மேலும் 13 நாடுகளது இணக்கப்பாட்டை எதிர்பார்த்திருக்கின்றோம்.

**கிழக்கு ஆப்பிரிக்கா:** புருண்டி, கோமரோஸ், ஜிபவ்டி,**எரித்திரியா, எத்தியோப்பியா, கென்யா, மடகாஸ்கர்,** மலாவி, மொரிரியஸ், மயோட்டே (பிரான்ஸ்), மொசாம்பிக், ரீயூனியன் (பிரான்ஸ்), ருவாண்டா, சீசெல்ஸ், சோமாலியா, தான்சானியா, உகண்டா, சாம்பியா

**மத்திய ஆப்பிரிக்கா: அங்கோலா, கமரூன், மத்திய ஆபிரிக்க குடியரசு, சாட், கொங்கோ குடியரசு, கொங்கோ ஜனநாயக குடியரசு (முன்னாள் சையர்)** குடியரசு,ஈகுவேடேரியல் கினியா,கேபன், சாவோ தோமே பிரின்சிபே

**வடக்கு ஆப்ரிக்கா: அல்ஜீரியா, எகிப்து, லிபியா, மொராக்கோ, சூடான், தெற்கு சூடான், துனீசியா,** மேற்கு சகாரா

**வட ஆபிரிக்க ஸ்பானிய மற்றும் போர்த்துக்கேய ஆள்புல பிரதேசங்கள்:** கேனரி தீவுகள் (ஸ்பெயின்), சீயூடா (ஸ்பெயின்), மடேரா தீவுகள் (போர்த்துக்கல்), மெலில்லா (ஸ்பெயின்):

**தெற்கு ஆப்பிரிக்கா: போட்ஸ்வானா, லெசோத்தோ, சிம்பாப்வே, நமீபியா, தென் ஆப்ரிக்கா, சுவாசிலாந்து**

**மேற்கு ஆப்பிரிக்கா:பெனின்,** புர்கினா பாசோ, கேப் வேர்ட், ஐவரி கோஸ்ட், காம்பியா,**கானா, கினியா, கினி பிசாவு, லைபீரியா, மாலி,** மொரிடானியா, நைஜர், நைஜீரியா, செயிண்ட் ஹெலினா, அசேன்ஷன் மற்றும் டிரிசுதான் டா குன்ச்சா (ஐக்கிய இராச்சியம்)), செனகல், சிரியா லியோன், டோகோ

இலங்கையின் 4 வதிவிடத் தூதரகங்கள் ஆபிரிக்காவில் இருக்கின்றனர்: **எகிப்து** அல்ஜீரியா, துனீசியா, மொராக்கோ, சூடான், எரித்திரியா, கானா, நைஜீரியா மற்றும் மாலி ஆகிய நாடுகளுக்கும் கூட்டு அங்கீகாரம் கொண்டது: **கெண்யா,** எத்தியோப்பியா, உகண்டா, ருவாண்டா மற்றும் தன்சானியா ஆகிய நாடுகளுக்கும் கூட்டு அங்கீகாரம் கொண்டது: **தென்னாபிரிக்கா,** அங்கோலா, போட்ஸ்வானா, லெசோத்தோ, மொரிஸியஸ், மடகாஸ்கர், மொசாம்பிக், நமீபியா, சீசெல்ஸ், ஸ்வாசிலாந்து, சாம்பியா மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கும் கூட்டு அங்கீகாரம் கொண்டது: **லிபியா** - தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

**சீசெல்ஸ்:** அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அழைப்பின் பேரில் சீசெல்ஸ் ஜனாதிபதி அதிமேதகு ஜேம்ஸ் அலிக் மிச்செய்ல் அவர்கள் 2012 ஆகஸ்ட் 20 தொடக்கம் 23 வரை இலங்கைக்கு மூன்று நாள் அரச விஜயத்தை மேற்கொண்டார். மிச்செய்ல் அவர்களுடன் வெளிவிவகார அமைச்சர் கௌரவ ஜீன் போல் ஆடம், இயற்கை வளங்கள் மற்றும் தொழிற்துறை அமைச்சர் கௌரவ பீட்டர் சினோன் ஆகியோரும் மேலும் 15 பேர் கொண்ட தூதுக்குழுவினரும்

வருகை தந்திருந்தனர். சீசெல்ஸிலிருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட முதலாவது அரச முறை விஜயம் அதுவாகும்
அதிமேதகு மிச்செய்ல், இலங்கையும் சீசெல்ஸும் தீவு நாடுகளாக இருப்பதால் சமுத்திர வளங்களைப் பாதுகாப்பதில் ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமெனத் தெரிவித்தார். கிழக்கு மற்றும் தெற்கு ஆபிரிக்கப் பொதுச் சந்தையின் (COMESA) ஊடாக விசாலமானதாகவுள்ள ஆபிரிக்கச் சந்தையில் கால்பதிக்குமாறு இலங்கை வர்த்தக சமூகத்துக்கு அதிமேதகு மிச்செய்ல் அழைப்பையும் விடுத்ததுடன் இலங்கை விமானங்கள் விக்டோரியாவுக்கு பயணிப்பதற்கான சாத்தியப்பாடு பற்றியும் ஆராயப்படுகிறது. இலங்கைப் பாதுகாப்பு அதிகாரிகளிடம் தமது நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொள்ளுமாறும் கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடற்கொள்ளை தொடர்பாக அறிந்து கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்தார். சீசெல்ஸ் - இலங்கை நற்புறவு கடந்த பல வருடங்களில் பல்வேறு பரிமாணங்களை அடைந்ததுடன் அதிகரித்த ஒத்துழைப்புக்கு பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது

சர்வதேச மன்றத்தில் தமது அரசாங்கத்தின் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் இலங்கைக்கு நல்குவதாக அவர் உறுதி செய்தார். உலகளாவிய திரைச்சீலையில் சிறு தீவு நாடுகளின் பங்கு எனும் கருப்பொருளில் அதிமேதகு மிச்செய்ல் சொற்பொழிவொன்றைக் கொழும்பில் ஆற்றினார். அதிமேதகு மிச்செய்ல் இலங்கை வர்த்தகத் தலைவர்களைச் சந்தித்தார். இலங்கைப் பாராளுமன்றச் சபாநாயகர் கௌரவ சமல் ராஜபக்ச அவர்களையும் அவர் சந்தித்ததுடன் அதன் பின்னர் இலங்கை – சீசெல்ஸ் நற்புறவு விவகாரக் குழு அறிவிப்பு விழாவினையும் அவர் அலங்கரித்தார். கொழும்பு கப்பல் பட்டறை, கொழும்பு சர்வதேச கடல் மற்றும் பொறியியல் கல்லூரி மற்றும் கடற்படை கரையோர ரோந்து கைத்திறன் நிர்மாணத் திட்டம் என்பவற்றுக்கு அதிமேதகு மிச்செய்ல் விஜயம் செய்தார். சீசெல்ஸ் "கப்பல் கட்டுமான மையாக" இலங்கையை முன்னிறுத்தவும், இலங்கைக்கு கப்பல் துறையில் வலுவான இணைப்புகளை ஏற்படுத்தவும் உள்ளது. இலங்கை சீசெல்சுக்கு உதவியளிக்கவுள்ள இன்னொரு துறை சிற்றளவு நீர்மின்வலு நிலையங்கள் அமைத்தலாகும். புரிந்துணர்வு ஒப்பந்தம் / சுகாதாரம், கல்வி மற்றும் பயிற்சி சீசெல்ஸில் இலங்கையர்களுக்கான வேலைவாய்ப்பு, தொழிலாளர்கள், சட்ட விவகாரங்களில் ஒத்துழைப்பு முதலான துறைகளில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடுவதை இரு தலைவர்களும் கண்ணுற்றனர். 2012 செப்டம்பர் 12 இல், அமைச்சரவை அரச விஜயத்தின் தொடர் நடவடிக்கைக்கான குழுவொன்றை நிறுவவும் சீசெல்சுக்கான கடன் தொடர்பொன்றை (Credit Line) இலங்கை வங்கியினால் ஆரம்பிப்பதற்கு அங்கீகாரமளித்தது.

- சிஷேல்ஷிற்கு கௌரவ காவற்துாதராக திரு. ஏரல் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

- இலங்கையும் சீசெல்சும் குறுகிய கால தங்குமிட விசா தள்ளுபடி தொடர்பான ஒப்பந்தமொன்றை 2012 செப்டம்பர் 28 ஆம் தேதி நியூயோர்க்கில் 67 வது ஐக்கிய நாடுகள் சபை பொதுப்பேரவை அமர்வின் பக்கவாட்டில் நிறைவு செய்தன.

- 2012 ஒக்டோபர் 24 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரைக்கும் கௌரவ மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி இராஜித சேனாரட்ணா செஷல்சிற்கு ஒரு விஜயத்தினை மேற்கொண்டார். கௌரவ அமைச்சரின் செஷல்சிற்கான விஜயத்தின் போது 2012 ஒக்டோபர் 30 ஆம் திகதி அன்று மீன்பிடி துறை சம்பந்தமான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டது.

- செஷல்சில் ஒரு கிளையை நிறைவு செய்வதற்கு ஆன ஒரு சாத்தியக்கூறு ஆய்வினை மேற்கொள்வதற்கும் மற்றும் கடன் தொடர்பொன்றை ஆரம்பிப்பதற்கும் (BOC) இலங்கை வங்கியின் தலைவர் மற்றும் (BOC) இலங்கை வங்கி வெளிநாட்டு உறவுகள் முகாமையாளர் ஆகியோர் 2012ஆம் ஆண்டு 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரைக்கும் செஷல்சிற்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

- இலங்கையில் 2012 டிசம்பர் 10 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரைக்கும் இடம்பெற்ற காலி கடலோர உரையாடல்கள் மாநாட்டிற்கு செஷல்ஸ் நாட்டு பாதுகாப்பு படைகளில் தளபதி பிரிகேடியர் எல். பயேட் பங்குபற்றினார்.

சிஷேல்ஷிற்கு, கௌரவ காவற்தூதராக திரு. ஏரல் பொன்சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

**சுவாசிலாந்து:** அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அழைப்பின் பேரில், சுவாசிலாந்து மன்னர் மாட்சிமை மிக்க எம்ஸ்வதி III இலங்கைக்கு 2012 ஆகஸ்ட் 13 தொடக்கம் 15 வரை மூன்று நாள் அரச பயணத்தை மேற்கொண்டார்.

மண்ணரின் தெற்காசியப் பிராந்தியத்துக்கான முதல் பயணம் இதுவாகும். சா்வதேச மன்றத்தில் சுவாசிலாந்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்புக்கு அதிமேதகு ஜனாதிபதி ராஜபகஷ் பாராட்டுத் தெரிவித்தார். பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதன் முக்கியத்துவம், தனியார் பொதுக் கூட்டு முயற்சிகளை உருவாக்குவதை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் அதே நேரம் வா்த்தக விரிவாக்கத்தை மேற்கொள்ளல் மற்றும் அந்தந்த வா்த்தக அரங்குகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு என்பவற்றையும் அவா் அடிக்கோடிட்டுக் காட்டினார். முதலீடுகள், இரட்டை வரிவிதிப்பு மற்றும் விமான சேவைகள் என்பவற்றின் மேம்பாடு மற்றும் பாதுகாப்புடன் என்பவற்றுடன் தொடர்பான சட்ட ஆவணங்களை செயற்படுத்த இணக்கம் காணப்பட்டது கொள்திறனைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவம் மற்றும் தொழினுட்ப ஒத்துழைப்பினூடான தகவல் பகிர்வு என்பவற்றின் முக்கியத்துவத்தை இரு தரப்பும் உணர்ந்தன.

விவசாயம், உள்நாட்டு மீன் வளர்ப்பு, உயர் கல்வி, சுகாதாரம், உள்நாட்டு விமான போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் சிற்றளவு நீர்மின்வலு உற்பத்தி ஆகிய துறைகளில் முறையான பயிற்சியளித்தல்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் புலமைப்பரிசில்கள் பரிமாற்றம் என்பவற்றினூடாக அனுபவங்களை இலங்கை பகிர முடியும். சுவாசிலாந்து சக்திவலுத் துறையில் கணிசமான ஆற்றலைக் கொண்டுள்ளதுடன் இத்துறையில் முதலீடு செய்ய வருமாறு இலங்கையின் தனியார் துறையினா் ஒத்துழைப்புடன் வரவேற்கப்பட்டனா். அரச விஜயம் அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை அதிகரிக்க வழிவகுத்தது. பொருளாதார வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்று கௌரவ வெளிவிவகார அமைச்சரினாலும் சுவாசிலாந்து வெளிவிவகார அமைச்சா் கௌரவ எம்டிடி பகுட்சே அவா்களாலும் கைச்சாத்திடப்பட்டது. சுவாசிலாந்து பிரதிநிதிகள் குழு இயற்கை வளங்கள் மற்றும் சக்திவலு மற்றும் வாணிபம், தொழிற்துறை மற்றும் வர்த்தக அமைச்சர்களைக் கொண்டதாக இருந்தது.

மேன்மை தங்கிய மொஸ்வாட்டி III மன்னரின் விஜயத்தினை தொடர்ந்து சுவாசிலாந்தில் ஒரு டிராக்டர் கொம்பனி (EDNA) டிராக்டர் பொறுத்தும் நிலையம் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளனர். 2013 ஏப்பிரலில் ஒரு முழு முதிர்ச்சியடைந்த உற்பத்தி நிலையமாக பரிநாமம் பெறும். வியாபார சந்திப்புக்களுக்காக இலங்கை நிறுவனமான ஒன்றான AKLO தகவல் தொழில்நுட்பம் சுவாசிலாந்திற்கு விஜயத்தினை மேற்கொண்டனர். இந்நிறுவனமானது ஆபிரிக்காவில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு " வரையறுக்கப்பட்ட AKLO ஆபிரிக்க தனியார் நிறுவனம்" என்ற தென் ஆபிரிக்காவில் வியாபாரத்தினை விரிவாக்கம் செய்வதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை விரிவாக்கம் செய்வதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினையும் இந்நிறுவனம் கைச்சாத்திட்டுள்ளது.

**உகண்டா**

உகண்டாவில் இலங்கையின் முதன் முதல் ஊதியம் அற்ற தூதுவரராக திரு. வி. கணநாதன் நியமிக்கப்பட்டார்.

இலங்கை உகண்டாவில் தொழிற் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி மையமொன்றை மேம்படுத்தும் / நிறுவும். இத்திட்டத்திற்கான் மொத்த செலவு சுமார் ரூ. 170 மில்லியன் ஆகும்.

நீர்ப்பாசன மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சா் கௌரவ நிமல் சிரிபால டி சில்வா தலைமையிலான பாராளுமன்றத் தூதுக்குழுவொன்று 2012 மார்ச் 31 தொடக்கம் ஏப்ரல் 05 வரை கம்பாலாவில் இடம்பெற்ற 126 வது சா்வ பாராளுமன்ற ஒன்றிய மாநாட்டில் பங்குபற்ற உகண்டாவுக்கு விஜயம் செய்து.

உகண்டா, கம்பாலாவில் 2012 ஜுலை 03 – 06 இடம்பெற்ற சர்வதேச தொலைத்தொடர்பு செய்மதி அமைப்புத் தரப்பினர்களின் பொது மன்றத்தில் இலங்கை பங்குபற்றியது.

**இலங்கைக்கான, உகண்டா சனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயம்**

2012 நொவம்பர் 12 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரைக்கும், அதிமேதகு சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் அழைப்பின் பேரில் மேன்மை தங்கிய சனாதிபதி யோவேரி ககுடா முசேவேனி மேன்மை தங்கிய ஜனட் கட்டா முசேவேனி முதற்பெண்மனி மற்றும் கரஜோமோ விவகாரங்களுக்கான கௌரவ அமைச்சர் மற்றும் உகண்டா தூதுகுழுவினர் உத்தியோகபூர்வ விஜயத்தினை நிறைவு செய்தனர்.

மசுலீடா நிறுவனத்தை தரமுயர்த்துவதற்கு 1.5 மில்லியன் US $, ஒதுக்கியமைக்காக இந்த சந்தர்ப்பத்தில் மேன்மை தங்கிய சனாதிபதி முசேவேனி அதிமேதகு சனாதிபதி ராஜபக்ஷவிற்கு நன்றி தெரிவித்தார். உகண்டாவில் மனித வள அபிவிருத்தி உறுதுணையாக இருக்கும் (SLUF-VTTC) இலங்கை உகண்டா நட்புறவு தொழிற் திறன் விருத்தி மற்றும் தொழிற்நுட்ப பயிற்சிகள் மையத்தை நிறுவுவதற்கு உதவிபுரிந்தமைக்காகவும் உகாண்டாவில் உள்ள வியாபார வாய்ப்பு வளங்கள் பற்றி (EDB) ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் இலங்கை வியாபார சமூகத்தவர்கள் /சம்மேளனம் ஆகியவற்றில் மேன்மை தங்கிய சனாதிபதி முசேவேனி தனது விஜயத்தின் போது உரையாற்றினார். விசேடமாக நீரியல் சக்தி, தேயிலை மற்றும் தைத்த ஆடைகள் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ளும்படியாக இலங்கை சமூகத்தவர்களுக்கு அழைப்பு விடுத்தார். மற்றும் பால் மா மற்றும் அதன் உற்பத்திகளின் மேலதிகமாக பொருட்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றி முன்னிலைப்படுத்தி கூறினார். (CCC) இலங்கை வர்த்தக சம்மேளனத்துடன் உகண்டா தேசிய வர்த்தக மறறும் கைத்தொழில்கள் சம்மேளனம் ஆனது ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை முடிவுறுத்தியது.

வரையறுக்கப்பட்ட அக்பார் சகோதரர்கள் தனியார் நிறுவனம் ஜேர்மன் தொழில்நுட்பவியல் பயிற்சி நிறுவனம் வத்தளை கெரவலப்பிட்டியவில் உள்ள வரையறுக்கப்பட்ட லங்கா டிராஸ்போன்மஸ் ஆகியவற்றில் பதனிடுதல் பெறுமதி சேர்க்கும் உற்பத்தி நிலையத்திற்கு இந்த சனாதிபதி தூதுக்குழுவனிர் விஜயத்தினை மேற்கொண்டனர்.

2012 நொவம்பர் 13 ஆம் திகதி அன்று இரு நாடுகளுக்கிடையே உகண்டாவில் இலங்கை உகாண்டா நட்புறவு தொழிற்திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கல் மையம் அமைத்தல் மற்றும் பொருளாதார, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை சுற்றுலாப்பயணத்துறையில் ஒத்துழைப்பு பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தம் இருதரப்பு அரசியல் கலந்துரையாடல்கள் பற்றிய புரிந்தணர்வு ஒப்பந்தம் மற்றும் கலாச்சார துறையில் ஒத்துழைப்பு சம்பந்தமான உடன்படிக்கை போன்ற ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டது. உகண்டா சனாதிபதியின் உத்தியோகபூர்வ விஜயத்தினை பற்றி கௌரவ வெளிவிவகார அமைச்சர் ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனத்தை முன்வைத்தார். மற்றும் 2012 நொவம்பர் 18 ஆம் திகதி அன்று உத்தியோகபூர்வ விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு மேல் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**தென்னாபிரிக்கா:**

டர்பனில் முதல் முதல் ஊதியம் அற்ற இலங்கைக்கு ஆன தூதுவராக திரு. ஹரெஷ் மேக்தா நியமிக்கப்பட்டார்.

கேப்டவுனிற்கான முதல் முதல் இலங்கைக்கு ஆன ஊதியம் அற்ற தூதுவராக திரு. ஜோனர்தன் ஜேகப் நியமிக்கப்பட்டார்.

2012 மார்ச்சில் கௌரவ வெளிவிவகார அமைச்சர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்தார். அவர் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு துறை அமைச்சர், சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு துறை பிரதி அமைச்சர் மற்றும் அதிமேதகு ஜனாதிபதி ஜேக்கப் சூமா ஆகியோரைச் சந்தித்தார்.

தென்னாபிரிக்க உணவு மற்றும் விவசாய அமையத்தின் அழைப்பில் மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர்கௌரவ டாக்டர் ராஜித சேனாரத்ன அவர்கள் மீன்வளர்ப்பு தொடர்பான உப குழுவின் 6 வது அமர்வில் பங்குபற்றுவதற்காக 2012 மார்ச் 26 – 30 காலப்பகுதியில் கேப் டவுனுக்கு விஜயம் செய்தார்.

கௌரவ சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு துறை பிரதி அமைச்சர் திரு இப்ராஹிம் இப்ராஹிம் 2011 நவம்பர் 15 – 19, 2012 ஆகஸ்ட் 7 – 12 காலப்பகுதிகளில் இலங்கைக்கு விஜயம் செய்தார்.

தென்னாபிரிக்காவிலிருந்து எட்டு அங்கத்தவர்கள் கொண்ட வர்த்தகத் தூதுக்குழுவினர் மார்ச் மாதத்தில் இலங்கையில் இடம்பெற்ற ஸ்ரீ லங்கா எக்ஸ்போ 2012 இல் பங்குபற்றினர். பிரிட்டோரியாவில் மார்ச் 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் இராஜதந்திர சந்தையொன்று நடத்தப்பட்டது. ஜுலை மாதம் இடம்பெற்ற சாய்டெக்ஸ் 2012 இல் இலங்கையைச் சேர்ந்த ஒன்பது ஏற்றுமதியாளர்கள் பங்குபற்றினர். கேப் டவுன் வர்த்தக அரங்கு, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முற்போக்கு வர்த்தகக் கருத்துக்களம் மற்றும் உலக வர்த்தக மையம் என்வற்றுடன் இணைந்து வணிக தொடர்புபடுத்தல் நிகழ்ச்சி ஜுலை மாதத்தில் கேப் டவுனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்-முற்போக்கு வர்த்தகக் கருத்துக்களத்தின் (ANC PBF 6000 கொம்பனிகளில் அங்கத்தவர்களை கொண்டது) 30 உறுப்பினர்கள் அடங்கிய உயர் மட்ட வர்த்தகத் தூதுக்குழுவினர், தென்னாபிரிக்க பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் ஹிலென்கிவி மகீஸ் தலைமையில் 2012 செப்டம்பர் 5-9 காலப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இலங்கை-ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு வர்த்தகப் பேரவை மற்றும் இலங்கை வர்த்தக அரங்கு என்பனவற்றுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. அவர்கள் பாராளுமன்றம், ∴பேசட்ஸ் கண்காட்சி, முதலீட்டுச் சபை, இலங்கைத் தேயிலை, இறப்பர், ஆடை மற்றும் பீங்கான் தொழிற்சாலைகள், தகவல் தொழினுட்பப் பூங்கா, நனோ பூங்கா, கடல்சார் வளாகம், கொழும்பு சர்வதேச கடல் மற்றும் பொறியியல் கல்லூரி மற்றும் யாழ்ப்பானக் குடாநாடு என்பவற்றுக்கு விஜயம் செய்தனர். அவர்கள் கௌரவ வெளிவிவகார அமைச்சரையும் நீர் விநியோக வடிகாலமைப்புத்துறை அமைச்சரும் இலங்கை-தென்னாபிரிக்க பாராளுமன்ற நற்புறவுச் சங்கத் தலைவருமான கௌரவ தினேஷ் குனவர்தன அவர்களையும் சந்தித்தனர். அவர்கள் பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் சந்தித்தனர்.

2012 ஒக்டோபர் 28 ஆம் திகதி தொடக்கம் நொவம்பர் 03 ஆம் திகதி வரைக்கும் தென்னாப்பிரிக்கா ஜனநாயகத்திற்கான நிறுவனத்தின் IDASA அழைப்பின் பிரகாரம் கௌரவ அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தலைமைதாங்கிய ஒரு சிறிலாங்கா சுதந்திர கட்சி தூதுக்குழுவினர் மற்றும் கௌரவ அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் பிரதி அமைச்சர்கள் கௌரவ நியோமல் பெரேரா கௌரவ பைசல் முஸ்தாபா மற்றும் வி. முரளிதரன் அவர்களும் தென் ஆபிரிக்காவிற்கு விஜயத்தினை மேற்கொண்டனர்.

டர்பனில் உள்ள இரண்டு சுற்றுலாப்பயண ஊக்குவிப்பு கொம்பனிகள் தங்கள் நிகழ்ச்சிதிட்டத்தில் இலங்கை பற்றிய விழிப்புணர்வு பற்றி உள்ளடக்குவதற்கு இணங்கியுள்ளனர்.

கொல்பே சுற்றலாப்பயணத்தில் துறை நிபுணத்துவம் பெற்று வருமான ஜொனஸ்பர்க்கினை தளமாக கொண்ட 3 ஆவது கொம்பனி அனுகப்பட்டது. மற்றும் இலங்கையில் செயலாற்றுவதற்கு ஆர்வத்தினை தெரிவித்துள்ளனர்.

2012 இறுதி கலாண்டில் பன்னிரண்டு பொம்பனிகளை கொண்ட இலங்கை வர்த்தக தூதகுழுவினர் உகண்டாவிற்கு விஜயம் செய்தனர். வருகை தந்த தூதுகுவினருக்கு ஜொனஸ்பர்க் பிரிடோரியா மற்றும் கேப் டவுனில் நடைபெற்ற B2B வணிக தொடர்புபடுத்தல் நிகழ்ச்சியில் 200 தென் ஆபிரிக்கா கொம்பனிகள் பங்குபற்றின.

வருகை தந்த தகவல் தொழில்நுட்ப சேவைகள் கொம்பனி தூதுகுழுவினருக்கு ஜொனஸ்பாக் மற்றும் கேப் டவுனில் கலந்துரையாடல்கள் மற்றும் வணிக தொடர்புபடுத்தல் நிகழ்ச்சிகள் தென்ஆபிரிக்காவில் மென்பொருள் பொருளியளார்கள் ஜொனஸ்பார்க் மையத்தின் ஒழுங்கிணைப்புடன் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. சிலிகோன் கேப் முன்னெடுப்புகள் உடன் உள்ள கொம்பனிகள் உடனும் மத்தியில் மென்பொருள் கொம்பனிகளுடன் உறவாடுவதற்கும் கேப் டவுண் பாண்ஹொப்பாண்ட் தொழிநுட்பவியல் கண்டுபிடிப்பு மையத்திற்கு விஜயம் செய்வதற்கு தூதுகுழுவினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தென் ஆபிரிக்காவில் தங்கள் பொருட்களை சந்தைபடுத்துதலுக்கு வரையறுக்கப்பட்ட EMP ஹேல்டிஹ்ஸ் தனியர் நிறவனத்துடன் வியாபார தொடர்புகளை ஏற்பத்துவதற்கு PBF இலங்கைக்கான முற்போக்கு வியாபார மன்றத்தின் ANC ஆபிரிக்க தேசிய கொங்கிரஸில் பங்குபற்றிய 30 கொம்பனியின் 2 ஆவது விஜயமாகும். இது சம்பந்தமாக இரண்டு கொம்பனிகளும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை முடிவுறுத்தியது. தென் ஆபிரிக்காவிற்கு ஹெட்டி கொடவின் பணிப்பாளர் விஜயம் செய்தார். செப்டம்பர் (ANC) (PBF) தூதுக்குழுவின் பங்குபற்றிய வேறு தென் ஆபிரிக்கா கொம்பனியுடன் படைக்கும் திறன் மனவுறு உள்ள கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

**எகிப்து**

கௌரவ வெளிவிவகார அமைச்சர் 2012 மே 9 தொடக்கம் 12 வரை எகிப்துக்கு விஜயம் செய்து எகிப்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். கௌரவ வெளிவிவகாரஅமைச்சர் 2012 மே 6-10 காலப் பகுதியில் எகிப்தில் நடந்த விஎக்ஸ் என்ஏஎம் கூட்டத்தில் பங்குபற்றினார்.

கெய்ரோவிலுள்ள இலங்கைத் தூதரகம் மனிதக் கடத்தல்காரர்கள் மற்றும் சரக்குக் கடத்தல்காரர்களுக்கெதிராக நடவடிக்கை எடுப்பதற்கு புலம்பெயர்ந்த இலங்கையர்களின் ஆதரவைப்பெற விழிப்புணர்வுப் பிரச்சாரமொன்றை ஆரம்பித்தது. மனிதக் கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களின் நாடு திரும்பலுக்கான உதவியை கெய்ரோவிலுள்ள குடிபெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு வழங்கியது.

இலங்கை சிறுவர் சினிமாவுக்கான கெய்ரோ சர்வதேச விழா, இஸ்மாயிலியா சர்வதேச திரைப்பட விழா மற்றும் 20 வது புனித குர்ஆனை மனனம் செய்யும் உலகளாவிய போட்டி என்பவற்றில் பங்குபற்றியது.

எகிப்தின் கெய்ரோ வர்த்தக அரங்கின் தூதுக்குழுவொன்று ஸ்ரீ லங்கா எக்ஸ்போ 2012 இற்கு வருகை தந்தனர். அவர்களது விஜயத்தின் போது கெய்ரோ வர்த்தக அரங்கிற்கும் இலங்கை வர்த்தக அரங்கிற்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

கௌரவ வெளிவிவகார அமைச்சர் 2012 மே 6-10 எகிப்தில் நடைபெற்ற 15 ஆவது NAM சந்திப்பில் கலந்துகொண்டார்.

2012 நொவம்பர் 03 தொடக்கம் 05 வரைக்கும் இலங்கைக்கு எகிப்திய நீர்பாசன தொழில்நுட்பவியலை பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு, இலங்கை இராணுவத்தில் இருந்து மூன்று (03) பேர்கள் கொண்ட தூதுகுழுவினர் எகிப்திற்கு விஜயத்தினை மேற்கொண்டார்கள்.

இலங்கையின் தேசிய செயற்கை உரச் செயலகத்திற்கு எகிப்திய அரசாங்கத்திற்கு சொந்தமான MISR என்று பெயருடைய நிறுவனத்திலிருந்து சுண்ணாம்பு கல்லு பொஸ்பேட் பாறை வெள்ளை மணல் யூரியா போன்றவைகளை இறக்குமதி செய்வதற்கு விலைப்புள்ளி பெறப்பட்டது.

இலங்கை தேயிலைக்கு எகிப்திய சந்தைவாய்ப்புக்களை பெறுவதற்கு ஒரு அறிக்கையொன்றினை தயாரிப்பதற்கு முன்னனி தேயிலை இறக்குமதியாளர்களுடன் 14 கூட்டங்கள் நடாத்தப்பட்டது.

**கென்யா**

சுற்றாடற்றுறை அமைச்சர் கௌரவ அநுர பிரியதர்சன யாப்பா தலைமையிலான தூதுக்குழுவொன்று 2012 பெப்ரவரி 20 தொடக்கம் 22 வரை இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் 12 வது உலகளாவிய அமைச்சர் மட்ட சுற்றாடல் கருத்துக்களத்தில் பங்குபற்ற நைரோபிக்கு விஜயம் செய்தனர்.

2012 ஒக்டோபர் 29 ஆம் திகதி தொடக்கம் நொவம்பர் 02 ஆம் திகதி வரைக்கும் நைரோபியில் அமைந்துள்ள ஐ.நா குடியிருப்பு தலைமையகத்தில் RAUF. CCI. யினரால் நடாத்தப்பட்ட பயிற்சி பட்டறையில் மேல்மாகாண செயலாளர் திரு. எஸ்.டீ. கொடிகார தலைமை வகித்த ஒரு தூது குழுவினர் பங்குபற்றினார்கள்.

**இதியோப்பியா**

இதியோப்பியா அடிஸ் அபாபாவில் இலங்கையின் முதன் முதல் ஊதிய அற்ற தூதுவராக திரு. ∴பகாடி தடேசெ நியமிக்கப்பட்டார்.

இதியோப்பியா அரசாங்கத்திற்கு சுற்றுலாப்பயண விடுதித் துறையில் 10 புலமை பரிசில்களை வழங்குவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது.

**நைஜீரியா**

நைஜீரியா கூட்டாட்சி குடியரசின் அரசாங்கம் கொழும்பில் வதிவிடத் தூதரகத்தைத் திறந்தது. கொழும்பில் வதிவிடமாகவுள்ள முதன் முதல் நைஜீரிய உயர் ஸ்தானிகர் ∴பெமி அகின்சன் ரொடிமி தனது அறிமுக ஆவணங்களை அதிமேதகு ஜனாதிபதியிடம் 2012 செப்டம்பர் 14 ஆம் திகதி சமர்ப்பித்தார். (தகு நிலை சான்றிதழ்கள்)

நைஜீரிய தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் 20 உறுப்பினர் கொண்ட தூதுக்குழு 2012 ஏப்ரல் 28 தொடக்கம் மே 05 வரையான காலப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்து இலங்கை அதிகாரிகளுடன் இடைவினைகளை மேற்கொண்டனர்.

(SLIIT) இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நைஜீரிய மாணவர்கள் இணைந்து கொண்டனர்.

**செனகல்**

ஆறு செனகல் இராணுவ வல்லுனர்கள் 2012 ஏப்ரல் 07 தொடக்கம் 13 வரை காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்தனர்.

**சூடான் குடியரசு**

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் 2012 ஆகஸ்ட் 26-29 காலப் பகுதியில் சூடான் குடியரசுக்கு விஜயத்தை மேற்கொண்டார்.

**துனிசியா**

ஊதியம் அற்ற தூதுவர் பதவியிலிருந்து, ஊதியம் அற்ற தூதுவர் நாயகமாக திரு. முஸ்தாபா டிரபெல்சீ பதவி உயர்வு பெற்றார்.

பொஸ்பேட்டை ஏற்றுமதி செய்யும், இரண்டு துனிசியா கொம்பனிகளிடம் விலைப் புள்ளிகள் பெறப்பட்டு இலங்கை தேசிய செயற்கை உர செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**மொசாம்பிக்**

2012, ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி மொசாம்பிக்கில் முதன் முதல் ஊதியம் அற்ற தூதுவராக திரு. வனி மொமண்டே ஹசாம், அவர்களுக்கு கௌரவ வெளிவிவகார அமைச்சர் அங்கீகாரம் வழங்கியுள்ளார்.

**பொட்ஸ்வானா**

பொட்ஸ்வானாவிற்கு இலங்கையின் முதன் முதல் ஊதியம் அற்ற தூதுவராக திரு. சுல்பத் மெந்திரா தகநாயகா இலங்கைஅங்கீகரித்துள்ளது.

**சோமாலியா**

2010 ஆம் ஆண்டு ஜனவரி 02 ஆம் திகதி தொடக்கம் சோமலிய கடற்கொள்ளையர்களால் தடுத்து வைக்கப்பட்ட திரு. கே.ஏ. சரத் சண்டன சுரசேன அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்.

**எரிற்டிரேயே**

2012 நொவம்பர் 22 ஆம் திகதி அன்று எரிற்டிரேயே அவர்களிடம் நைரோவில் இருக்கும் தூதுவர் அறிமுகப்பத்திரத்தை கையளித்தார்.

**ருவாண்டா**

ருவாண்டா அரசாங்கத்தின் அழைப்பின் படி கௌரவ பிரதி வெளிவிவகார அமைச்சர் 2012 ஜூலை 01 ஆம் தேதி ருவாண்டாவின் 50 வது சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டார்.

**நமிபீயா**

நமிபியாவிற்கு இலங்கையின் முதன் முதலாக ஊதியம் அற்ற தூதுவராக திரு. சேக்கி ஜயிபின்ஜே நியமிக்கப்பட்டார்.
இலங்கையில் மார்ச்சில் இடம்பெற்ற 2012 இலங்கை எக்ஸ்யோவில் நமிபீயா பங்குபற்றியது.

**சாம்பியா**

சாம்பியாவில் இலங்கையின் ஊதியம் அற்ற தூதுவராக திரு. எல்மோ ஜெயதியதிலக நியமிக்கப்பட்டார்.

**வேறு**

அதிமேதகு ஜனாதிபதியின் விசேட தூதராக கௌரவ வெளிவிவகார அமைச்சர் 2012 பெப்ரவரி.்.மார்ச் காலப்பகுதியில் **கொங்கோ குடியரசு, புர்கினா பாசோ, போட்ஸ்வானா, மொரிடானியா, பெனின், கமரூன், நைஜீரியா, உகாண்டா மற்றும் செனகல்** ஆகிய

நாடுகளுக்கு சிறப்பு விஜயங்களை மேற்கொண்டு மனித உரிமைகள் பேரவையின் 19 வது அமர்வு தொடர்பான விடயங்கள் குறித்துக் கலந்துரையாடினார்

அதிமேதகு ஜனாதிபதியின் விசேட தூதராக பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் கௌரவ சுசில் பிரேமஜயந்த **மொரிசியசுக்கும்** சுற்றுலாத்துறை அமைச்சர் கௌரவ பைஸர் முஸ்தபா **ட்ஜிபவ்ட்டி மற்றும் லிபியாவுக்கும்** 2012 மார்ச் மாதத்தில் சிறப்பு விஜயங்களை மேற்கொண்டு மனித உரிமைகள் பேரவையின் 19 வது அமர்வு தொடர்பான விடயங்கள் பற்றிக் கலந்துரையாடினார்.

உலக உணவு திட்டத்தின் துணையுடன் சோமாலியா மற்றும் கிழக்கு ஆபிரிக்காவில் பஞ்சத்தில் வாடும் மக்களுக்கென பத்தாயிரம் (10,0000) மெட்ரிக் டொன் வெள்ளை அரிசியை இலங்கை அன்பளிப்பாக வழங்கியது.

கொங்கோ குடியரசு மக்களுக்கு இலங்கை ரூபாய் 3.3 மில்லியன் பெறுமதியான மருத்துவ உதவிகளை இலங்கை நன்கொடையளித்தது. பிரதி வெளிவிவகார அமைச்சர் கௌரவ நியோமல் பெரேராவிடம் மருத்துவ பொருட்களை சுகாதார அமைச்சர் கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் கையளித்தார்.

வெளிநாட்டு மாணவர்களுக்கு 100 பட்டக்கற்கை/பட்டப்பின் கற்கை வாய்ப்புக்களை இலங்கை வழங்கியது. இவற்றுள் **எகிப்து – 01, கென்யா – 01, நைஜீரியா – 01, தென்னாபிரிக்கா – 01 மற்றும் தான்சானியா – 01** இனைப் பெற்றன. **எத்தியோப்பாவுக்கு**

# ஐரோப்பாCIS &அமெரிக்கப்  பிரிவு

**மேற்கு பிரிவு**

ஆரசியல் நடவடிக்கைகள்/ மேற்கு பிரிவு ஐரோப்பா CIS & அமெரிக்கா நாடுகளுடன் இலங்கை நடாத்தும் இருதரப்பு உறவுகளுக்குரிய வேலைகளை நிறைவேற்றும்.

அ) ஐரோப்பா

**பிராந்திய செயற்பாட்டு எல்லை: 42**

அல்பேனியா, அன்டோரா, ஆஸ்திரியா, பெல்ஜியம், போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா, பல்கேரியா, குரோஷியா, சைப்ரஸ்,செக் குடியரசு, டென்மாரக், எஸ்டோனியா, பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ், ஹங்கேரி, ஐஸ்லாந்து, அயர்லாந்து, இத்தாலி, லற்வியா, விவுடன்ஸ்டயின், லிதுவேனியா,லக்சம்பேர்க்,மாசிடோனியா, மால்டா, மொனோக்கோ, மொண்டெனேகுரோ, நோர்வே, போலந்து, போர்த்துக்கல், ருமேனியா, சான் மரீனோ, செர்பியா, ஸ்லோவாக்கியா, சொல்வீனியா, ஸ்பெயின்,சுவீடன், சுவிட்சலாந்து, வதிக்கான், புனித நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், துருக்கி

**தூதரகங்களின் எண்ணிக்கை: 12**
ஆஸ்திரியா, பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி (பேர்ளின் மற்றும் பிராங்போர்ட்) இத்தாலி, நோர்வே, போலந்து,சுவீடன், நெதர்லாந்து, ஐக்கிய இராச்சியம், துருக்கி.

**சம அங்கீகாரங்களின் எண்ணிக்கை**: -

| | | |
|---|---|---|
| - வியன்னாவிலிருந்து: | | போஸ்னியா மற்றும் ஹெர்சிகோவினா, குரோஷியா, செக் குடியரசு, ஹங்கேரி, மாசிடோனியா, செர்பியா, ஸ்லோவாக்கியா மற்றும் ஸ்லோவேனியா |
| - பிரசல்ஸ் | : | லக்சம்பேர்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் |
| - பாரிஸில் | : | போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் |
| - ப்ர்ளின் | : | சுவிட்சலாந்து |
| - ஜெனீவா | : | வத்திக்கான் |
| - ரோம் | : | அல்பேனியா, சைப்ரஸ், கிரீஸ் மற்றும் மால்டா |
| - வார்சா | : | பல்கேரியா, ருமேனியா |
| - ஸ்டாக்ஹோமில் | : | டென்மார்க், எஸ்டோனியா, பின்லாந்து, ஐஸ்லாந்து, லாட்வியா மற்றும் லிதுவேனியா |
| - லண்டனில் | : | அயர்லாந்து |

**பன்னாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை : 02**

**பொதுநலவாய மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்**

அண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவத்தினை பெற்றுக் கொண்ட கீழைத்தேய ஐரோப்பாவைச் சார்ந்த பல நாடுகள் உள்ளடங்கலாக மொத்த கீழைத்தேய ஐரோப்பிய நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை உறுதிப்படுத்தும் பொருட்டு, விஷேட கவனத்தினைச் செலுத்தி கடந்த ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்புகளைப் பேணுவதில் கடந்த ஒரு வருட காலமாக கவனம் செலுத்தப்பட்டது

## 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல உயர்மட்ட சந்திப்புகள்.

- யூன் 2012 இல், அதி மேன்மைதகு ஜனாதிபதி அவர்கள் இங்கிலாந்தின் இலண்டன் நகரில் நடைபெற்ற பிரித்தானிய இராணியாரின் வைரவிழாவில் பங்குபற்றினார். இந்த விஜயத்தின்போது சனாதிபதி அவர்கள் பிரிட்டிஷ் பிரதம மந்திரியுடன் பரஸ்பர இரு தரப்பு கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், 2013 ஆம் ஆண்டு பொதுநலவாய இராஜாங்க தலைவர்களின் கூட்டங்களுக்காக விருந்தோம்பல் வழங்குவதற்காக இலங்கை மேற்கொள்ளும் முன் ஆயத்தங்கள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு மேலும் பொதுநலவாய செயலாளர் நாயகத்துடன் சந்திப்பு இடம்பெற்றது.

- யூன் மாதத்தில், அதி மேதகு ஜனாதிபதி அவர்கள் வதிக்கான்நாட்டிற்கு அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொண்டார். இதன் போது புனித 26ஆம் பெனடிற் பாப்பரசர் மற்றும், காடினல் Tarcisio Bertone- Holy See இன் செயலாளர் ஆகியோரை சந்தித்தார்.

- நீண்டகால நிலைப்பாட்டு அபிவிருத்தி தொடர்பாக (Rio +20)ஐக்கிய நாடுகள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக அதி மேன்மைதகு ஜனாதிபதி அவர்கள் Rio de Janeiroஇற்கு சென்றார். இதன் போது மொன்டெனெக்ரோ மற்றும் ஹங்கேரி நாட்டு தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

- யூன் 2012 இல் கௌரவ வெளிவிவகார அமைச்சர் ஹங்கேரி சென்று அதிகார பூர்வ இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். ஹங்கேரியா, ஆசியா நாடுகளுடன் தமது உறவுகளை எதிர்காலத்தில் பரவலாக்கும் நோக்கில் இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது. நொவம்பர் 2012 இல், ஹங்கேரி நாட்டு வெளிநாட்டு அமைச்சர் இலங்கையிற்கு விஜயம் செய்தார். ஹங்கேரி நாட்டு பாராளுமன்ற சபாநாயகரும் இலங்கை வருமாறு அழைக்கப்பட்டார். ஜுன் மாதத்தில் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் விஜயம் செய்தபோது, இரு நாட்டின் வெளிநாட்டு அமைச்சுக்களிடையே முறைசார் கலந்துரையாடல்களை நடாத்தும் நோக்கில் அரசியல் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இலங்கை மற்றும் ஹங்கேரியா நாடுகள் கைச்சாத்திட்டன. அதற்கு பிரதிபலிக்கும் வகையில் ஹங்கேரியா வெளிநாட்டு அமைச்சர் 2012 நொவெம்பர் மாதத்தில் இலங்கையிற்கு விஜயம் செய்தார்.அதன் பிரதிபலானாக லபுகம- கலட்டுவாவ நீர் சுத்திகரிபு கருத்திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காகத் தேவைப்படும் நிதியுதவி ஹங்கேரியா எக்ஸீம் வங்கியினால் வழங்குவதாக முடிவுசெய்யப்பட்டது.

- ஜனாதிபதி வைரவிழாவில் பங்குபற்ற ஐக்கிய இராச்சியம் சென்றவேளை, வெளிவிவகார அமைச்சரும் ஐக்கிய இராச்சியத்தின் வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய நடவடிக்கைகள் தொடர்பாக அரசாங்க செயலாளர் அதிமேன்மைதகு (Rt) Willian Haqeஉடன் இலண்டன் நகரில் இரு தரப்பு உடன்படிக்கை நடாத்தினார். அதற்குப் பின்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் 2012 செப்டம்பர் மாதத்தில் கேம்பிறிச் பல்கலைக்கழகத்திற்கு உரையாற்ற சென்ற போது, ஐக்கிய இராச்சியத்தின் பாராளுமன்ற துணை அரசாங்க செயலாளர் இருதரப்பு கருத்துக்கள் தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

- அமைச்சர் யூன் மாதம் உரோமில் இருந்தபோது இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இத்தாலி பிரதி அமைச்சருடன் நடத்தினார். இந்த சந்திப்பை அடுத்து, வெளிவிவகார அமைச்சரினால் அதற்கு முன்னைய மாதத்தில் இத்தாலியில் வடபகுதியில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட மக்களது பயன்பாட்டிற்காக, ஒரு தொகுதி தேயிலையை நன்கொடையாக இத்தாலி அரசுக்கு வழங்கப்பட்டது.

- கௌரவ அமைச்சர், சான் மறின்னோவிலும், வெளிநாட்டு அமைச்சர் உரோமிலும் சந்தித்ததுடன், இங்கு இரு நாட்டிற்கும் இடையேயான இராஜ தந்திர உறவுகளை நிலைநிறுத்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அவர்கள் கைச்சாத்திட்டனர்.

- செப்ரெம்பர் மாதம் நிவ்யோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் பொதுக்கூட்டத்திற்கு உடனிகழ்வாக,அமைச்சர் செக் குடியரசு, சைப்ரஸ், ருமேனியா மற்றும் பின்லாந்து வெளிநாட்டு விவகார அமைச்சர்களுடன் இரு தரப்பு கலந்துரையாடல்கள் நடாத்தினார்.

- செக் குடியரசு மற்றும் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர்களிடையே உத்தியோகபூர்வ இருதரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்காக ஒக்டோபர் மாதத்தில் கௌரவ வெளிநாட்டு விவகார பிரதி அமைச்சர் செக் குடியரசு சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டார்.

- இந்த வருடத்தின் போது, ஐரோப்பாவை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும்,முதுநிலை அதிகாரிகளும் இலங்கைக்கு விஜயம் செய்தார்கள்.

- பெப்ரவரி 2012 இல், சுவிட்சர்லாந்து வெளி விவகார அமைச்சை சார்ந்த ஆசியா பசுபிக் பிரிவு பிரதித் தலைவர், வெளிவிவகார அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

- மார்ச்/ஏப்ரல் 2012 இல் கௌரவ (Rt) Lord Naseby, (இலங்கைக்கான அனைத்துக்கட்சி பாராளுமன்றக் குழுவின் தலைவரும் பிரித்தானியா பாராளுமன்றத்தின் மேலவை அங்கத்தவரும்) இலங்கையிற்கு வருகைத்தந்தார். இந்த விஜயத்தின்போது அவர் அதி மேதகு ஜனாதிபதியை சந்தித்ததுடன், பல அமைச்சர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார். அத்துடன் வட தென் மாகாணங்களுக்கும் விஜயம் செய்தார். ஐக்கிய இராச்சியத்திற்கு திரும்பியதை அடுத்து,Lord Naseby , House of Lordsஇற்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

- Dr.Wolfgang Waldner,அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர், ஏப்பிரல்/மே 2012 இல் கொழும்புக்கு வருகைத்தந்ததுடன், கௌரவ பிரதி வெளிவிவகார அமைச்சருடனும் மற்றைய அமைச்சர்களுடனும் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

- யூலை/ஆகஸ்ட் மாதப் பகுதிகளில், கௌரவ James Wharton (MP)தலைமையில் பிரிட்டிஷ் பாராளுமன்ற விசேட தூதுக்குழு இலங்கை வந்தடைந்தது. அவர்கள் ஜனாதிபதியை சந்தித்ததுடன் அமைச்சரவை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன்கலந்துரையாடல்களை மேற்கொண்டதுடன், மத்திய பகுதி, வட பகுதி மற்றும் கிழக்கு பகுதி மாகாணங்களுக்கு விஜயம் செய்தனர்.

- யூலை 2012 இல், இலங்கை மற்றும் பல்கேரியா நாட்டு வெளிநாட்டு அமைச்சுக்களிடையேயான இருதரப்பு பேச்சு வார்த்தையானது, பல்கேரியாவின் தலைநகரான சோபியாவில் நடைபெற்றது. இந்து வருடமானது, இருநாடுகளுக்கிடையேயான இராஜதந்திர உறவுகள் உருவாக்கப்பட்டு 50ஆவது வருடாந்த பூர்த்தியை குறிக்கிறது.

- ஆகஸ்ட் 2012 இல், போலந்து நாட்டு வெளிநாட்டு விவகாரங்களுக்காக துணை அரசாங்க செயலாளர் இலங்கைக்கு விஜயம் செய்தார். இச்செயலாளர், இலங்கை வெளிவிவகார செயலாளருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையை நடத்தினார். மேலும் சர்வதேச உறவுகள் மற்றும் மூலோபாய ஆய்வுகளுக்கான லஷ்மன் கதிர்காமர் நிறுவனத்திற்கும் மற்றும் சர்வதேச விவகாரங்காரங்கள் தொடர்பான போலந்து நிறுவனத்திற்கும் (PISM) இடையே

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது. செக் பாராளுமன்றத்தின் வெளிநாட்டு விவகார குழுவின் தவிசாளரின் தலைமைத்துவத்தின் கீழ் செக் குடியரசின் நான்காம் அங்கத்துவ பாராளுமன்ற பிரதிக்குழுவொன்று 2012 நொவெம்பர் மாதத்தில் இலங்கையிற்கு விஜயம் செய்தனர். ஜேர்மனில் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சின் தென் ஆசியா கிளைத்தலைவர், இலங்கையைப் போய்ப் பார்த்ததுடன், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்களின் வளர்ச்சி மதிப்பிடுவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் கலந்துரைடயாடல்கள் இடம்பெற்றன. அதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு விவகார அமைச்சுடனும் கலந்துரைடாடல்கள் இடம்பெற்றன.

- குறிப்பிடத்தக்க அளவு இலங்கையர்கள் வசிக்கும் ஐரோப்பிய தலைநகரங்களில் அமைந்துள்ள துாதரகங்களினால், புலம்பெயர்ந்தோருடன் தொடர்ச்சியான உறவுகளை பேணி,LTTEஇனரின் பரப்பப்படும் திரிவுபடுத்தப்பட்ட பிரச்சாரங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தியுள்ளன.

**ஐரோப்பியஒன்றியம்**

- கடந்த ஒரு வருட காலமாக இலங்கையானது ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவை புத்துணர்ச்சியூட்டுவதில் ஈடுபட்டுள்ளது. இது இலங்கைக்கான முக்கிய ஏற்றுமதிச் சந்தையாகும். 2013 இல் அடுத்த EU - இலங்கை இணைப்பு ஆணைக்குழு கூட்டத்தை பிரசல்ஸில் வைப்பதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

- செப்டம்பர் 2012 இல் இலங்கை - ஐரோப்பிய ஒன்றியத்தின் வான்சேவை ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

- மீள் அனுமதிப்பு தேசிய ஒருங்கிணைப்பு குழு (NCCR)ஸ்தாபிக்கப்பட்டதன் பிரதிபலனாக, இதன் மூலம் இலங்கை ஐரோப்பிய மீள் அனுமதிப்பு உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி, இலங்கை ஐரோப்பிய கூட்டிணைப்பு மீள் அனுமதிப்பு குழு அழைப்பிற்காகத் தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத் வசதிகள் ஏற்படுத்துவதற்கு முடியுமாகயிருந்தது.

- கடந்த வருடங்களாக இலங்கை, ஐரோப்பிய பாராளுமன்றத்துடன் நெருக்கமான தொடர்பை வைத்துள்ளது. ஏப்ரல்/மே 2012 இல் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தெற்கு ஆசியாவுடன் உறவுகளைக் கொண்ட விசேட துாதுக்குழுவின்பிரதிநிதிகள் இலங்கை வந்தார்கள். இந்த விஜயமானது பெப்ரவரி 2011 இல் மேற்கொண்ட விஜயத்தின் பின்தொடர் நடவடிக்கை (follow up) ஆகும். அவர்களின் வருகையின் பின்னரான வரையுள் அறிக்கை (draft report)ஆனது முதல் விஜயம் தொடக்கம் பல சாதகமான முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதை ஒப்புக்கொள்கிறது. ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தெற்கு ஆசிய பிரதிநிதிகள் குழுஆனது, இலங்கை பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கு ஐரோப்பிய பாராளுமன்றத்தினை பார்வையிடுமாறு அழைப்பு விடுத்தது

**பொதுநலவாயம்**

2013 ஆம் ஆண்டு பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் இலங்கை நடாத்தியமை காரணமாக,பொதுநலவாயத்துடன் இலங்கை நடாத்தும் சர்வதேச உறவுகள் கடந்த வருடத்தில் அதிகரிக்கப்பட்டது. அதிமேன்மை தகு சனாதிபதி ஜுன் மாதம் வைரவிழாவை முன்னிட்டு ஐக்கிய இராச்சியத்திற்கு சென்றபோது, அவர் பொதுநலவாய செயலாளர் நாயகத்தை சந்தித்தார். செப்டம்பர் மாதம், பொதுநலவாய செயலாளர் நாயகம் இலங்கைக்கு விஜயம் செய்தார். 2013 பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் முன்னிட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஏற்பாடுகள் மற்றும் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போருக்கு பின்னரான அபிவிருத்தி பற்றியும்

சாதகமாக கூறினார். மேலும் பொதுநலவாயத்தினால் உதவி வழங்கப்படும் வாழ்வாதார அபிவிருத்தி திட்டத்தை பார்ப்பதற்கு செயலாளர் நாயகம், கிழக்கு பகுதிக்கு சென்றார். செயலாளர் நாயகத்துடன் பொதுநலவாய செயலாளரும் இரு விஜயங்களை ஏப்ரல் மற்றும் செப்டம்பர் 2012 இல் இலங்கைக்கு மேற்கொண்டார். இது பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம்2013 ஐ முன்னிட்டு நடைபெறும் ஏற்பாடுகளைக் கண்டறியவும் கலந்துரையாடவும் ஆகும்.

- 17 செப்டம்பர் 2012 இல்,பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம்செயற்பணி செயலகமானது கௌரவ அமைச்சரினால் பண்டாரநாயக்கநினைவு சர்வதேசகட்டிடத் தொகுதியில் (BMICH) ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த செயலகமானது பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம்2013 உடன் சம்பந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் முன் ஆயத்த வேலைகளை ஒழுங்குபடுத்தும்.

- பொதுநலவாய செயலாளர் அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் மேற்கொண்டபயணங்களை அடுத்து, பொதுநலவாய வணிக மன்றத்தின் பிரதிநிதிகள் ஒக்டோபர் 2012 இல் இலங்கைக்கு விஜயம் செய்திருந்ததுடன்,2013 பொதுநலவாய வணிக மன்றம் (Commonwealth Business Forum 2013)தொடர்பாகஇலங்கை வழங்கும் முன்னுரிமைகளை கண்டறிவதற்காக குறித்த அமைச்சர்களுடன் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன. பொதுநலவாய வணிக மன்றத்தின்பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியை சந்தித்ததுடன்,இலங்கையை பிராந்திய பொருளாதார மற்றும் வர்த்தக மையமாக மீண்டும் கட்டியெழுப்புவதற்காக காணொளி செயல்முறை ஏற்பாட்டினை (video projecting) காட்சிக்கு வைக்கப்பட்டதுடன், அந்த குறிக்கோளை எய்துவதற்காக கலந்துரையாடப்பட்டது. ஒக்டோபர் மாதத்தில் இலங்கை தொழில் பிரஜைகளுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொதுநலவாய வணிக மன்றம் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்பட்டு,இந்த கூட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த ஆரம்ப நிகழ்ச்சிக்கு பொதுநலவாய வணிக மன்றத்தின் பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக அமைச்சர்கள், கொழும்பை மையமாகக் கொண்ட இராஜதந்திர சமூகம், அரசின் முதுநிலை அதிகாரிகள் மற்றும் வணிகத் தலைவர்கள் சமூகம் அளித்தார்கள்.

- பொதுநலவாய இளைஞர் மன்றத்திற்குத் தேவைப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடாத்துவதற்காக பொதுநலவாய அறநிறுவனத்தின் பிரதிநிதிகள் 2012நொவம்பர் மாதம் இலங்கையிற்கு வந்தனர்.

- **ஆ. அமெரிக்கா பிரிவு**

**பிராந்திய செயற்பாட்டு எல்லை: 35**

அமெரிக்கா ஐக்கிய குடியரசு, கனடா, கியூபா, பிரேசில், அர்ஜென்தீனா, ஆன்டிகுவா மற்றும்பார்புடா, பஹாமாஸ், பார்படாஸ், பெலிஸ் பொலிவியா, சிலி, கொலம்பியா, கோஸ்டாரிகா, பொமினிகா, டொமினிகன் குடியரசு,ஈக்வடார், எல் சால்வடோர், கிரேனடா குவாதமாலா, கயானா, ஹெய்ட்டி, யமேக்கா, மெக்ஸிக்கோ, நிகாரகுவா, பனாமா, பரகுவே, பெரு,St.Kittsமற்றும் நெவிஸ்,St.Vincent,கிரெனேடின்ஸ், செயிண்ட், லூசியா, ஹோண்டுராஸ், சூரினாம்,வுசனைனைய மற்றும் டொபாகோ, உருகுவே, வெனிசுலா

**தூதரகங்களின் எண்ணிக்கை : 04**

ஐக்கிய அமெரிக்கா, கனடா, கியூபா, பிரேசில்

**சமஅங்கீகாரங்களின் எண்ணிக்கை:**

| | | |
|---|---|---|
| வொஷின்டன் டீ.சீ. | : | மெக்சிக்கோ |
| ஹவான | : | வெனிசூலா மற்றும் யமேக்கா |
| பிரேசிலியா | : | அர்ஜென்தீனாசிலி, கொலம்பியா மற்றும் பெரு |

வட அமெரிக்காவுடனான உறுதியான உறவுகளை பேணும் அதேவேளை, லத்தின் அமெரிக்க நாட்டுடனான உறவுகளை பலப்படுத்துவதற்கான முன்னெடுப்புகளும் கடந்த வருடங்களில் எடுக்கப்பட்டன. லத்தீன் அமெரிக்காவின் வளர்ந்து வரும் உறுதியை கருத்தில் கொண்டு கரீபியன் மற்றும் லத்தீன் அமெரிக்காவில் உள்ள 13 நாடுகளுடன் உறவுகளை ஏற்படுத்துவதில் அமைச்சரவையின் அனுமதி பெறப்பட்டது. நிவ்யோர்க் இல் உள்ள நிரந்தர வதிவிட பிரதிநிதித்துவ தூதரகத்தால் இதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்த நாடுகள்குவாதமாலா, பெலஸ், நிகரகுவா, பார்படாஸ், கிரேனடா,St.Kittsமற்றும் நெவிஸ்செயின்ட் வின்செண்ட் மற்றும் கிரனடைன்ஸ்,சூரினாம், ஹோண்டுராஸ், ஆன்டிகுவாமற்றும் பார்புடா, டொமினிக்காஹெய்டிமற்றும் செயிண்ட் லூசியா என்பனவாகும்.

அதிமேன்மைதகு ஜனாதிபதி யூன் மாதம் அளவில் கியூபாவிற்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டார். அந்த நாட்டுடனான உறுதியான உறவுகளை வலியுறுத்தியதுடன், கியூபா நாட்டு ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினார். இரு நாடுகளுக்கும் இடையேயான தெங்கு அபிவிருத்திக்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது கியூபா நாட்டு கமத்தொழில் அமைச்சு, இலங்கை தெங்கு அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஜனதா பெருந்தோட்ட அமைச்சு என்பவற்றிற்கிடையேயான கைச்சாத்திடல் ஆகும். சுகாதார மற்றும் விவசாய துறைகளில் கியூபாவின் தொழில்நுட்ப உதவிகளை பெற முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிமேன்மைதகு ஜனாதிபதிநிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் மாநாட்டிற்கு (Rio+ 20) பங்குபற்றுவதற்காக Rio de Janeiroஇற்கு விஜயம் செய்தபோது,சிலி நாட்டு ஜனாதிபதியுடன் இருதரப்பு சந்திப்பை நடத்தினார்.

இலங்கை நாடு ஆனது பிரேசில் நாட்டுடன் கடந்த வருடம் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டது. இது வர்த்தக சம்மேளனம் மற்றும் விவசாயம் என்பனவற்றிற்கிடையேயான ஒத்துழைப்பு ஆகும்.

கடந்த வருடங்களாக இலங்கை, அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்பை பேணுகிறது. அமெரிக்க செயலாளர், திருமதி.கில்லறி கிளிங்டனின் அழைப்பின் பேரில் இலங்கை வெளிவிவகார அமைச்சர், வாசிங்டன் டி.சி. இற்கு மே 2012 இல் விஜயம் செய்தார். இந்த விஜயமானது இருதரப்பு உறவுகளை பலப்படுத்தியது. அரச செயலாளருக்கு மேலதிகமாக,ஐக்கிய குடியரசு நிர்வாக கட்டமைப்பில் வேறு முதுநிலை அதிகாரிகள்,சட்ட மாமன்ற மேலவை உறுப்பினர்,சட்ட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கல்விமான்கள் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.
செப்டெம்பர் மாதம் நடந்த 67 ஆவது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்திற்கு கலந்துகொண்டு இலங்கை பிரதிநிதிகள் குழுவின் தலைமைத்துவத்தினை வகித்தார். கௌரவ அமைச்சர் நிவ்யோர்க் நகரத்திற்கு சென்றபோது கியூபா நாட்டு வெளிவிவகார அமைச்சருடன் இருதரப்பு கலந்துரையாடல்கள் மேற்கொண்டதுடன், அரசியல் நடவடிக்கைகளுக்காக. துணை அரசாங்க செயலாளரையும் சந்தித்தார்.

இரு நாட்டவர்களின் இராஜ தந்திர மற்றும் உத்தியோகபூர்வ கடவுச் சீட்டு வைத்திருப்போரின் விசா தேவைகளிலிருந்து விலக்கு அளித்தல் என்பது சம்பந்தமாக, இலங்கையும் சிலியும் யூன் 2012 இல் ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

இலங்கை மற்றும் ஐக்கிய குடியரசிடையே நடாத்தும் பல்முக துணை உறவுகள் மெய்ப்பித்துக்காட்டி, ஐக்கிய குடியரசு முதுநிலை அதிகாரிகள் பல கடந்த வருடத்தில் இந்நாட்டு பார்யைீடுகளில் ஈடுபட்டனர்.

தெற்கு மற்றும் மத்திய ஆசியா நடவடிக்கைகளுக்காக பிரதி உதவி அரசாங்க செயலாளர் சனவரி மாதத்திலும், அரசாங்க திணைக்களத்தின் உலகளாவிய குற்றவியல் தொடர்பான நீதி வழங்கப்படும் அலுவலகத்துக்கான தூதுவர் பெப்ருவரி மாதத்திலும், திறைசேரி திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் பெப்ருவரி மாதத்திலும்,பொதுமக்கள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும்மனித உரிமைகள் தொடர்பான துணை அரசாங்க செயலாளர் பெப்ருவரி மாதத்திலும், (USAID) ஆசியாவின் நிர்வாகத்திற்காக முதுநிலை பிரதி உதவியாளர் மார்ச் மாதத்திலும், தென் ஆசியாவிற்காக உதவி வர்த்தக பிரதிநிதி மாரச்/ஏப்ரல் மாதத்திலும், ஜுன் மாதத்திலும், தேசிய பாதுகாப்பு மன்றத்தின் நீதிமன்ற திணைக்களத்தின் முதுநிலை உத்தியோகத்தர் ஜுன்/ ஜுலை மாதங்களிலும், வெளிநாட்டு விவகாரம் தொடர்பான பிரதி பாராளுமன்ற உறுப்பினர் சபைக் குழுவின் பதவியணியின் அங்கத்தவர்கள் ஓகஸ்ட் மாதத்திலும், தெற்கு மற்றும் மத்திய ஆசியா நடவடிக்கைகளுக்குரிய உதவிச் செயலாளர் செப்டெம்பர் மாதத்திலும்,சனத்தொகை, அகதிகள் மற்றும் குடியகழ்வுத் திணைக்களக் காரியாலயத்தின் அகதிகளுக்கான பிராந்திய இணைப்பாளர் ஒக்டோபர் மாதத்திலும், தெற்கு மற்றும் மத்திய ஆசியா நடவடிக்கைகளுக்காக ஐக்கிய குடியரசு பிரதி உதவிச் செயலாளர், மற்றும் அரச திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியா நடவடிக்கை தொடர்பான அலுவலகத்தின் பணிப்பாளர் நொவெம்பர் மாதத்திலும் இலங்கைக்கு வருகை தந்தனர்.

**மார்ச் 2012 இல் இலங்கைக்கு ஒரு பாராளுமன்ற விசேட தூதுக்குழு கனடாவில் இருந்து விஜயம் செய்தது**

**சுயாதீன நாடுகளின் பொதுவுரிமையரசு**

**பிராந்திய செயற்பாட்டு எல்லை** : 12 ஆர்மேனியா, அசர்பைஜான், பெலாரஸ், ஜோர்ஜியா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், மோல்டாவ, ரஷ்யா, டெஜிகிஸ்தான் ,டர்க்மெனிஸ்தான், யுக்ரேன், உஸ்பெகிஸ்தான்.

**தூதரகங்களின் எண்ணிக்கை** : 01 ரஷ்யா

**சமஅங்கீகாரங்களின் எண்ணிக்கை**:

மொஸ்கோ : ஆர்மேனியா, கசகஸ்தான், கிர்கிஸ்தான், மோல்டாவ, டெஜிகிஸ்தான் யுக்ரேன், உஸ்பெகிஸ்தான்.

டெஹொரான் : அஸர்பைஜான், டர்க்மெனிஸ்தான்
அன்காரா : ஜோர்ஜியா

அரசியல் நடவடிக்கைகள்,சுயாதீன நாடுகளின் பொதுவுரிமையரசு, ரஷ்யா பேரவை மற்றும் சுயாதீன நாடுகளின் பொதுவுரிமையரசிற்குரிய நாடுகளைப் போல் ஜோர்ஜியா குடியரசுடன் இலங்கை நடாத்தும் உறவுகளுக்குரிய நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்றது. ரஷ்யாவுடன் நாம் பேணும் நெருங்கிய மற்றும் நட்புணர்வு உறவுகளை மேம்படுத்துவதற்காக விஷேட கவனத்தினைச் செலுத்திவருவதைப் போல், சுயாதீன நாடுகளின் பொதுவுரிமையரசிற்குரித்தாகும் வேறு நாடுகளுடனும், ஜோர்ஜியாவுடன் இலங்கை பேணும் உறவுகள் வலுப்படுத்தும் நோக்கிலும் இருக்கின்றது..

## ரஷ்யா பேரவை

இலங்கை 2012 ஆம் வருடத்தில் ரஷ்யா பேரவையுடன் இலங்கை நடாத்தும் இரு தரப்பு உறவுகள் மேலும் வலுமைபடுத்தியது.. இந்த வருடத்திற்கு இரு நாடுகளிடையே இராஜதந்திர உறவுகள் நிறைநிறுத்தப்பட்டு 55 வருடங்கள் பூர்த்திசெய்துள்ளது.

2012 மே மாதம் வெளிநாட்டு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல.பீரிஸ் அவர்கள் ரஷ்யா குடியரசில் ஈடுபட்ட உத்தியோகபூர்வ விஜயம் இந்த வருடத்தில் ஏற்பட்ட முக்கிய நிகழ்வாகும். இந்த விஜயத்தின்போது ரஷ்யா பேரவையின் வெளிநாட்டு விவகார அமைச்சர் சர்ஜைய் லவ்ரோ அவர்களுடன் மற்றும் ரஷ்யா அரசின் முதுநிலை உத்தியோகத்தர்களுடன் பல கருத்துக்கள் தொடர்பாக கலந்ர்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ரஷ்யா பேரவையின் மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் சட்ட ஆட்சி தொடர்பான ஆணையாளர் மற்றும் வெளிநாட்டு விவகார அமைச்சின் விஷேட கடமைப் பொறுப்பு தூதுவர் கொன்ஸ்டன் டொல்கோ அவர்களின் தலைமையினாலான பிரதிநிதிகள் குழு யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் பிணக்குகளுக்கு தீர்வு வழங்கும்போது, விஷேடமாக ஜினீவாவில் மனித உரிமை ஆணைக்குழு 2012 நொவெம்பர் மாதத்தில் ஏற்பட்ட உலக மீளாய்வு தொழிற்பாட்டினை கவனத்திற் எடுத்துக்கொள்ளப்பட்டபோது ஏற்படுத்திக் கொண்டுள்ள வளர்ச்சி பற்றிய காரணங்களினை தெளிவுபடுத்திக் கொள்ளும் நோக்கில் செப்ரெம்பர் மாதத்தில் இலங்கையிற்கு விஜயம் செய்தனர்.

இந்த வருடத்தின் ஜுன் மாதத்தில் ரஷ்யா பேரவையின் ஒன்றிணைந்த புலம்பெயர்வு சேவைத் திணைக்களத்தினது பிரதிநிதிகள் குழு இலங்கையிற்கு சமுகமளித்துள்ளதுடன், அங்கு இருநாட்டிடையே மீள பொறுப்பேற்பது தொடர்பான உடன்படிக்கை வரையுள் தொடர்பில் நடந்த கலந்துரையாடல்களுக்கு கலந்துகொள்ளல்.

### கசகஸ்தான்

இலங்கை மற்றும் கசகஸ்தானிடையே இருதரப்பு உறவுகள் மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக 2012 வருடத்தில் குறிப்பிட்ட அபிவிருத்தி காணக்கூடியதாகயிருக்கின்றது. சககஸ்தானில் வெளிநாட்டு விவகார அமைச்சரின் அழைப்பின் பேரில், வெளிநாட்டு விவகார அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் அவர்கள் கசகஸ்தானை பார்வையிடச் சென்றார். இலங்கை வெளிநாட்டு அமைச்சரொருவர் கசகஸ்தானில் உத்தியோகபூர்வ விஜயத்தில் ஈடுபட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.இங்க பல காரணங்கள் தொடர்பாக இரு தரப்பு கலரந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன்,கௌரவ பேராசிரியர் பீரிஸ் அவர்கள் கசகஸ்தானில் பிரதமரையும் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இரு நாடுகளினது வெளிநாட்டு அமைச்சர்களிடையே வருடாந்த இரு தரப்பு கலந்துரையாடல்களை மேற்கொள்வது தொடர்பான நல்லுறவு உடன்படிக்கையிற்கு கைச்சாத்திட்டனர்.

2012 செம்டெம்பர் மாதத்தில், பாராளுமன்ற உறுப்பினர், வெளிநாட்டு விவகார பிரதி அமைச்சர் கௌரவ நியோமால் பெரேரா அவர்கள் ஆசியாவின் உள்வினை மற்றும் தன்னம்பிக்கை கட்டியெழுப்பும் அளவைகள் (ICA) தொடர்பான மாநாட்டிற்கு கலந்துகொள்வதற்காக கசகஸ்தானிற்கு விஜயம் செய்தார். துருக்கி மற்றும் கசகஸ்தான் வெளிநாட்டு அமைச்சர்களின் அழைப்பின்பேரில் “விஷேட விருந்தினராக” இந்த மாநாட்டிற்கு இலங்கை பங்குபற்றிய முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

இலங்கை மற்றும் கசகஸ்தான் வெளிநாட்டு அமைச்சுக்களிடையே வருடாந்த இருதரப்பு கலந்துரையாடல்களின் முதலாவது சுற்று, 2012 ஒக்டோபர் மாதம் கொழும்பில் இடம்பெற்றது.கசகஸ்தான் வெளிநாட்டு விவகார அமைச்சின் ஆசியா மற்றும் ஆபிரிக்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அய்டர்பர்க் துமாதொவ் அவர்கள் கசகஸ்தான் குழுவிற்கு தலைமைத்துவம் வகித்ததுடன், வெளிநாட்டு விவகார செயலாளரினால் இலங்கை பிரதிநிதிகள் குழுவின் தலைமைத்துவத்தினை வகித்தது.

கசகஸ்தான் சனாதிபதியினால் விடுக்கப்பட்ட அழைப்பிற்கிணங்க, கௌரவ சனாதிபதி அவர்கள், 2012 நொவெம்பர் மாதம் கசகஸ்தான் சென்று, அங்கு கசகஸ்தான் சனாதிபதியுடன் இரு தரப்பு கலந்துரையாடல்கள் மேற்கொண்டார். .இரு நாடுகளிடையே சுற்றுலா ஒத்துழைப்பு தொடர்பான உடன்படிக்கையிற்கும் இந்த பிரயாணத்தின்போது கைச்சாத்திடப்பட்டது.

**யுக்ரேன்**

மீளாய்விற்குட்படுத்தும் கால எல்லைக்குள், இலங்கை யுக்ரேனுடனான தனது உறவுகள் மேலும் வலுப்படுத்திக்கொண்டது.

2012 ஏப்ரல் மாதத்தில், இரட்டை வரி விதிப்பினை தடுப்பதற்காக முன்மொழியப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பான மதியுரைகளுக்காக யுக்ரேன் நிதி அமைச்சின் பிரதிநிதிகள் குழு கொழும்பிற்கு வந்ததுடன், இந்த வருடத்தில் மே மாதத்தில் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்தழைப்பு தொடர்பான கூட்டு அரசிடையே உடன்படிக்கை நிலைநிறுத்தவது தொடர்பாக வரையுள் உடன்படிக்கை மற்றும் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் பாதுகாப்பது தொடர்பான வரையுள் உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்களுக்காக யுக்ரேன் பொருளாதார அபிவிருத்தி மற்றும் வர்த்தக அமைச்சின் பிரதிநிதிகள் குழு இலங்கையை பார்வையிடுவதற்காக வந்தனர்.

**ஜோர்ஜியா**

ஜோர்ஜியா குடியரசினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளினை கருத்திற்கொண்டு, இலங்கை தனது கம்பனிகளை உடன்நிகழ் பதிவுசெய்தல் துருக்கியில் அமைந்துள்ள இலங்கை தூதுவர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்தது.

**சுயாதீன நாடுகளின் பொதுவுரிமையரசிற்குட்படும் நாடுகளுடன் உறவுகள்**

சுயாதீன நாடுகளின் பொதுவுரிமையரசு பிராந்தியத்திற்குட்படும் ஏனைய அனைத்து அங்கத்துவ நாடுகளுடன் இலங்கை நட்புணர்வு உறவுகள் பேணுகின்றது.

# ஐ.நா. மற்றும் பன்னாட்டு விவகாரங்களுக்கான பிரிவு, மனித உரிமைகள் மற்றும் மாநாட்டுப் பிரிவு

**ஐ.நா. மற்றும் பன்னாட்டு விவகாரங்களுக்கான பிரிவு, மனித உரிமைகள் மற்றும் மாநாட்டுப் பிரிவு**

**ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டம்**

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் ஐ.நா. பொதுச் கூட்டத்தில் 67 ஆவது அமா்வில் பிரதான விவாதத்திற்கு கலந்துகொண்டு இலங்கை அரசின் பிரதிநிதிகள் குழுவின் தலைமைத்துவத்தினை வகித்தார். கௌரவ அமைச்சர் பொதுச்சபையில் உரையாற்றியதுடன், 19 நாடுகளிலுள்ள வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் முதுநிலை உத்தியோகத்தர்களுடன் இரு தரப்பு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**மனித உரிமைகள் மன்றம்**

ஐக்கிய நாடுகள் சபையினால் 2012 மாரச், ஜுன் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் நடாத்தப்பட்ட மனித உரிமைகள் மன்றத்தின் அமர்விற்காக இலங்கை பிரதிநிதிகள் குழு பங்கேற்பு தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கப்பட்டது. இலங்கையிற்கு உதவி கோருவதற்காக, 19 ஆவது அமர்விற்கு முன்னர், ஆபிரிக்கா, மத்தியகிழக்கு மற்றும் லத்தீன் அமெரிக்காவில் அமைந்துள்ள மனித உரிமைகள் மன்றத்தின் அங்கத்துவ நாடுகளுக்கு அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பல பார்வையீடுகள் தொடர்பாக இப் பிரிவினால் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டன.

**உலக காலமுறை மீள்பார்வை**

12. இப்பிரிவானது தேசத்திற்கு மகுடம், தேசிய தினம் மற்றும் வெசாக் பண்டிகை போன்றவற்றிற்கான விசேட வெளியீடுகளையும் / அறிக்கைகளையும், கட்புல செவிப்புல சாதனங்களையும் தயாரித்தது.

    இப் பிரிவானது பாராளுமன்றத்திற்கு விசேட சிறு குறிப்புக்களையும், அமைச்சின் வரவு செலவுக்கான அறிக்கையினையும் 2013 ல் CHOGM மற்றும் ஊடக சம்பந்தமான பொதுநலவாய பாராளுமன்ற கூட்டத்திற்கு தேவையான ஆரம்ப கட்ட வேலைகளையும் ஆவணங்களையும் தயார் செய்தது.

13. பெப்ரவரி மாதம் 4ம் திகதி முதல் 10ம் திகதி வரை, அனுராதபுரம் ஓயமடுவலில் நடந்த தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சின் காட்சிக் கூடத்தை அமைப்பதற்கு இப்பிரிவானது ஒருங்கிணைந்து செயற்பட்டது.

14. இப்பிரிவானது ஐ.நா வின் இலத்திரனியல் அரசாங்க சுட்டி தரப்படுத்தல் (e-government) கொள்கையின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்டு அமைச்சின் www.mea.gov.lk என்ற தரவுத்தளத்தை 18ம் திகதி ஜீலை மாதம் 2011ல் ஆள்களம் ஒன்றை ஸ்தாபித்தது. மும்மொழிகளிலும் தகவல்கள் / தரவுகள், அமைச்சின் தரவுத்தளத்திற்கும், அரச தகவல் மத்திய நிலையத்திற்கும் (GIS – 1919 சேவைகள்) அறிமுகப்படுத்தப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. அமைச்சின் வலைப்பக்கம் நாளாந்தம் அமைச்சின் நடவடிக்கைகள் மற்றும் ஊடக செய்திகள் உட்பட தூதுவராலய நடவடிக்கைகள் குறித்த செய்திகளையும் உள்வாங்குகின்றது.

15. ICTA வின் e-government ''இலத்திரனியல் அரசாங்கம்'' பற்றிய 2ம் கட்ட முன்னெடுப்புகள் பூர்த்தியடைந்துள்ளன. இப்பிரிவானது அமைச்சின் தரவுத்தளத்தினை அரச தகவல் மையத்தின் இணையத்தளத்தில் ICTA ன் பொது மின்னஞ்சல் அமைப்பில் ஸ்தாபித்துள்ளது. இந்த அமைச்சானது 2013ம் ஆண்டில் e-government தொகுப்பில் சேர்க்கப்படும் 6 அமைச்சுகளில் ஒன்றாக தனிசிறப்புப் பெற்று விளங்கும்.

16. இப் பிரிவானது தகவல் மையம் (IRB) ஒன்றினை தொடர்ந்து பேணி LTTE, APRC என்பவற்றின் நடவடிக்கைகள் பற்றிய கோப்புக்களை இலகுவாக பரிசீலிக்கும் வகையில் பாதுகாத்துப் பேணுகிறது. தகவல் மையத்தின் (IRB) பயங்கரவாதம் பற்றிய பிரிவானது கிரமமாக online ல் வைக்கப்படுகின்றது. இது ஆய்வாளர்களும் ஏனையவர்களும் சம்பந்தப்பட்ட தகவல் மையத்தின் விடயங்களை மேல்வாரியாகப் பார்க்க உதவுகின்றது.

17. வெளிநாட்டிலுள்ள தூதுவராலயங்களுடன் பலமான தகவல் மற்றும் தொடர்பாடல் பரிமாற்றப் பிணைப்புக்களை ஏற்படுத்துவதன் நிமித்தம் இப்பிரிவானது ஆவண முகாமைத்துவ முறைமை (DMS) ஒன்றினை ஆரம்பித்துள்ளது. அது இப்போது அதன் இறுதிக்கட்டத்தில் உள்ளது.

18. இப்பிரிவானது நாட்டிற்கு பிரயாணம் மேற்கொள்வது பற்றிய அறிவுரைகளை உற்று நோக்குகின்றது. பிரதிகூலமான அறிவுரைகள் பற்றி வெளிநாடுகளிலுள்ள தூதுவராலயங்களுடன் ஒருங்கிணைந்து அதைச் சரி செய்கின்றது. இது குறித்த இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை, குறித்த அறிவுரை வழங்கிய நாட்டுடன் மேற்கொள்கிறது.

19. இப்பிரிவானது வெளிநாட்டு இலங்கை தூதுவராலயத்துடனும் அது சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து, திரைப்பட வழாக்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் சுற்றுலா சம்பந்தமான நிகழ்வுகளை ஒழுங்கு செய்கின்றது.

20. இப்பிரிவானது அமைச்சின் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புகளுக்கான வேண்டுகோள்களை நிறைவேற்றி வசதி செய்து கொடுக்கின்றது.

21. அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் இரண்டு தொடர்பாடல் அதிகாரிகளையும் இரண்டு தகவல் சார்ந்த அதிகாரிகளையும் இப்பிரிவிற்கு புதிதாக சேர்த்துக் கொண்டது.

22. இப்பிரிவானது பெறுமதியானதும் நுட்பபாடான பதிவுகளையும் சுவடிக்கூடம் சார்ந்த ஆவணங்களையும் நுண் நிழற்பட பதிவு செய்வதன் மூலம் எதிர்கால எதிர்கால சான்றாதாரத்திற்காக பாதுகாக்க திடமிடுகின்றது. இவைகள் தற்போது இப்பிரிவில் வெறுமனே இடமின்றி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் ஒரு பிரபல்யமான கம்பனியின் சேவைகளைப் பெறப்பட்டு வேலையின் தன்மையினையும் ஏற்படும் செலவுத்தொகையினையும் மதிப்பீடு செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வழங்கிய மதிப்பீட்டுத்தொகை பரிசீலனை செய்யப்பட்டு, நிதி கிடைத்தவுடன் பணியை செய்து முடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

23. இப்பிரிவு இலங்கைக்கு வருகைதரும் பத்திரிகையாளர்கள் பற்றிய தரவுத்தளமொன்றை ஸ்தாபிக்க தற்போது திட்டமிடுகின்றது. இது கோப்புகளை சேர்ப்பதை குறைக்கவும் இலகுவாக இனங்காணவும் வழி செய்யும்.

# சட்டப்பிரிவு

## சட்டப்பிரிவு

**சட்டப்பிரிவின் முக்கிய பகுதிகளின் செயற்பாடு குறித்த ஒரு பொது விளக்கம்**

- வெளிவிவகார அமைச்சின் சட்டப்பிரிவானது 1967ல் ஸ்தாபிக்கப்பட்டது. சட்டப்பிரிவின் செயற்பாடானது சர்வதேச சட்டம் குறித்த சட்ட ஆலோசனைகளை அமைச்சின் செயலாளரினூடாக அமைச்சருக்கும், வெளிவவகார அமைச்சின் ஏனைய பிரிவுகளுக்கும், வெளிநாட்டிலுள்ள இலங்கையின் தூதுவராலயங்களுக்கும், இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கும் ஏனைய அமைச்சுக்களுக்கும் வழங்குவதாகும்.

**சட்டப் பிரிவினால் ஆலோசனைகள் பெறும் முதன்மை பகுதிகள்**

- சட்டப்பிரிவானது கொள்கை நிர்ணயங்களுக்கான சட்ட முறைமைகளை வழங்குகின்றது. குறிப்பாக காலத்திற்கு காலம் எழும் சர்வதேச விடயங்கள் பற்றியதாகும், உதாரணமாக எல்லைகள் குறித்த சர்ச்சைகளும், அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ராஜதந்திரிகளுக்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் சலுகைகள் போன்ற இன்னோரன்ன விடயங்களாகும்.

- சட்டப்பிரிவானது சர்வதேச சட்டங்கள் பற்றிய அறிவுரைகளை மற்றய அமைச்சுகளுக்கும், வெளிநாடுகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் அரச நிறுவனங்களுக்கும் வழங்குகின்றது. இது கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து சர்வதேச வர்த்தகமும் முதலீடும், போன்ற பரந்த எல்லைகளுடைய விடயங்களைக் கொண்டது. மேலும் சட்டப்பிரிவானது நீதமன்றம் சார்ந்த பரஸ்பர சட்ட உதவிகள், குற்றவியல், சிவில் , வர்த்தக, இரட்டை வரி விதிப்பு, முதலீட்டு பாதுகாப்பு, பதவி உயர்வு, கைதிகளின் பரிமாற்றம், குடியகல்வு, நாடு கடத்தல், ஆளணி மற்றும் கடற் சட்டங்கள் பற்றி கலந்துரையாடல்களையும் இறுதித் தீர்மானங்கள் எட்டுவதற்கான சந்திப்புகளையும் ஒழுங்கு செய்கின்றது.

- இலங்கையின் கடல் கடந்த சேவை ஒப்பந்தங்கள் வெளிநாடுகளின் இலங்கையின் தூதுவராலயத்தினால் மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகள், அந்நாடுகளில் உள்ளுரில் செய்யப்படும் ஆட்சேர்ப்புகள் அங்குள்ள இராஜதந்திர மட்டத்தின் சலுகைகள், சிறப்புரிமைகள் மற்றும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவராலயங்கள் பற்றிய விடயங்கள் பற்றி இப்பிரிவுடன் கலந்தாலோசிக்கப்படுகிறது. மேலும் இவைகள் சம்பந்தமான அமைச்சின் அறிவுறுத்தல் தொகுப்பிற்கான விளக்கத்தையும் அளிக்கிறது.

- வெளிவிவகார அமைச்சினதும் இரு தரப்பு சந்திப்புகளின் போது சட்ட பிரிவானது முக்கியமானதும் முனைப்புடன் கூடிய செயலாற்றலுடன் செயற்படுகிறது. இரு தரப்பு பேச்சு வார்த்தைகளின் போது முதலீடு பாதுகாப்பு, மீள் அனுமதி போன்ற விடயங்களை முன்னெடுத்துச் செல்கிறது.

**வான் சேவைகள்**

- சட்டப்பிரிவானது இவ்வருடப்பகுதியில் பின்வரும் நாடுகளுடன் வான் சேவைகள் பற்றிய கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான பங்களிப்பினைச் செய்தது.

**ஜப்பான்**

- பேச்சு வார்த்தைகளின் போது கொழும்பிலிருந்து நரிட்டாவிற்கும் நரிட்டா – கொழும்பிற்குமிடையிலான வான்வழிச் சேவையை 7ஆக அதிகரிக்க இரு தரப்பும் இணக்கம் தெரிவித்தன. பின்பு கோடைகாலத்தில் 2013ல் வரையரையில்லாத அடிக்கடியான உள் / வெளிப் பயணங்களை மேற்கொள்ளவும் இணங்கின. இதனால் இலங்கைக்கு வரையரையில்லாத அடுத்தடுத்து ஜப்பானிய விமான தளங்களுக்கு செல்லும் அனுமதி கிட்டியது.

- மேலும் இலங்கைக்கு 5ம் சுதந்திர போக்குவரத்து உரிமையை நடுத்தரப் புள்ளியூடாகச் செழுத்துவதற்கு ஒன்றும் அதற்கு அப்பால் ஒன்றுமாக வழங்கியது.

**இந்தோனேசியா**

- தற்போது நடைமுறையிலுள்ள வான் சேவைகள் உடன்படிக்கையில் நிகழ்கால தேவைகளுக்கேற்ப திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் வாரமொன்று 6 தொடக்கம் 14 வரை வான் சேவைகள் அதிகரிக்கப்பட்டன. இது ஓர் படி நிலை முறையாக கலந்தாலோசிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

**முதலீட்டு (ஆக்க முயற்சி) ஊக்குவிப்பு**

- இவ்வருடப்பகுதியில் கட்டார் நாட்டுடன் ஓர் பரஸ்பர முதலீட்டு ஆக்க முயற்சியும், பாதுகாப்பு இணக்கப்பாடும் கைச்சாத்திடப்பட்டன. சட்டம் பற்றிய துறையில் பாரிய அபிவிருத்தி ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் அமைச்சு முதலீட்டு ஆக்க முயற்சி மற்றும் பாதுகாப்பு உடன்படிக்கை போன்றவற்றிற்கான பேச்சுவார்த்தைக்கான மாதிரிச்சட்ட உரையொன்றின் மீள்முன்வரியொன்றை தயாரிக்க முடிவு செய்தது.

- புதிய மாதிரி சட்ட உரையின் மீள்முன்வரிவை தயாரிப்பதற்காக, சட்ட ஆலோசகரின் தலைமையில் சட்டமா அதிபர் காரியாலயம், இலங்கை முதலீட்டுச் சபை, பொருளாதார அபிவிருத்தி மற்றும் வெளிவவகார அமைச்சுகளைச் சார்ந்த அதிகாரிகளைக் கொண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது.

- புதிய வாசக உரையினை முன்வரிவு செய்வதற்காக முன்னால் சட்ட ஆலோசகர் சட்ட ஆலோசகர் டாக்டர் ரோஹண பெரேராவை கலந்தாலோசிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

- மாதிரி உரையின் முன்வரியானது 2012 டிசம்பர் மாதம் 31ம் திகதிக்கு முன் தயாராகிவிடும். இது நடைபெறும் வரை ஏனைய பல நாடுகளுடனான பேச்சுவார்த்தைகள் பின்போடப்பட்டுள்ளன.

**இரட்டை வரி விதிப்பு (Double Taxtation)**

- இவ் வருடப்பகுதியில் இலங்கையானது பலஸ்தீன நாட்டுடன் இரட்டை வரி விதிப்பு உடன்பாடொன்றை மேற்கொண்டுள்ளது. சட்டப் பிரிவு பிரதிநிதி இவ்வருடத்தில் எல்லா DT பேச்சுவார்த்தையின் போதும் பிரசன்னமாயிருந்தார்.

**மீள் அனுமதி**

- இவ் வருடத்தில் இலங்கையினது ரஷ்யக் கூட்டவை மீள் அனுமதிக்கான உடன்படிக்கை பற்றி ஆராய்த்துள்ளது. சட்டப் பிரிவானது அமைச்சின் மீள் அனுமதிக்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் (NCCR) குவிப்பொருள் இலக்காகக் கொள்கிறது.

- சட்டப்பிரிவானது ஐரோப்பிய மீள் அனுமதி உடன்படிக்கை போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய பங்கை வகிக்கின்றது.

**கடல் சார் சட்டங்கள்**

- சட்டப்பிரிவானது கடல் சார்ந்த விடயங்கள் பற்றிய பேச்சுவார்த்தைகளில் முனைப்பாக பங்கேற்றுள்ளது. ஐ.நா வின் ஆழமற்ற கடற்பரப்பு பற்றிய விடயங்களில் ஆர்வம் காட்டியுள்ளது. சட்டப்பிரிவானது நாடுகளுக்கிடையிலான ஆழமற்ற கடற்பரப்பு ஆணைக்குழு கூட்டத்தில் பங்கேற்றது. இவ்வருடம் நியுயோர்க்கில் இடம்பெற்ற 1982ற்கான ஐ.நா கடற் சட்ட பேரவையில் கைச்சாத்திடப்பட்டு 30ம் ஆண்டு பூர்த்தி விழாவில், சட்டப்பிரிவானது பங்கேற்றது.

- தற்போது சட்டப்பிரிவானது, தேசிய கடல் விவகாரக் குழுவினுடன் இணைந்து வாய்மொழி முறையீடு ஒன்றினை ஆணை குழுவிடம் 2025ம் ஆண்டு சமர்ப்பிக்க இறுதிகட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

- இவ்விருடத்தில் இலங்கைத் துறைமுகங்களுக்கு போர்க்கப்பல்களை அனுமதிப்பது தொடர்பாக இப்பிரிவானது ரஷ்யக் கூட்டவையுடன் கூட்டிணைந்து செயற்பட்டு பேச்சுவார்த்தைகளையும் நடத்தியுள்ளது.

**வணிகமும் வர்த்தகமும்**

- இப்பிரிவானது வணிகமும் வர்த்தகமும் பற்றிய துறைகளில் வர்த்தக பிரிவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இது இரு தரப்பு மற்றும் பல்தரப்பு ஒப்பந்தங்கள் செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

- 2014ம் ஆண்டு தொடக்கம் GSP+ அனுகூலங்களை பெறும் நோக்கில் சட்டப்பிரிவானது இவ்வருடம் அதன் விண்ணப்பத்திற்கான ஏற்பாடுகளை செய்து வருகிறது.

**நீதித்துறை ஒத்துழைப்பும் நாடு கடத்தலும்**

- இவ் வருடத்தில் நீதித்துறை ஒத்துழைப்புக்கும் நாடு கடத்தல்களையும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான பல உடன்படிக்கைகள் பேசித்தீர்மானிக்கப்பட்டன.

- இப் பேச்சுவார்த்தைகள் நீதி அமைச்சுடனும் சட்டமா அதிபர் அலுவலகத்துடனும் நடைபெற்றன.

- நாடு கடத்தல்கள் மற்றும் பரஸ்பர சட்ட உதவிகளுக்கான அனைத்து விண்ணப்பங்களும் அமைச்சின் சட்டப்பிரிவினூடாகவே மேற்கொள்ளப்பட்டன.

- சட்டப்பிரிவானது இதைத்தவிர வெளிநாடுகளுக்கானதும் இலங்கைக்கானதுமான அழைப்பாணை சேவையினை நீதி அமைச்சின் உதவியுடன் சட்டப்பிரிவினூடாக மேற்பார்வை செய்து சட்டப்பிரிவு நடைமுறைப்படுத்துகிறது.

**ஐக்கிய நாடுகள் சபை**

- சட்டப்பிரிவானது அமைச்சுக்கிடையிலான குழுக்களின் அங்கத்துவம் பெற்றுள்ளதால் ஐநா பாதுகாப்பு சபையின் இல 1267 இல 1373 உடன்படிக்கை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு நடவடிக்கையை மேற்கொண்டது. இவ்வருடப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தலில் சேர்க்கவும் செயற்பட்டது. பயங்கர வாதத்திற்கான நிதியினை மட்டுப்படுத்தும், சட்டத்தில் மாற்றங்களை செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொண்டது. இதை நிதி சம்பந்தமான நடவடிக்கை செயலணிப்பிரிவின் (FATF) தேவைகளுக்கு இசைவாக செய்து முடித்தது.

- UNGA ன் 6வது குழுவிற்கு 68வது UNGA அமர்வுகளுக்கான நாட்டின் நிலமை பற்றிய குறுஞ்செய்தி அறிக்கைகளை தயாரிப்பதில் சட்டப்பிரிவு பெரும் பங்காற்றியது.

## <u>தேசிய IHL குழு</u>

ஏனைய அமைச்சுக்களினூடாக IHL இன் செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கு அமைச்சின் சட்டப் பிரிவானது ஒரு குவிமையமாகத் திகழ்கின்றது. சட்டப்பிரிவின் உதவியுடன் ICRC யினால் கொழும்பில் முதன் முதலாக மனித நேயச் சட்டங்கள் என்ற தலைப்பில் நடைபெற்ற 12 ஆவது தெற்காசிய கல்வியூட்டல் அமர்வில் அதிகளவான அலுவலர்கள் கலந்துகொண்டனர். பிராந்திய ரீதியிலான ஒரு பயிற்சி நிகழ்வாக அமைந்த இதில் SAARC நாடுகளிலிருந்தும் அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர்.

## <u>வைப்பு ஒப்பந்தங்கள்</u>

இலங்கை அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்படும் அனைத்து ஒப்பந்தங்களும் அதன் பாதுகாப்பாளராக செயற்படும் சட்டப்பிரிவினால் உடனடி இலத்திரனியல் தரவுகளாக மாற்றம் செய்யப்பட்டு பேணப்படுகின்றது

1986ம் ஆண்டு வரையில் இலங்கை அரசினால் கைச்சாத்திடப்பட்ட அனைத்து உடன்படிக்கைகளையும் இலத்திரனியல் தரவுகளாக பதிவு செய்து, மூலப்பிரதிகளை தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்கு பாதுகாத்து பேணுவதன் பொருட்டு கையளிப்பதற்கான தீர்மானம் ஒன்று செய்யப்பட்டது.

**பின்வரும் பட்டியலானது இவ்வருடம் இலங்கை மற்றய நாடுகளுடனும் முகவர்களுடனும் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் விபரமாகும். இப்பட்டியல் சட்டப்பிரிவினால் தயாரிக்கப்பட்டது.**

| கைச்சாத்திட்ட இடம் | கைச்சாத்திட்ட திகதி | தரப்பு | தலைப்பு | பிரிவு | அமைப்பு | அடுத்த அரசுத் தரப்பு |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கை முதலீட்டுச் சபைக்கும், கட்டார் ஹோல்டிங் LLC க்குமிடையிலான முதலீடு மற்றும் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் | முதலீட்டுக் கூட்டிணைப்பு | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | கட்டார் அரசுக்கும், இலங்கைக்குமிடையிலான வான் சேவைகள் உடன்படிக்கை | விமான சேவை | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும், கட்டார் அரசு அரசாங்கத்துக்குமிடையிலான கலாச்சார ஒத்துழைப்பு உடன்படிக்கை | கலாச்சாரம் | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும். கட்டார் அரசு அரசாங்கத்துக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை | பொருளாதார வர்த்தக மற்றும் தொழில்நுட்ப | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கைக்கும், கட்டாருக்குமிடையிலான கல்வி, உயர்கல்வி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சி ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் | கல்வி | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், கட்டார் அரசு அரசாங்கத்துக் குமிடையிலான உயர்மட்ட இணைந்த குழுவைத் தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் | உயர்மட்ட இணைப்புக் குழு | | கட்டார் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், கட்டார் அரசாங்கத்துக்குமிடையில் சட்டத்துறைஒத்துழைப்புக்கான உடன்படிக்கை | சட்டத் துறை | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கையின் BOI மற்றும் கட்டார் அசையாச் சொத்து முதலீட்டுக் கம்பனிக்குமிடையிலான அசையாச்சொத்து முதலீட்டு ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் | அரச அசையாச் சொத்து | | கட்டார் |
| கொழும்பு | 15 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், கட்டார் அரசாங்கத்துக்குமிடையிலான உல்லாசப் பயண ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் | சுற்றுலாத் துறை | | கட்டார் |
| கொழும்பு | 17 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், இந்தியக் குடியரசு அரசாங்கத்துக் குமிடையிலான விவசாயத்துறை ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் | விவசாயம் | | இந்தியா |
| கொழும்பு | 17 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், இந்திய அரசாங்கத்துக்குமிடையிலான இலங்கையின் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 49,000 வீடமைப்பு அலகுகளுக்கான கொடை உதவியை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் | பொருளாதார அபிவிருத்தி | | இந்தியா |
| கொழும்பு | 17 சன 12 | இருதரப்பு | இலங்கைத் தொலைத்தொடர்புகள் பிரமாணப்படுத்தல் ஆணைக்குழுவுக்கும் (TRCSL) இந்திய தொலைத்தொடர்புகள் பிரமாணப்படுத்தல் அதிகார சபைக்குமிடையிலான (TRAI) புரிந்துணர்வு ஒப்பந்தம் | தொலைத் தொடர்பு | | இந்தியா |
| நிவ்யோர்க் | 19 சன 12 | இருதரப்பு | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மாலி குடியரசுக்குமிடையில் இராஜதந்திர உறவுகளைத் தாபிப்பது குறித்த கூட்டறிக்கை | இராஜதந்திர உறவுகள் | | மாலி |
| கொழும்பு | 26 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும் இந்தோனேசியக் குடியரசு அரசாங்கத் துக்குமிடையிலான கலாசார ஒத்துழைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் | கலாச்சாரக் கூட்டுறவு | | இந்தோனேசி யா |
| கொழும்பு | 26 சன 12 | இருதரப்பு | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் வெளிநாட்டலுவல்கள் | கல்வி (இராஜதந்திர கற்கைக்கான பயிற்சி) | | இந்தோனேசி யா |
| கொழும்பு | 26 சன 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், இந்தோனேசியக் குடியரசுக்குமிடையிலான இருதரப்பு ஒத்துழைப்புக்கான இணைந்த ஆணைக்குழுவின் முதலாவது கூட்ட நடப்பறிக்கை அங்கீகாரம் | இணைந்த ஆணைக்குழு | | இந்தோனேசி யா |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பிரேஸவில்ல | 01 பெப் 12 | இருதரப்பு | இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும், கொங்கோ குடியரசுக்குமிடையிலான இராஜதந்திர உறவுகளைத் தாபிப்பதற்கான உடன்படிக்கை | இராஜதந்திர உறவுகள் | | கொங்கோ |
| இஸ்லாமாபாத் | 11 பெப் 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் அரசாங்கத்துக்குமிடையிலான 200 மில்லியன் US $ கடன் சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | பணப்பறிமாற்றம் | | பாகிஸ்தான் |
| பாகிஸ்தான் | 11 பெப் 12 | இருதரப்பு | பாகிஸ்தான் தேசிய வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி ஆணைக்குழுவுக்கும், இலங்கை மூன்றாம் நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழுவுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | கல்வி | | பாகிஸ்தான் |
| இஸ்லாமாபாத் | 11 பெப் 12 | இருதரப்பு | இலங்கை வெகுஜன ஊடக மற்றும் தகவல் அமைச்சுக்கும், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சுக்குமிடையிலான ஊடகத்துறை ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஊடகம் | | பாகிஸ்தான் |
| சிங்கப்பூர் | 15 பெப் 12 | இருதரப்பு | இலங்கை முதலீட்டுச் சபையின் (1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க முதலீட்டு ஊக்குவிப்புச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட) முதலீட்டு ஊக்குவிப்பு முகவர் நிலையத்துக்கும், (2001 ஆம் ஆண்டின் சிங்கப்பூர் வியாபரத்தொழில் சம்மேளனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட) சிங்கப்பூர் வியாபாரத் தொழில் சம்மேளனத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | BOI | | சிங்கப்பூர் |
| மொஸ்கோ | 26 மார்ச் 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், ரஷ்யக் கூட்டவைக்குமிடையிலான வான் சேவைகள் உடன்படிக்கை | விமான சேவை | | ரஷ்ய சம்மேளனம் |
| கொழும்பு | 16 ஏப் 12 | இருதரப்பு | இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்துக் கொள்ளுதல் மற்றும் வருமான வரி குறித்த அரசிறை தட்டிக்கழித்தலைத் தடுப்பதற்கான இலங்கைக்கும் பலஸ்தீன அரசுக்குமிடையிலான உடன்படிக்கை | | | பலஸ்தீனம் |
| கொழும்பு | 16 ஏப் 12 | இருதரப்பு | இலங்கைக்கும், பலஸ்தீன அரசுக்குமிடையிலான அரசியல் கலந்தாலோசனைகள் சம்பந்தமான மரபு விதி | அரசியல் ஆலோசனைகள் | | பலஸ்தீனம் |
| சீயோல் | 24 ஏப் 12 | இருதரப்பு | இலங்கை வலு, சக்தி அமைச்சுக்கும், கொரியக் குடியரசின் அறிவுப் பொருளாதார அமைச்சுக்குமிடையிலான மின்வலுப் | சக்தியும் வலுவும் | | கொரியா குடியரசு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | பங்குடைமை சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | | | |
| சீயோல் | 24 ஏப் 12 | இருதரப்பு | இலங்கை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சுக்கும், கொரியக் குடியரசின் பேருபாய மற்றும் நிதி அமைச்சுக்குமிடையிலான பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் | | கொரியா குடியரசு |
| சீயோல் | 24 ஏப் 12 | இருதரப்பு | இலங்கைத் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சுக்கும், (MOTIT), கொரியக் குடியரசின் பொதுநிர்வாக மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்குமிடையிலான (MOPAS) தகவல் துறை ஒத்துழைப்புச் சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | தகவல் | | கொரியா குடியரசு |
| கொழும்பு | 03 மே 12 | இருதரப்பு | வான் சேவைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கும், அவுஸ்திரேலிய அரசாங்கத்துக்குமிடையிலான உடன்படிக்கை | விமான சேவை | | அவுஸ்திரேலியா |
| குவைட் | 10 மே 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், குவைத் அரசு அரசாங்கத்துக்குமிடையிலான தொழில், ஆட்சேர்ப்பு மற்றும் மனிதவள அபிவிருத்தி சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | பணியாளர் | | குவைத் |
| டோகா | 22 மே 12 | இருதரப்பு | பரஸ்பர முதலீடுகள் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக இலங்கைக்கும் கட்டார் அரசு அரசாங்கத்துக்குமிடையிலான உடன்படிக்கை | முதலீடுகள் ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு | | கட்டார் |
| அஸ்டானா | 24 மே 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கும், கஸாக்கிஸ்தான் குடியரசின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்குமி டையிலான இருதரப்புக் கலந்தாலோசனைகள் சம்பந்தமான உடன்படிக்கை | இருதரப்பு ஆலோசனைகள் | | கஸாக்கிஸ்தான் |
| பாங்கொக் | 30 மே 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், தாய்லாந்து ராஜ்யத்தின் அரசாங்கத்துக்குமிடையிலான குற்றவியல் விடயங்களில் இருதரப்பு சட்ட உதவியை உறுதிப்படுத்தும் சாதனங்கள் தொடர்பான உடன்படிக்கை | குற்றவியல் விடயங்கள் தொடர்பான பரஸ்பர சட்ட உதவி | | தாய்லாந்து |
| பாங்கொக் | 30 மே 12 | இருதரப்பு | இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கும், தாய்லாந்து ராஜ்யத்தின் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்குமிடையிலான இருதரப்பு அரசியல் கலந்தாலோசனைகள் சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | அரசியல் ஆலோசனை | | தாய்லாந்து |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பீஜீங் | 4 ஜுன் 12 | இருதரப்பு | இலங்கையில் சீன கலாசார நிலையமொன்றை நிறுவுவது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும், மக்கள் சீனக் குடியரசுக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | கலாச்சார நிலையம் | | மக்கள் சீனக் குடியரசு |
| ரோம் | 07 ஜுன் 12 | இருதரப்பு | இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துக்கும், சான் மரீனோ குடியரசுக்குமிடையிலான உடன்ப டிக்கை | இராஜதந்திர உறவுகள் | | சான் மரீனோ |
| புடபெஸ்ட் | 11 ஜுன் 12 | இருதரப்பு | இலங்கைக்கும், ஹங்கேரிக்குமிடையில் கலந்தாலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்பு | | ஹங்கேரி |
| ஹவானா | 18 ஜுன் 12 | இருதரப்பு | இலங்கை தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சுக்கும், கியூபா குடியரசின் விவசாய அமைச்சுக்குமிடையிலான தெங்குக் கைத்தொழில் அபிவிருத்தி ஒத்துழைப்பு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | தேங்காய் | | கியூபா |
| கொழும்பு | 26 ஜுன் 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், சிலி குடியரசு அரசாங்கத்துக்கு மிடையிலான இராஜதந்திர மற்றும் உத்தியோகபூர்வ / சேவை கடவுச்சீட்டுகளை வைத்திருப்போருக்கு விசா தேவைப்பாடுகளிலிருந்து விதிவிலக்கு சம்பந்தமான உடன்படிக்கை | விசா | | சிலி |
| ஹனோய் | 17 யூலை 12 | இருதரப்பு | இலங்கைக்கும், வியட்நாமுக்குமிடையிலான வான் சேவைகள் உடன்படிக்கை | விமான சேவை | | வியட்நாம் |
| ஹனோய் | 17 யூலை 12 | இருதரப்பு | பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு சம்பந்தமான இலங்கை மற்றும் வியட்நாம் இணைந்த ஆணைக்குழுவின் மூன்றாவது கூட்ட நடப்பறிக்கை சம்பந்தமான அங்கீகாரம் | இணைந்த பொது பொருளாதார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு | | வியட்நாம் |
| கொழும்பு | 10 ஓக 12 | இருதரப்பு | இலங்கை LKIIRSS அமைப்புக்கும், போலந்து குடியரசின் போலிஷ் சர்வதேச விவகாரங்களுக்கான நிறுவகத்துக்குமிடையிலான (PIMS) புரிந்துணர்வு ஒப்பந்தம் | | | போலந்து |
| கொழும்பு | 14 ஓக 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், சுவாஸிலாந்து ராஜ்யத்தின் அரசாங்கத்துக்குமிடையிலான பொருளாதார, வணிக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான உடன்படிக்கை | பொருளாதார, வணிக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு | | சுவாஸிலாந்து |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 21 ஓக 12 | இருதரப்பு | இலங்கை கல்வி அமைச்சுக்கும், சீஷெல்ஸ் குடியரசு கல்வி அமைச்சுக்குக்குமிடையிலான கல்வி மற்றும் பயிற்சி சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | கல்வி மற்றும் பயிற்சி | | சீஷெல்ஸ் |
| கொழும்பு | 21 ஓக 12 | இருதரப்பு | இலங்கை சுகாதார அமைச்சுக்கும், சீஷெல்ஸ் குடியரசின் சுகாதார அமைச்சுக்குமிடையிலான சுகாதாரத் துறையில் ஒத்துழைப்பு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | சுகாதாரம் | | சீஷெல்ஸ் |
| கொழும்பு | 21 ஓக 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், சீஷெல்ஸ் குடியரசின் அரசாங்கத்துக் குமிடையில் சட்டவிவகாரங்களில் தொழில் ஒத்துழைப்பு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | பணியாளர் | | சீஷெல்ஸ் |
| கொழும்பு | 21 ஓக 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், சீஷெல்ஸ் குடியரசின் அரசாங்கத்துக் குமிடையில் சீஷெல்ஸ் நாட்டில் இலங்கைத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் சம்பந்தமான உடன்படிக்கை | பணியாளர்/ மனித வலு | | சீஷெல்ஸ் |
| ரியோ டீ ஜெனீரோ | 09 ஏப் 12 | இருதரப்பு | இலங்கை வர்த்தகப் பேரவைக்கும் பிரேஸில் ரியோ டீ ஜெனைரோ வெளிநாட்டு வர்த்தகப் பேரவைகள் சம்மேளனத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் | வர்த்தகம் | | பிரேஸில் |
| கொழும்பு | 17 செப் 12 | இருதரப்பு | இலங்கை பாதுகாப்பு மற்றும் நகர்ப்புற அபிவிருத்தி அமைச்சுக்கும், மக்கள் சீனக் குடியரசின் அரச சமுத்திரவியல் நிர்வாகத்துக்கு மிடையிலான கரையோர மற்றும் கடல்நீரியல் ஒத்துழைப்பு சம்பந்தமான புரிந்துணர்வு ஒப்பந்தம் | புகையிரத சேவை | | மக்கள் சீனக் குடியரசு |
| கொழும்பு | 17 செப் 12 | இருதரப்பு | இலங்கை போக்குவரத்து அமைச்சு (MOT) மற்றும் இலங்கை புகையிரத சேவை (SIR)க்கும், மக்கள் சீனக் குடியரசின் டொங்பாங் எலெக்ட்ரிக் இன்டர்நாஷனல் கோர்ப்பரேஷனுக்குமிடையிலான வெயாங்கொடை – களுத்துறை தெற்கு ரயில்வே மின்சாரமயப்படுத்தல் கருத்திட்டம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (PROJECT) | கரையோர மற்றும் கப்பல் கூட்டுறவு | | மக்கள் சீனக் குடியரசு |
| கொழும்பு | 17 செப் 12 | இருதரப்பு | இராஜ தந்திர சேவையில் உள்ளவர்களது உத்தியோகபூர்வக் கடவுச்சீட்டுக்கள் மற்றும் பொது விவகாரங்களுக்கான கடவுசீட்டுக்களை வைத்துள்ளவர்களது விசாக்களை புரிந்துணர்வு அடிப்படையில் நீடித்தல் தொடர்பான இலங்கை | விசா | | மக்கள் சீனக் குடியரசு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | ஜனநாயகக் குடியரசிற்க்கும் மக்கள் சீனக் குடியரசுக்குமிடையிலான உடன்படிக்கை. | | | |
| புருசெஷல்ஸ் | 27 செப 12 | இருதரப்பு | இலங்கை அரசாங்கத்துக்கும், ஐரோப்பிய ஒன்றியத்துக்குமிடையிலான வான் சேவைகளின் சில அம்சங்கள் சம்பந்தமான உடன்படிக்கை | விமான சேவை | | பிரசெல்ஸ் |
| நிவ்யோர்க் | 28 செப் 12 | இருதரப்பு | குறுகிய காலம் தங்குவதற்கான விசாவை வலியுறுத்தாது விட்டுவிடுதல் சம்பந்தமாக சீஷெல்ஸ் குடியரசுக்கும், இலங்கை அரசாங்கத்துக் குமிடையிலான உடன்படிக்கை | விசா | | சீஷெல்ஸ் |
| புருசெஷல்ஸ் | 01 ஒக் 12 | பல்தரப்பு | விமான சேவைகள் தொடர்பாக இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்குமிடையிலான உடன்படிக்கை | விமான சேவை | | ஐரோப்பிய ஒன்றியம் |
| கொழும்பு | 31 ஒக் 12 | பல்தரப்பு | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வெளிவிவகார அமைச்சிற்கும் ஓமான் வெளிவிவகார அமைச்சிற்கும் இடையில் இருதரப்பு ஆலோசனைகள் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை | பல்தரப்பு ஆலோசனை | | ஓமான் |
| கொழும்பு | 13 நவம் 12 | பல்தரப்பு | இலங்கைக்கும் உகன்டாவுக்குமிடையிலான கலாச்சாரக் கூட்டுறவு தொடர்பான உடன்படிக்கை | கலாச்சாரம் | | உகான்டா |
| கொழும்பு | 13 நவம் 12 | இருதரப்பு | இலங்கைக்கும் உகான்டாவிற்குமிடையிலான பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான உடன்படிக்கை. | பொருளாதார, வர்த்தக மற்றும் தொழில்நுட்ப கூட்டினைப்பு | | உகான்டா |
| கொழும்பு | 13 நவம் 12 | இருதரப்பு | இருதரப்பு அரசியல் ஆலோசனை தொடர்பான இலங்கைக்கும் உகன்டாவிற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை | அரசியல் ஆலோசனை | | உகான்டா |
| கொழும்பு | 13 நவம் 12 | இருதரப்பு | சுற்றுலாத்துறைக் கூட்டினைப்பு தொடர்பான இலங்கைக்கும் உகன்டாவிற்குமிடையிலான உடன்படிக்கை. | சுற்றுலாத்துறைக் கூட்டினைப்பு | | உகன்டா |
| புதுடில்லி | 15 நவம் 12 | பல்தரப்பு | இலங்கைக்கும் பர்கினா பஸோவிற்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை ஸ்தாபிப்பதற்கான உடன்படிக்கை. | இராஜதந்திர உறவுகள் | | புர்கினா பஸோ |
| நிவ்யோர்க் | 16 நவம் 12 | பல்தரப்பு | இலங்கைக்கும் சூரினாமாவிற்குமிடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பிரகடனம் | இராஜதந்திர உறவுகள் | | சூரிநாம் |
| அஸ்பானா | 20 நவ 12 | இருதரப்பு | சுற்றுலாத்துறைக் கூட்டிணைப்பு தொடர்பாக இலங்கைக்கும் கஸகஸ்தானுக்குமிடையில் நடைபெற்ற உடன்படிக்கை | சுற்றுலாத்துறை | | கஸகஸ்தான் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 10 டிச 12 | இருதரப்பு | எல்சல்டேன் குடியரசு அரசாங்கத்துடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவது தொடர்பான கூட்டுப் பிரகடனம் | கூட்டுபிரகடனம் | | எப்சல்வடோர் |
| நிவ்யோர்க் | 14 டிச 12 | இருதரப்பு | இலங்கைக்கும் ஹெய்டி நாட்டிற்குமிடையில் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பிரகடனம் | இராஜதந்திர உறவுகள் | | ஹெய்டி |
| நிவ்யோர்க் | 19 டிச 12 | இருதரப்பு | இலங்கைக்கும் கனாடாவிற்குமிடையிலான இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பிரகடனம் | இராஜதந்திர உறவுகள் | | கனடா |
| நிவ்யோர்க் | 21 டிச 12 | இருதரப்பு | இலங்கைக்கும் மொரிடானியாவிற்குமிடையில் இராதந்திர உறவுகளை ஏற்படுத்துவதற்கான கூட்டுப் பிரகடனம் | இராஜதந்திர உறவுகள் | | மொரிடானியா |

# கடல் கடந்த நிர்வாகப் பிரிவு (OAD)

**<u>கடல் கடந்த நிர்வாகப் பிரிவு (OAD)</u>**

வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதுவராலயங்கள் 64 இல் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அதன் ஆளணியையும் மேற்பார்வை செய்து, அந்த தூதுவரலாயங்களின் முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் செய்து வருகின்றது.இலங்கை வெளிநாட்டுச் சேவையிற்கு ஆட்சேர்ப்பதற்குரிய திறந்த போட்டிப் பரீட்சைகளை நடாத்துதல்,வெளிநாட்டு தூதுவராலயங்களில் பணியாற்றுவதற்காக அரச முகாமைத்துவ உதவியாளர்கள், அந்தரங்க உதவியாளர்கள் ஆட்சேர்த்தல் மற்றும் வெளிநாட்டு தூதுவரலயங்களை புதிதாக உருவாக்குதல் தொடர்பான பொறுப்பு கடல் கடந்த நிர்வாகப் பிரிவிற்கு பொறுப்பாகவுள்ளது.

**இலங்கையின் வெளிநாட்டு சேவைக்கான ஆட்சேர்ப்பு**

- 2011 இல் நடந்த பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க 2012 சனவரி மாதத்தில் இலங்கையின் வெளிநாட்டு சேவையின் தரம் IIIஇற்கு 14 பேர்களைக் கொண்ட குழுவொன்று சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.இந்த புதிய உத்தியோகத்தர்களுக்காக பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்தில் பரந்தளவில் பயிற்சி நிகழ்ச்சிட்டம் மற்றும் மேலும் பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதன் மூலம் குறித்த நிர்வாக நடவடிக்கைகளுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இவர்கள் தற்போது அமைச்சினது பல்வேறு பிரிவுகளுக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

- இலங்கையின் வெளிநாட்டு சேவைக்கு அலுவலர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் பரீட்சை 2012 ஆம் ஆண்டு மே/ஜீன் மாதங்களில் இலங்கை பரீட்சை திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்பட்டது. மேற்குறிப்பிட்ட எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க, பரீட்சையை சித்தியெய்திய 64 அபேட்சகர்களுக்காக 2013 மார்ச் 07,09 ஆந் திகதிகளில் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டது.

- பரீட்சை திணைக்களத்துடன் கலந்துரையாடியதன் பின்னர், 2012 ஆம் ஆண்டு பெப்ருவரி மற்றும் மார்ச் மாதங்களில் வினைத்திறன் காண் தடைப் பரீட்சைநடாத்தப்பட்டது.அதன் பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அடுத்த வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2013 நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தூதுவராலயங்களுக்கான தலைவர்களை நியமித்தல்**

- 2012 ஆம் ஆண்டில் 14 தூதரகத் தலைவர்கள் நியமிக்கப்பட்டனர்.நேரடி அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள்மற்றும் தனியார் நிறுவனங்களினது ஒத்துழைப்பின் பேரில் பயிற்சியும் பலநிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு அதன் மூலம் தூதரகத் தலைவர்களாக பெயரிடப்பட்டு இருக்கின்ற இந்த உத்தியோகத்தர்களுக்கு பரந்தளவிலான பயிற்சி மற்றும் அனுபவத்தினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

**இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகளின் இடமாற்றம்**

இலங்கை வெளிநாட்டு சேவையின் 19 அதிகாரிகள் அமைச்சிலிருந்து தூதரகங்களுக்கும், தூதரகங்களிலிருந்து அமைச்சுகளுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். இந்த காலப்பகுதிக்குள் ஒப்பந்த அடிப்படையில் இராசதந்திர தரத்தில் வெளிநாட்டு தூதரகங்களில் பணிபுரிவதற்காக அமைச்சரவையினால் மேலும் 10 பேர்கள் நியமிக்கப்பட்டனர். நியமனம் பெற்றவர்களுக்கான கடமை விடயங்களையும், தங்குமிட, பிரயாண தேவைகளுக்கான வசதிகளையும் கடல் கடந்த நிர்வாகப் பிரிவு செய்து கொடுத்தது.

**அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் மற்றும்அந்தரங்க உதவியளர்களைதேர்ந்தெடுத்தல் மற்றும் இடமாற்றம்.**

- 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் (49) பேர் வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கை தூதரகங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

- வெளிநாடுகளில் அமைந்துள்ள இலங்கையின் தூதரகங்களில் இயலிடை அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளும் முகாமைத்துவ உதவியாளர் சேவையின் பதவியணியின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை 2012 நொவெம்பர் 17 மற்றும் 18 ஆந் திகதிகளில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டதுடன் அதிலிருந்து 50 அபேட்சகர்கள் 50 தேரந்தெடுக்கப்பட்டனர்.

- தேர்ந்தெடுக்கப்பட்ட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் அலுவலர்கள் 50 பேருக்குரிய நேர்முகப் பரீட்சை 2013 மார்ச் 19 ஆந் திகதி நடாத்தப்பட்டதுடன் நியமிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- 2012 ஆம் ஆண்டில் நடைப்பெற்ற வரைறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் வெளிநாடுகளில் அமைந்துள்ள தூதுவராலயங்களில் வெற்றிடங்களுக்காக அந்தரங்க உதவியாளர்கள் இருபத்திரண்டு பேர் (22) தேரந்தெடுக்கப்பட்டனர்.

- வெளிநாடுகளில் அமைந்துள்ள பல்வேறு தூதுவராலயங்களுக்காக இயலிடை ஒப்பந்த அடிப்படையின் கீழ் முப்பத்து நான்கு (34) பேர் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டனர்.

**இலங்கை வெளிநாட்டு சேவை அதிகாரிகளுக்கான புலமைப் பரிசில்கள் /பயிற்சி வசதிகள்**

- அவுஸ்ரேலியா, இஸ்ரேல், மலேசியா, இந்தியா,வங்காளதேசம், ஐக்கிய அமெரிக்கா பெல்ஜியம், தாய்லாந்து, ஜேர்மனி, சீனா, நேபாளம், தென் கொரியா, மோல்ட்டா. உள்ளடங்கப்பட்ட நாடுகளில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு/செயலமர்வுகளுக்கு கலந்துகொள்வதற்காக கடல் கடந்த நிர்வாகப் பிரிவினால்,.வெ.சே.அலுவலர்கள் 16 பேருக்கு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இராசதந்திர அலுவலர்களின் தொழில்சார் அபிவிருத்தியினை மேம்படுத்தும் நோக்கில் இரு தரப்பு மற்றும் பல்தரப்பட்ட இராஜதந்திர நடவடிக்கைகள், சர்வதேச சட்டம், மனித உரிமைகள், பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சி,சர்வதேச வர்த்தகம் மற்றும் கலந்துரையாடல்கள் போன்ற பல்வேறு துறைகள் உள்ளடங்கும் வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டது.

- மேலும் அவுஸ்ரேலிய அபிவிருத்தி உதவி திட்டத்தின் கீழ், பட்டப்பின் படிப்பிற்காக 02 அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் அவுஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகம் மற்றும் மொனெஸ் பல்கலைக்கழகம் போன்ற பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதற்கு மேலதிகமாக, ஓர் உத்தியோகத்தருக்கு சிங்கப்பூரில் அரச முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பிற்கானகல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு லீ க்வான் யூ. அதிபுலமைப்பரிசில் பெற்றுள்ளார்.

**புதிய தூதுவராலயங்கள் அமைத்தல்**

பின்வரும் புதிய தூதரகங்கள் 2012ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

- இலங்கைத் தூதுவராலயம் /அங்காரா /துருக்கி
- இலங்கை உதவித் தூதர் அலுவலகம் / குவாங்சு /சீனா
- இலங்கை தூதுவராலயம் / பக்தாத் /ஈராக் (2012.02.07இல் மீள்திறக்கப்பட்டது)

**பின்வரும் தூரதகங்கள் திறப்பதற்காக இப்பிரிவானது நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.**

- இலங்கை தூதரகம் / அபுஜா/ நைஜீரியா
- இலங்கை தூதரகம் / மனாமா/ பஹ்ரேன்
- இலங்கை உதவித் தூதர் அலுவலகம் - மெல்பன்/அவுஸ்திரேலியா
- இலங்கை உதவித் தூதர் அலுவலகம் - மிலான்/இத்தாலி
- இலங்கை உதவித் தூதர் அலுவலகம் - தம்மாம்/சவுதி அரேபியா

**வெளிநாடுகளில் இலங்கை தூதரகங்களுக்கான கட்டிடங்களை அமைப்பதும் கொள்வனவு செய்வதும்**

கட்டிடங்களை கொள்வனவு செய்வதற்கும் அமைப்பதற்குமான நடவடிக்ககைகள் பின்வரும் இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

- இந்தியாவில் சென்னையில் இலங்கை பிரதி உயர்ஸ்தானிகர் அலுவலக கட்டிடம் மற்றும் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் கட்டமைத்தல் (கட்டமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது)
- இலண்டனில் இலங்கை உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினை கட்டமைத்தல் - (கட்டமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது)
- அவுஸ்ரேலியாகன்பராவில் உயர்ஸ்தானிகர் அலுவலக கட்டிடம் கட்டமைத்தல். (கட்டமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது)
- இந்தியாவின் புதுடில்லியில் இலங்கை உயர்ஸ்தானிகர் அலுவலகம், கடைநிலை ஊழியர்களின் தங்குமிடங்கள் அமைத்தல்.(கட்டமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது)
- நியூயோர்க் நகரில் தூதரகத்திற்கு சொத்தொன்றை கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. (கொள்வனவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது)
- ஓமான் மற்றும் வொஷிங்டன் டீ.சி தூதரகத்திற்கான சொத்துக்கள் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- வெளிநாட்டு விவகார அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடையே 20 வருடங்களுக்காக ரூபா. 25,497,600/- (ஓமான் றியால் 76,800) ஆன வருடாந்த வாடகையின் கீழ் வாடகை கொள்வனவு உடன்படிக்கையை மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த வாடகை கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் வெளிநாட்டு விவகார அமைச்சினால் வருடாந்தம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு செலுத்தப்படவேண்டியது ரூபா. 15,298,560/- (ஓமான் றியால் 48,080) மட்டுமே ஆனதுடன் ரூபா 10,149,040/- (ஓமான் றியால் 30,720) ஆன நிலுவைத் தொகை கட்டிடங்களை பயன்படுத்தியமைத் தொடர்பாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் செலுத்தவேண்டிய பகுதியாக கருதப்படும்.

**கட்டிடங்களின் மறு சீரமைப்பும் மூலதன சொத்துக்களை கையேற்றலும்**

- பல தூதரகங்களில் மறுசீரமைப்பு வேலைகளும் புதுப்பித்தல்களும் நடத்தப்பட்டிருக்கின்றன.
- வெளிநாட்டு தூதரகங்களுக்காக வாகனங்களை கொள்வனவு செய்தல்–23 வெளிநாட்டு தூதரகங்களுக்காக புதிய வாகனங்களை வழங்கப்பட்டுள்ளதுடன். 02 தூதரகங்களுக்காக வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்கியுள்ளன.(வொஷிங்டன் டீ.சியிற்காக (1) மற்றும் நிவ்யோர்க் இற்காக (1)

**வெளிநாட்டு பயணப் பிரிவின் நடவடிக்கைகள்**

அமைச்சரவை அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள்,மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், வேறு அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் பலருக்குஉத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணங்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு பயணப் பிரிவின் உதவி வழங்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் அமைப்பு, தென் ஆசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பு SAARC,IORARC, BIMSTECT, CHOGMமற்றும் போன்ற சர்வதேச அமைப்புகளில் சம்மேளனங்கள் மற்றும் கூட்டங்களுக்கு கலந்து கொள்வதற்காக செல்லும் இலங்கை தூதுக்குழுவினர்களுக்கு இப்பரிவினால் உதவிகளை வழங்குகின்றது.

# பொது நிர்வாகப் பிரிவு(GAD)

- ஆளணி முகாமைத்துவம், பாராளுமன்றக் கேள்விகள் அமைச்சரவை விஞ்ஞாபனம், சேவைகள், பண்டங்களின் வழங்கீடு மற்றும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள், கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் பராமரிப்புகள், கொள்முதல் தொழிற்பாடுகள், போக்குவரத்து நடவடிக்கைகள், தொடர்பாடல் வசதிகள் ஏற்படுத்துதல், ஊழியர் பயிற்சி நடவடிக்கைகள் மற்றும் அமைச்சுடன் தொடர்புபட்ட ஏனைய நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பு பொது நிர்வாகப் பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

- ஆளணி முகாமைத்துவம் தொடர்பாக பொது நிர்வாகப் பிரிவானது, வருடத்துக்குள் அமைச்சிற்குத் தேவைப்படும் பணியாட்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்பாடுகளை வழங்கியிருப்பதுடன், பதவியணியின் பல்வேறுபட்ட மட்டங்களுள்ள அங்கத்தவர்களினது திறமைகளை மேம்படுத்துவதற்காக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. பதவியணியில் ஆளணி பற்றாக்குறை காணப்படுவதால் பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு வசதிகளை வழங்குவதற்காக 50 அபிவிருத்தி அலுவலர் பதவிகள் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அரச சுற்றுநிருப இல 06/2006 இயைவாக சேவையிற்கு சேர்த்துக்கொள்ளும் ஒழுங்குமுறைகள் தயாரிப்பது தொடர்பாக கருதக்கூடிய வளர்ச்சி பெற்றுள்ளது. தேசிய வேதனங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவுடனும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடனும் கலந்தாலோசித்து அமைச்சின் ஆளணி பற்றிய மீளாய்வுகளையும் செய்து, இறுதி முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான வசதிகள் இந்த பிரிவினால் ஏற்படுத்தியுள்ளது.

- 2012 ஆம் ஆண்டின் இப்பிரிவானது (GAD)அமைச்சின் குடியரசு கட்டிட வளாகத்தின் வெளிச்சுவர்களை பேணுகை, உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக இளைப்பாறும் மற்றும் கழிவறைகளை அமைத்தல போன்ற பாரிய சீர்திருத்தும் பணிகளை மேற்கொண்டது. இதற்கு மேலதிகமாக கௌரவ .அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினை புதுப்பித்தல், வரவேற்பறை முற்சீரமைப்பு, புதிதாக செங்கம்பளம் மாற்றீட்டுச் செய்தல் மற்றும் ஏனைய புனர்நிர்மாணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதற்காக ஏற்பட்ட மொத்த செலவு ரூபா 38 மில்லியன்களாகும்.

- அமைச்சிற்கு வழமையாக வழங்கும் வசதிகளைத் தவிர (GAD), குறித்த சேவை வசதிகள் மற்றும் உபகரண கொள்முதல் மூலம்,பிரிவானது 2013இல் நடக்கவிருக்கும் பொதுநலவாய அரச அமைப்புத் தலைவர்களின கூட்டத்திற்கான ஒரு செயல்அணி படைப்பிரிவொன்றை ஸ்தாபிப்பதில் பெரும் பங்காற்றி உள்ளது 2012 தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் அநுராதபுரத்தில் அமைச்சின் பங்கெடுப்பானது அமைச்சின் சாதனைகளை வெளிக்கொணர்ந்தமை இப்பிரிவின் மற்றுமொரு செயற்திட்டமாகும்.

- வெளிநாட்டுத் தூதவர்கள், உயர் ஸ்தானிகர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு அறிமுகச் சான்றுஆவணங்களை வழங்கும் வைபவங்களுக்கும், அதி விஷேட பிரமுகர்கள், வேறு வெளிநாட்டு பிரதிநிதிகள் குழுக்களின் உத்தியோகபூர்வ பார்வையீடுகளுக்கும் தேவையானபோக்குவரத்து வசதிகள் மற்றும் வழங்கீடு ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவது தொடர்பான ஏற்பாடுகளை வழங்குதல் இந்த வருடத்துக்குள் பொது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டில் 05 அறிமுகச் சான்றுஆவணங்களை வழங்கும் வைபவங்கள் மற்றும் 15 உத்தியோகபூர்வ பார்வையீடுகள் உள்ளடங்களாக 101 காட்சியுலாக்கள் மற்றும் இலங்கையில் நடாத்தப்பட்ட சர்வதேச மாநாடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் பொது நிர்வாகப் பிரிவானல் மேற்கொண்டுள்ளது.

- அமைச்சின் வாகன தொகுதியினை மீள்நிரப்புவது தொடர்பாக பொது நிர்வாகப் பிரிவு அரச திறைசேரியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு இருப்பதுடன், வருடத்துக்குள் 22 புதிய வாகனங்கள் அமைச்சிற்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தது. பாவனை செய்த 11 வாகனங்களைதொகுதியிலிருந்துஅகற்றப்பட்டுள்ளதுடன்,அதன் மூலம் ரூ 7 மில்லியன் அரசின் வருமானத்திற்கு வரவு வைக்கமுடியுமாக இருந்தது.

- இப்பிரிவு 60 அமைச்சரவை குறிப்பின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொண்டும் 10 பாராளுமன்ற கேள்விகளுக்கு பதிலளித்தும் உள்ளது.

# நிதிப்பிரிவு

அமைச்சின் முகாமைத்துவம், அபிவிருத்தி நடவடிக்கைகள் திட்டமிடல் போன்றவற்றிற்கு மேலதிக சேவைகளை வழங்கும் பொறுப்பு, நிதிப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் அமைச்சின் பணம் கொடுக்கல் வாங்கல்களையும், கடல் கடந்த தூதரகங்களின் பணம் கொடுக்கல் வாங்கல்களையும் பற்றிய கணக்கு விபரங்களை நிருவகித்து பேணுவது மட்டுமல்லாது அது குறித்து பொது திறைசேரிக்கும் அறிக்கை செய்கிறது.

**செயற்பாடுகள்**

- அமைச்சின் செயலாளர் தலைமை கணக்காளர் ஆகையினும் தேவையான நிதி சம்பந்தப்பட்ட கடப்பாடுகளை பூர்த்தி செய்வதில் தன் உதவிகளை வழங்குகிறது.

- நிதி சம்பந்தமான அரச சட்டங்களும் விதிமுறைகளும் பின்பற்றப்படுவதை உறுதிசெய்கிறது.

- நிதி திட்டமிடலையும், வரவு செலவு திட்டத் தயாரிப்பையும் ஏற்றுக்கொள்கிறது.

- கணக்கீட்டு முறையினை, பண முகாமைத்துவம் அடங்கலாக ஸ்தாபித்துப் பேணுகிறது. காலக்கிரமமானதும் துல்லியமானதுமான நிதி அறிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்தல்.

- நிதி அறிக்கையினையும், வரவு செலவு திட்ட தேவைகளையும் தயாரிப்பதற்காகவும், மீளாய்வு செய்வதற்காகவும், புதுப்பித்தலுக்காகவும், முடிவு செய்வதற்காகவும் திறை சேரியுடனும் அமைச்சின் கீழ் வரும் ஏனைய முகவர்களுடனும், ஏனைய பிரிவுகளுடனும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

அமைச்சுக்கான 2012 நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்ட ஒதுக்கீடுகள் பின்வருமாறு.

1. ஒதுக்கீட்டுக்கெதிரான செலவு – 2012

அ. மீண்டெழும் செலவு

| விபரம் | மொத்த ஒதுக்கீடு ரூபா. | மொத்த செலவு ரூபா. | ஒதுக்கீட்டின் செலவு விகிதம் |
|---|---|---|---|
| தனிநபர் ஊதியம் | 4,119,298,620 | 4,105,974,257 | 100 |
| ஏனைய செலவுகள் | 3,210,796,330 | 3,199,425,865 | 100 |
| மொத்தம் | **7,330,094,950** | **7,305,400,122** | **100** |

ஆ.மூலதனம்

| குறியீடு | விபரம் | மொத்த ஒதுக்கீடு ரூபா. | மொத்த செலவு ரூபா. (31.12.2012 வரை) | ஒதுக்கீட்டின் செலவு விகிதம் |
|---|---|---|---|---|
| **முதல் சொத்தின் மறுசீரமைப்பும் திருத்தங்களும்** | | | | |
| 2001 | கட்டிடங்கள் | 111,200,000 | 70,232,650 | 63 |
| 2002 | இயந்திரங்கள் | 6,000,000 | 2,646,850 | 44 |
| 2003 | வாகனங்கள் | 21,361,200 | 20,134,080 | 94 |
| **முதல் சொத்தின் கையேற்றல்** | | | | |
| 2101 | வாகனங்கள் | 127,963,900 | 120,371,928 | 94 |
| 2102 | தளபாடங்கள் | 90,402,255 | 83,950,301 | 93 |
| 2103 | இயந்திரங்கள் | 18,597,745 | 13,596,178 | 73 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2104 | கட்டிடங்கள் | 825,000,000 | 680,668,807 | 83 |
| **மனிதவலு அபிவிருத்தி** | | | | |
| 2401 | அறிவை வளப்படுத்தலும்,நிறுவனங்களை விருத்தி செய்தலும் | 4,000,000 | 3,820,250 | 96 |
| **வேறு முதன்மை செலவுகள்** | | | | |
| 2502 | வெளிநாட்டு வர்த்தக, சுற்றுலா முன்னேற்றத்திற்காக வசதி ஏற்படுத்தல் | - | - | |
| மொத்தம் | **1,204,525,100** | **995,421,044** | **83** | |

2. உயர்கணக்குத் தொடர்பான வரையறுக்கப்பட்டஎல்லை மற்றும் உண்மைத் தொகை

| **விபரம்** | **அதிக பட்ச பற்று** | **குறைந்த பட்ச வரவு** | **அதிக பட்ச வரவுமீதி** |
|---|---|---|---|
| வரையறுக்கப்பட்ட எல்லை | 21,000,000 | 18,000,000 | 110,000,000 |
| உண்மைத் தொகை 31.12.2012 வரை – 1120011<br>உண்மைத் தொகை 31.12.2012 வரை - 1120012 | 17,878,927<br>8,098,294 | 24,715,933<br>8,907,940 | 94,760,576 |

# வெளிநாடுகளிலுள்ள இலங்கை இராசதந்திர தூதரகங்களின் வலையமைப்பு



# ஒழுங்கமைப்பு வரைபடம்
## வெளிவிவகார அமைச்சு

